367

புதுமைத் தமிழ் வாசகம்

முதற் படிவம்

பொதுப் பகுதி

ஆக்கியோன் :

வித்வான் V. மாணிக்கம்

G. GOPAUL PILLAI
PUBLISHERS
...PAKULAM | 2/27 BROADWAY
...CHIRAPALLI | G.T. MADRAS.

TB
031 (6)
N53
131486.

புதுமைத் தமிழ் வாசகம்

முதற் படிவம்—பொதுப் பகுதி

ஆக்கியோன் :

வித்வான் V. மாணிக்கம்

T. G. கோபால் பிள்ளை

பதிப்பாளர்

தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி

2/27, பிராட்வே
ஜி. டி., சென்னை

1953

[விலை ரூ. 0-12-0

பதிப்புரிமை]

முதற் பதிப்பு—அக்டோபர் 1953

7 03
031 (60)
N53

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
131486
சென்னை-600 008

Kabeer Printing Works, Madras (2345)

முன்னுரை

இவ்வாசக வரிசை துரைத்தனத்தாரால் 1952-ஆம் ஆண்டு புதியதாகத் திருத்தி அமைக்கப்பட்ட பாடத் திட்டத்திற்கிணங்க எழுதப்பட்டது. இவ்வரிசையில் இப் புத்தகம் முதற் படிவம் பொதுப் பகுதிக்கு உரியதாகும்.

இதனுள் அமைக்கப்பட்டுள்ள பாடங்கள் வகுப்புக்கு ஏற்றவையாய் உள்ளன. வகுப்பின் தகுதிக்கேற்ப மொழி நடை அமைக்கப்பட்டுள்ளது. பாடங்களில் கண்ட செய்திகள் மாணவர்க்கு உற்சாகம் தருமாறு வரையப்பட்டுள்ளன. எல்லா வகையிலும் இப்புத்தகம் இவ்வகுப்பு மாணவர்க்குப் பொருந்தியதாயிருக்குமென்று நம்புகிறேன்.

கல்வித்துறை சார்ந்தோர் இதனை ஆதரித்து என்னை ஊக்குவார்களென்று எண்ணுகின்றேன்.

ஆக்கியோன்

பொருளடக்கம்

உரைநடைப் பாடங்கள்

எண்	பொருள்		பக்கம்
1.	எவரெஸ்டு சிகரம்	...	1
2.	சீதக்காதி வள்ளல்	...	10
3.	ஆன்ரூர் அமுத மொழிகள்	...	17
4.	விக்கிரமாதித்தனும் வேதாளமும்	...	21
5.	புலவர் பெருமிதம்	...	28
6.	வினு விடை	...	35
7.	குடிசைத் தொழிலும் எந்திரத் தொழிலும்	...	41
8.	குடியானவனும் குட்டிப் [illegible]யும்	...	50
9.	பாலை நிலம்	...	55
10.	அழகுணர்ச்சி	...	62
11.	ஸர். ஸி. வி. ராமன்	...	68
12.	ஔவை தூது (நாடகம்)	...	76

செய்யுட் பாடங்கள்

எண்	பொருள்		பக்கம்
I வாழ்த்து			
	1. பரம்பொருள் வாழ்த்து	...	84
	2. தமிழ் வாழ்த்து	...	85
II நீதி			
	1. நன்னெறி	...	87
	2. நீதி வெண்பா	...	89
	3. திருவேங்கட சதகம்	...	90
	4. அறப்பளீசுர சதகம்	...	91
	5. குமரேச சதகம்	...	91
	6. திருக்குறள்	...	92
III காதை			
	புல்லின் சுய சரிதை	...	101
IV பிறவகை			
	பலதுறைப் பாடல்கள்	...	104

புதுமைத் தமிழ் வாசகம்

முதற் படிவம்—பொதுப் பகுதி

1. எவரெஸ்டு சிகரம்

குழந்தைகளே! குடியரசு இந்தியாவின் குடிமக்களாகிய நீங்கள் நம் நாட்டின் சிறப்புக்களைச் சிறு வயதிலேயே அறிந்துகொள்ள வேண்டாமா? சிறப்பு என்ருல் சாதாரணச் சிறப்பல்ல. உலகில் மற்றெந்த நாட்டிற்கும் இல்லாத தனிச் சிறப்புக்கள் அவை. நம் நாட்டிற்கே அவை பெருமை யளிப்பன. அவற்றை அறிவது உங்களுக்குப் பெருமகிழ்ச்சி தரும் அல்லவா?

உலகிலேயே அதிக அளவு மழையைப் பெறும் சிரபுஞ்சி நம் நாட்டில் அஸ்ஸாம் மாகாணத்தில்தான் உள்ளது. தோற்றத்தாலும், உயரத்தாலும் நம் நாட்டிற்குப் பெருமை யளிப்பது வானமளாவ வளர்ந்துள்ள இமயமலையின் எழில்மிக்க முடி எவரெஸ்டு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இந்த எவரெஸ்டு சிகரத்தைப் பற்றிய பல செய்திகளை இப்பாடத்திலிருந்து நீங்கள் அறியலாம்.

எவரெஸ்டு சிகரம் நம் நாட்டின் வடவெல்லையாக அமைந்துள்ள இமயமலையின்மீது கம்பீரமாக விளங்குகிறது. இமம் என்ருல் பனி என்பது பொருள். எனவே இமயமலை என்பது பனி மூடிய



பிரிட்டிஷ் கூட்டத்தார் எவரெஸ்டு ஏறிச்சென்ற பாதை

மலை என்று பொருள்படும். இம்மலை மீதுள்ள உன்னதமான சிகரமும் பனிமூடியதே என்பது சொல்லாமலே விளங்கும். இது உலகத்திலுள்ள சிகரங்களுள் எல்லாம் மிகவும் உயரமானது; சுமார் 29002 அடி உயரமுள்ளது. உலகின் பல்வேறு நாட்டினரிடையே தன்னைக் காணும் முயற்சியில் ஆர்வத்தை எழுப்பி, அவர்களுடைய திறமையைச் சோதித்துத் தோல்வியடையச் செய்தது. தன்னைக் கண்டுபிடிக்கும் பெருமையைத் தன் நாட்டவர்க்கே கொடுக்க வேண்டுமென்று கருதியது போல, அந்நிய நாட்டினரால் அடைய முடியாத அது, நேப்பாள வாசியான ஷெர்ப்பா டென்சிங்கு என்பவருக்குத் தன்னைக் காணும் பேற்றை அளித்தது. இவ்வரலாறுகளை இனிக் காணலாம்.

எவரெஸ்டு சிகரத்தைக் காண்பதில் உள்ள இடையூறுகள் என்னென்னவென்பதை அறிந்தால் அதன் பெருமை விளங்கும். சாதாரணமாகத் தரையில் பத்து மைல் நடப்பதனுல் உண்டாகும் வருத்தம் மலை மீது ஒரு மைல் ஏறுவதனுல் ஏற்படும். இமயமலை உயர்ந்த மலை; பனி மூடியது; செங்குத்தான சரிவுகளை யுடையது; பனிப்பாறைகளை யுடையது. அங்கு ஒழுங்கான பாதைகளைக் காண்பதரிது. சில சமயங்களில் பனிப்பாறைகள் சரிந்து மலைமீது ஏறுபவர்களைப் புதைத்துவிடும். கால்களின் அடியில் பனி, தலைக்குமேல் பனி மழை; சுற்றிலும் உடலெல்லாம் விறைத்துப் போகும்படியாக வீசும் குளிர்ந்த காற்று. இவ்வளவையும் பொறுத்துக்கொண்டு மலைமீது ஏற வேண்டும்.

இவ்வளவுதான் இன்னல்கள் என எண்ணிவிட வேண்டாம். மேலே செல்லச் செல்ல, வாயுவின்

நெருக்கம் குறைவு. பதினாயிரம் அடிகளுக்குமேல் மனிதன் சுவாசிப்பதற்குப் போதுமான காற்று இல்லை. அவ்விடங்களில் செல்பவருக்குத் தரையில் நடப்பவரைவிட அதிக அளவு சுவாசம் தேவை. எனவே மூச்சுவிட முடியாமல் தவிக்க நேரிடும்.

எவரெஸ்டு சிகரம் ஏறுதல்

உணவுப் பொருள்களை உடன் கொண்டு செல்லாவிட்டால் உயிர் வாழ முடியாது. இத்தனை இன்னல்களையும் பொருட்படுத்தாது இமயத்தின் மீதேறி எவரெஸ்டைக் கண்டுபிடிக்க எவ்வளவு துணிவு வேண்டும்? இம்முயற்சியில் ஈடுபடுபவரை நாம் வீரர் என்று பாராட்டுவதில் வியப்பொன்று மில்லையல்லவா?

இத்தகைய வீரர்கள் கோஷ்டி கோஷ்டியாகப் பல் வேறு நாடுகளிலிருந்தும் வந்து முயன்றனர். விஞ்ஞான முன்னேற்றம் அவர்களுக்குப் பெருந்துணை

செய்தது. பனி மூடிய சிறு மலைகளின்மீது ஏறிய பழக்கம் பேருதவி செய்தது. எனினும் நேற்றுவரை விஞ்ஞான வீரர்களை எல்லாம் வென்று நின்றது எவரெஸ்டு சிகரம். ஆனால் இன்றோ அதுவும் மனித சக்திக்கு முன் தலை குனிய வேண்டியதாய் விட்டது.

கி. பி. 1841-ல் எவரெஸ்டு சிகரத்தைப்பற்றி முதன் முதல் மேல் நாட்டினருக்கு அறிவித்தவர் ஸர் ஜார்ஜ் எவரெஸ்டு என்பவராவர். ஆனால் சிகரத் தைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் மனிதர் கூட்டம் முதலில் இறங்கியது கி. பி. 1921-ல் தான். அன்று முதல் இன்று வரை பன்னிரண்டு கோஷ்டியினர் முயன்றுள்ளனர். அவருள் இரு கூட்டத்தினர் சுவிட்ஸர்லந்து நாட்டைச் சேர்ந்தவர்கள். மற்றை யோர் ஆங்கிலேயக் கூட்டத்தினர்.

முதலில் சிகரம் ஏற முயன்றவர் ஜார்ஜ் லீ மலோரி என்பவர் ஆவர். அவரது முயற்சி 1921-ல் தொடங்கியது. அம்முயற்சியில் வெற்றி கிட்ட வில்லை. எனவே 1922, 1924 என்ற ஆண்டுகளில் மீண்டும் மீண்டும் முயன்றார். ஆயினும் அவர் வெற்றி பெறவில்லை. 28100 அடி உயரம் வரை சென்ற அவர் அங்கேயே உயிர்நீத்தார். பனிச்சரிவால் அவர் இறந் திருக்கலாம் எனப் பலர் கருதுகின்றனர். அவர் இறந்து ஒன்பது ஆண்டுகளுக்குப் பின் அவர் விட்டுச் சென்ற கோடரி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

1951-ஆம் ஆண்டுக்கு முன் முயன்றவரெல்லாம், வட புறத்திலிருந்து ஏற முயன்றனர். ஆனால் அவ் வாண்டில் முயற்சித்த எரிக் ஷிப்டன் என்பவர் அச் சிகரத்தின் தென் புறத்திலிருந்து ஏற முயன்றார். அவருக்கு அதில் வெற்றி கிட்டவில்லையாயினும், அம் முயற்சி நல்ல பயனைத் தந்தது. பின்வந்த இரு சுவிட்

ஸர்லந்து கோஷ்டியினர் தென்புறமாக ஏற முயன்றும் வெற்றி கண்டிலர். 1952-ல் சுவிட்ஸர்லந்து கூட்டத்தார் முயன்று 28290 அடி வரை சென்றனர். ஆனால் பருவக் காற்றின் கொடுமை அவர்கள் முயற்சியைக் கைவிடும்படி செய்தது.

இறுதியாக 1953-ஆம் ஆண்டில் எவரெஸ்டு சிகரத்தின் மீது படையெடுத்துச் சென்ற பிரிட்டிஷ் கோஷ்டியினர் அதனைக் கண்டு வெற்றி கொண்டனர். அக்குழுவினர் மார்ச்சு மாதம் பத்தாம் நாள் தம் முயற்சியைத் தொடங்கினர். அவர்களின் தலைவர் கர்னல் ஹண்ட் என்பவராவர். அவர் குழுவில் பன்னிரண்டு அங்கத்தினர்கள் இருந்தனர். ஷெர்ப்பா வழிகாட்டிகள் இருபது பேர் வழிகாட்டிச் சென்றனர். முந்நூற்றறுபத்திரண்டு பேர் சாமான்களைச் சுமந்து சென்றனர். உணவுப் பொருட்கள், கூடாரங்கள், பனியை வெட்டும் சாதனங்கள், பிராணவாயு முகமூடிகள், மற்றும் இயற்கையோடு போராடுதற்குரிய வேறுபல கருவிகள் ஆகியவற்றோடு அவர்கள் பிரயாணமாயினர். மேற்கூறியவற்றால், எவரெஸ்டு சிகரத்தைக் கண்டுபிடிப்பதில் எவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்பது விளங்குகிறதல்லவா ?

இவர்கள் 27800 அடி உயரத்தில் ஒரு கூடாரம் அமைத்துக்கொண்டு அங்கிருந்து உச்சியை யடைய முயன்றனர். பருவநிலை இவர்களுக்குச் சாதகமாயிருந்தது. மே மாதம் 29-ம் நாள் பகல் 11-30 மணிக்கு உலகம் அதுவரை அறியாத புதுமையைக் கேட்டது. குழுவினருள் இருவர் எவரெஸ்டின் உச்சியை யடைந்து பதினைந்து நிமிடங்கள் தங்கியிருந்து புகைப் படங்கள் பல பிடித்துக்கொண்டு திரும்பினர். இவ்விருவரில் ஒருவர் நேப்பாளவாசி

யான முன்னர்க் குறிப்பிட்ட ஷெர்ப்பா டென்சிங்கு என்பவராவர். மற்றொருவர் நியூஸீலந்து நாட்டைச் சேர்ந்த ஹிலோரி என்பவர்.

உலகமே கண்டு வியக்கும்படியான வெற்றி பெற்ற வீரர்களைப்பற்றி அறிய உங்களுக்கு ஆவல் இருக்கும் அல்லவா? எனவே அவர்களது வரலாற்றுச் சுருக்கத்தை இங்கே கூறுகிறேன்.

டென்சிங்குக்கு வயது முப்பத் தொன்பது. இவர் டார்ஜீலிங்கில் தமது குடும்பத்துடன் வசித்து வருபவர். இவருக்கு இரு பெண் மக்கள் உண்டு. சிறு வயதிலிருந்தே உயர்ந்த மலைகளின்மீது ஏறுவதில் இவர் மிகவும் ஆவல் கொண்டு பல முறை பயின்றவர். 1935-ஆம் ஆண்டில் வீட்டை விட்டு ஓடி, அவ்வாண்டில் எவரெஸ்டின் மீது ஏற முயன்ற குழுவினருடன் சேர்ந்து கொண்டார். பிறகு 1952-ல் 28290 அடி வரை ஏறினார். இவர் தம்முடைய திறமையால் **புலி மனிதன்** எனப் பொருள்படும் ' **டென்சிங்கு** ' எனப் பெயர் பெற்றார். உலக அரசாங்கங்கள் எல்லாம் இவரைப் பாராட்டின. இன்று இவர் பல்வேறு நாட்டினரின் அழைப்பிற் கிணங்கி அங்கெல்லாம் சென்று பாராட்டுதலைப் பெற்று வருகிறார்.

இவருடன் சென்ற மற்றொருவரான ஹிலோரிக்கு வயது 34. இவர் தமது இருபதாம் வயதிலேயே தாம் எவரெஸ்ட்டை வெல்லப் போவதாக சபதம் செய்தவர். இதன் பொருட்டு மலையேறுவதில் பயின்று வந்தார். 1951-ல் எவரெஸ்டை அடைய முயன்ற குழுவினருள் இவரும் ஒருவர்.

இவ்விருவரையும் நமது நாட்டு அரசாங்கமே முதன் முதல் கவுரவித்தது. நமது பிரதமர் நேரு, கல்வி மந்திரி ஆஸாத் ஆகியோரிடமிருந்து அவர்

களுக்குப் பாராட்டுத் தந்திகள் பறந்தன. நியூயார்க் டைம்ஸ் என்னும் பிரபல அமெரிக்கச் செய்தித்தாள் அவர்களைக் குறித்து, 'ஸர் வால்டர் ராலே, ஸர் பிரான்ஸிஸ் டிரேக் என்பவர்களைப் போல டென்சிங் கும் ஹிலோரியும் சரித்திரப் பிரசித்தி பெற்றனர்' என்று புகழ்ந்து எழுதியுள்ளது.

பாரத நாட்டு மக்களுள் ஒருவர்க்கு ஏற்பட்ட பெருமை நம்மனைவர்க்கும் உரியதன்றோ? இவரது முயற்சியைப் பின்பற்றி, இளம் வீரர்களாகிய நீங்கள் வருங்காலத்தில் பல வீரதீரச் செயல்களைச் செய்து தாய் நாட்டைப் பெருமைப் படுத்துவதுதான் உங்க ளுடைய சிறந்த கடமையாம்.

அரும்பதவுரை

பேறு - பாக்கியம், சிறப்பு, பெருமை ; இடையூறு - துன்பம், இன்னல் ; வியப்பு - ஆச்சரியம் ; கோஷ்டி - கூட்டம்; இறுதியாக - முடிவாக ; குழு - கூட்டம் ; பருவநிலை - காலநிலை ; சபதம் - உறுதிமொழி ; பயின்று - பழகி.

பயிற்சி வினாக்கள்

I 1. இந்தியாவின் தனிப் பெருமைகள் எவை?

2. எவரெஸ்டு சிகரம் எங்கேயுள்ளது? அதன் சிறப்புக்கள் எவை?

3. எவரெஸ்டைக் கண்டுபிடிப்பதில் உள்ள இன்னல்கள் எவை?

4. எவரெஸ்டைக் கண்டு முதலில் அறிவித்தவர் யார்?

5. எவரெஸ்டைக் காணும் முயற்சி எப்பொழுது ஆரம் பித்தது?

6. எவரெஸ்டை அடைந்தவர் யாவர்? அவர்கள் மேற் கொண்ட முயற்சியை விவரி.

7. சிறு குறிப்பு வரைக:—ஜார்ஜ் லீ மலோரி, ஷெர்ப்பா டென்சிங்கு, ஹிலோரி.

II (a) பின்கண்ட வாக்கியங்களில் ஒவ்வொன்றையும் பல சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

1. உலகிலேயே அதிக அளவு......உள்ளது.
2. தோற்றத்தாலும்......ஐயமில்லை.
3. குழுவினருள் இருவர்......திரும்பினர்.
4. இன்று அவர்......பெற்று வருகிறார்.
5. நியூயார்க்கு டைம்ஸ்......எழுதியுள்ளது.

(b) டென்ஸிங்குக்கு வயது......பெண் மக்கள் உண்டு. (ஒரே வாக்கியமாக மாற்றி எழுது).

(c) வாக்கியங்களில் அமைக்க :—சபதம், இடையூறு, பயின்று, பருவநிலை, வியப்பு.

இலக்கணம்

எழுத்து—'கடவுள்' என்ற சொல்லில் க, ட, வு, ள் என நான்கு எழுத்துக்கள் இருக்கின்றன. இவ்வெழுத்துக்களின் ஒலி ஒன்று சேர்ந்து இந்தச் சொல் உண்டாகியிருக்கிறது. நாம் கண்ணால் பார்ப்பது அவ்வொலிகளின் வரிவடிவம். காதால் கேட்பது ஒலிவடிவம். ஆகவே சொற்கள் உண்டாவதற்குக் காரணம் ஒலிகளாம். ஒலிகள் வரி வடிவத்தில் எழுதப்படும்.

அவ்வெழுத்துக்கள், உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆய்தம் என நான்கு வகைப்படும்.

'அ' முதல் 'ஔ' வரையுள்ள பன்னிரண்டும் உயிர் எழுத்துக்களாம்.

'க்' முதல் 'ன்' வரையுள்ள பதினெட்டும் மெய்யெழுத்துக்களாம்.

உயிரும் மெய்யும் கூடிய எழுத்துக்கள் உயிர் மெய் எழுத்துக்களாம்.

(உ - ம்.) க்+அ=க; க்+ஆ=கா; ச்+இ=சி; த்+ஈ=தீ பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் தனித்தனியே பதினெட்டு மெய்யோடும் கூடி வருவதால் மொத்த உயிர்மெய் எழுத்துக்கள் $18 \times 12 = 216$ ஆகும்.

ஆய்த எழுத்தாவது ஃ என்பது.

எனவே மொத்தம் தமிழில் 247 எழுத்துக்கள் உள்ளன.

2. சீதக்காதி வள்ளல்

பண்டு முதல் இன்றுவரை நந்தமிழ்நாடு வரையாது வழங்கும் வள்ளல்களுக்குப் பெயர்பெற்றது. அவ்வள்ளல்கள் பல சாதியினர்; பல மதத்தினர்; பல திறத்தினர். ஆயினும், தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பதிலும், அதன் வாயிலாகத் தமிழ் மொழியை வளர்ப்பதிலும் அனைவரும் ஒருமனப்பாடு உடையவராய்த் திகழ்ந்தனர். இங்ஙனம் சாதி, மத, வேற்றுமை பாராட்டாது தமிழ்ப் புலவர்களைப் போற்றிய பெருந்தகையாளர்களில் சமீபத்தில் வாழ்ந்துவந்தவர் **சீதக்காதி** என்னும் முஸ்லிம் வள்ளல் ஒருவராவார்.

'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்பது தமிழ்நாட்டில் சாதாரணமாக வழங்கிவரும் பழமொழி. இவ்வளவு புகழ்பெற்ற அந்தச் சீதக்காதி யார், அவரது கொடை யாது, செத்தும் கொடுத்தது எங்ஙனம் என்பவைகளை அறிய எவருக்குத்தான் ஆவலிருக்காது?

சீதக்காதியின் முழுப்பெயர் **ஷெய்கு அப்துல் காதர் மரைக்காயர்** என்பதாகும். புலவர்களிடம் குளிர்ந்த அருள் பூண்ட காரணத்தால் அவர்கள் அவ்வள்ளலை சீதக்காதி என்றே அழைக்கலாயினர்; செய்யுட்களிலும் அமைத்துப் பாடலாயினர். மரைக்காயர் என்பது மரக்கலராயர் என்பதன் மரூஉ. நம் தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரையோரத்தில் நீண்ட காலமாகவே முஸ்லிம் வர்த்தகர்கள் பலர் கடலிற் கலஞ்செலுத்தி, அந்நிய நாடுகள் பலவற்றோடு வாணிபஞ் செய்து வருகின்றனர். அவர்கள் பெரும் பொருளீட்டிச் சீரும் சிறப்பும்பெற்று மன்னர்களைப் போல் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் மரக்கல

அரசர்கள் எனப்படுமாறு சிறக்க வாழ்ந்து வருகின்றமையால் மரக்கலராயர் என வழங்கப்படுகின்றனர். இத்தகைய மரக்கலராயர்களில் ஒருவர்தான் சீதக்காதி.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடற்கரையை அடுத்துள்ளது **கீழைக்கரை** என்னும் ஊர். அவ்வூரில் சுமார் முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் சீதக்காதி தோன்றினர். அன்பு, அருள், அடக்கம், பெருந்தன்மை முதலிய நற்பண்புகள் இயற்கையிலேயே அவரிடம் அமைந்திருந்தன. இயற்கையறிவில் சிறந்து விளங்கிய அவர் தமிழைக் கற்றுத் தேர்ந்து புலமை பெற்று, சிறந்த கவிகளின் சுவையறிந்து போற்றும் தன்மை யுடைவரானர்.

இவர் காலத்தில் டில்லியில் ஆட்சி செய்தவர் ஔரங்கசீப் என்னும் மொகலாய மன்னராவார். அவருக்கடங்கிய பகுதியான வங்காள நாட்டையாளத் தகுதிவாய்ந்த தலைவர் ஒருவர் அக்காலத்தில் தேவையாயிருந்தது. சீதக்காதியின் சிறப்பு வடநாட்டிலும் பரவி யிருந்தது. அவரைப்பற்றிக் கேள்வியுற்ற ஔரங்கசீப் தென்னாட்டிலிருந்த அவரை வடநாட்டிற்கு வரச்செய்து வங்காளத்திற்கு அரசப் பிரதிநிதியாக்கினர். அவ்வேலையைச் சீதக்காதி செவ்வனே செய்துவந்தார். ஆயினும் அந்நாட்டின் தட்பவெப்பநிலை அவரது உடல் நிலைக்கு ஒவ்வாமையால் அதனை விட்டுத் தம்மூர் திரும்பினர்.

இதன்பின்னர் சீதக்காதி கீழைக்கரையிலேயே தங்கித் தமது பண்டைத் தொழிலாகிய கடல் வாணிகத்தையே செய்யலானர். கருவிலே திருவாய்க்கப் பெற்ற அவர் பெரும்பொருள் ஈட்டினர். ‘செல்வத்துப் பயனே ஈதல்’ என்ற உண்மையை உணர்ந்த அவர் அகந்தை சிறிதும் இன்றி மண்ணுலகக் கற்பதரு

என விளங்கினர். புலவரைப் போற்றித் தமிழின் சுவை யறிவதையே பொழுதுபோக்காகக் கொண்டார்.

சீதக்காதியைப் பாடிப் புகழ்ந்த புலவர்களில் முக்கியமானவர் படிக்காசுத் தம்பிரான் என்ற பாவலர் ஆவர். மதத்தால் வேறுபட்ட இவ்விருவரும் உள்ளத்தால் ஒன்றுபட்டிருந்தனர். கலை வள்ளலும், கொடை வள்ளலும் அளவளாவி மகிழ்ந்திருந்த காலத்தில் தமிழகத்தில் பெரும் பஞ்சமுண்டாயிற்று. நீர் நிலைகள் வற்றின. விளைநிலங்கள் வறுநிலங்களாயின. நெல்லும் பொன்னும் சம நிலையில் விற்றன. வறியவர் வயிற்றுக் கஞ்சிக்கும் வழியின்றித் தவித்தனர். சீதக்காதியின் அருளுள்ளம் அதைக்கண்டு ஆற்றுமோ? உடுக்கை இழந்தவன் கைபோல அவ்வள்ளல் அல்லலுறும் மக்களுக்கு ஆதரவு தந்தார். வேறுபாடு ஏதுமின்றி அனைவர்க்கும் உணவளித்துக் காத்தார். அதனாலுண்டான பெரும் பொருட்செலவையும் அவர் பொருட்படுத்தினரில்லை. இவ்வரிய செயலை வியந்த படிக்காசுப் புலவர்,

“ ஓர்தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்
கார் தட்டியகாலத்திலும் தங்கள் காரியப்பேர்
ஆர் தட்டினும் தட்டு வாராமலே யன்ன தானத்திற்கு
மார் தட்டிய துரை மால் சீதக்காதி வரோதயனே ”,

என்று அவ்வள்ளலைப் பாடிப் பரவினர். தராசின் ஒரு தட்டிலே பொன்னும் மற்றொரு தட்டிலே நெல்லுமாக வைத்து ஒரு நிறையாய் விற்கும் பஞ்சகாலத்திலே, தன்னை யார் தடுத்தாலும் கேளாமல் அன்ன தானத்திற்கு நான் என்று மார்தட்டிய துரை சீதக்காதி வள்ளலாவார் என்பது அப்பாட்டின் பொருள்.

சீதக்காதி நெடுநாள் உயிர் வாழ்ந்து ஏழை பங்காளனாய்த் திகழ்ந்தார். எனினும் மண்ணில்

பிறந்தவர் என்ருவது ஒருநாள் மாய்தல் உண்மை தானே! சீதக்காதிக்கும் அத்தகைய இறுதிக் காலம் நெருங்கியது. அப்பொழுது அவரது ஆருயிர் நண்பர் படிக்காசுப் புலவர் அருகில் இல்லை. அவரது உறவினர் பலர் அவரைச் சுற்றியிருந்தனர். சீதக் காதி தமது சீலத்தால் பின் நிகழப்போவதை முன்னமே யறியும் திறமைபெற்றிருந்தனர் போலும். அவர் தம் உறவினரை நோக்கி, "யான் இறந்து என்னை அடக்கஞ் செய்யுங்காலத்தில், என் விரலில் உள்ள மோதிரத்தை மட்டும் கழற்ருமல் அப்படியே வைத்து என்னை அடக்கஞ் செய்யுங்கள்" என்ருர். பிறகு சிறிது நேரத்தில் சீதக்காதி உயிர் நீத்தார். அவரது விருப்பப்படியே அவரது உறவினரும் அவரை அடக்கம் செய்தனர்.

சில நாட்கள் சென்றன. சீதக்காதி வள்ளல் இறந்த செய்தியைப் படிக்காசுப் புலவர் கேள்விப் பட்டார். மனந் துடித்தார். விரைந்தோடிச் சீதக் காதியின் சமாதியை யடைந்தார். "சீதக்காதி பெரு வள்ளலாய்த் திகழ்ந்தான். புகழ்க்கம்பம் நாட்டினுன். புலவர்களைப் போற்றிப் புரந்தான். இன்று அவர்கள் வாயில் ஒருபிடி மண்ணைப் போட்டுவிட்டுச் சமாதிக் குழியில் புகுந்துகொண்டான். இனிப் பாடுவோரும் இல்லை. பாடுவோர்க்குப் பொருள் கொடுப்போரும் இல்லை. ஆ! சீதக்காதி! உயிர்த்துணைவா! நீ மறுபடி வந்து பிறந்தாலன்றி எம்போன்ற புலவர்க் குப் பிழைப்பில்லை! ஐயோ! உன்னைக் காணலாம், அளவளாவி மகிழலாம் என்றல்லவோ எண்ணி வந்தேன். நீ சவக்குழியில் ஒளித்துக் கொண்டாயே! என்ன செய்வேன்?" என்று புலம்பினுர்.

"ஈயாத புலவர் இருந்தென்ன போயென்ன, எட்டிமரம்
காயாதிருந்தென்ன, காய்த்துப் பலனென்ன, கைவிரித்துப்
போ யாசகமென் றுரைப்போர்க்குச் செம்பொன் பிடிபிடியாய்
ஓயாமல் ஈபவன் மால்சீதக்காதி ஒருவனுமே"

என்று பாடினர். அவ்வளவில் சமாதிக்குழி பிளந்தது. மோதிரமணிந்த சீதக்காதியின் கை அதினின்றும் வெளியே நீண்டது. மோதிரம் விரலில் பளபள வென்று பிரகாசித்தது. தமது பாடலை வியந்து தமக்குப் பரிசு கொடுப்பதற்காகவே கை நீட்டப் பட்டது என நினைத்தார் புலவர். 'சீதக்காதி சவக் குழியிலிருந்து என் பாடலைக் கேட்டு மகிழ்ந்து விட்டான். நம்மை மோதிரக் கையால் வாவென்று அழைக்கிறன். தமிழ்ச் சுவை யறியாத செல்வர்களைப் பாடாதீர்கள் என்பதே நீட்டிய கையின் குறிப்புப் போலும்!' என்ற கருத்தமைந்த பாடலைப் பாடினர். அருகிலிருந்தவர்கள் அம்மோதிரத்தை எடுத்துக் கொள்ளுமாறு புலவர்க்குக் கூறினர். சீதக்காதி புலவர் பாடலை வியந்து அவருக்குப் பரிசளித்தான் என்றனர். இதுமுதல்தான் 'செத்துங் கொடுத்தான் சீதக்காதி' என்னும் பழமொழி நம் நாட்டில் வழங்கி வரலாயிற்று.

அருமைச் சிறுவர்களே! நீங்கள் நற்குணங் களின் இருப்பிடமாய், தன் முயற்சியால் நிரம்பப் பொருள் தேடி, அதனல் சிறந்த அறப்பயனை அடைய வேண்டும் என்பதே சீதக்காதியின் வரலாறு அறிவிக் கும் உயர்ந்த உண்மை. சீதக்காதி வள்ளலின் பெயர் நானிலத்தில் சிறப்புற்றோங்குக.

அரும்பதவுரை

வரையாது - எல்லையில்லாமல்; ஒருமனப்பாடு - ஒத்த கருத்து; மரூஉ - மாறிவருவது; கலம் - கப்பல்; பண்பு -

குணம்; புலமை - அறிவு; தகுதி - திறமை; செவ்வனே - நன்ருக; தட்பவெப்பம் - சீதோஷ்ணம்; ஒவ்வாமை - பொருந்தாமை; அகந்தை - கர்வம்; அல்லல் - துன்பம்; கார் - மேகம்; இறுதிக்காலம் - முடிவு காலம்; உடுக்கை - ஆடை; சீலம் - நல்லொழுக்கம்.

பயிற்சி வினக்கள்

I. 1. தமிழகம் எவர்களுக்குப் பெயர்பெற்றது? அவர்கள் எவ்வாறு திகழ்ந்தனர்?

2. சீதக்காதியின் முழுப்பெயர் யாது?

3. மரைக்காயர் என்ற பெயர் எப்படி வந்தது?

4. சீதக்காதியின் நண்பர் யார்? அவர் சீதக்காதியின் ஈகையை எங்ஙனம் புகழ்ந்தார்?

5. சீதக்காதி இறக்கும்பொழுது உறவினரிடம் கூறியது என்ன?

6. 'செத்துங் கொடுத்தான் சீதக்காதி' என்பதில் உள்ள வரலாறு யாது?

7. சீதக்காதியின் வரலாறு நமக்கு அறிவிப்பதென்ன?

II. (1) இங்ஙனம் சாதி மத வேற்றுமை பாராட்டாது...... முஸ்லிம் வள்ளலாவார். (மூன்று சிறிய வாக்கியங்களாகப் பிரித்து எழுது.)

(2) புலவர்களிடம் குளிர்ந்த அருள்பூண்ட......அழைக்கலாயினர். (இரு சிறு வாக்கியங்களாக எழுது.)

(3) அந்நாட்டின் தட்பவெப்பநிலே......தம்மூர் திரும்பினர். (இரண்டு சிறு வாக்கியங்களாக்குக.)

(4) சீதக்காதியின் அருளுள்ளம் அதனைக் கண்டு ஆற்றுமோ? (இதைச் சாதாரண வாக்கியமாக எழுது.)

III. (1) பிரித்தெழுது:—பொருளீட்டி; முந்நூற்றைம்பது; தென்னுடு; தம்மூர்; மண்ணுலகம்; அருளுள்ளம்; அல்லலுறும்; ஆருயிர்; பரிசளித்தான்.

(2) வாக்கியங்களில் அமைத்து எழுதுக:—செவ்வனே; அல்லல்; சீலம்; ஏழைபங்காளன்.

இலக்கணம்

எழுத்துக்களின் வகைகள்

உயிரெழுத்துக்கள் குறில் நெடில் என இருவகைப்படும். குறுகிய ஓசையையுடையவை குறிலாகும். அவை அ, இ, உ, எ, ஒ என ஐந்தாம்.

நீண்ட ஓசையுடையவை நெடில் அல்லது நெட்டெழுத்து எனப்படும். அவை ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என ஏழாம்.

மெய்யெழுத்துக்கள் மூன்று வகைப்படும். அவை வல்லினம், மெல்லினம், இடையினம் என்பன.

க், ச், ட், த், ப், ற் என்ற ஆறும் வலிய ஓசை யுடையன வாதலால் வல்லினம் எனப்பட்டன.

ங், ஞ், ண், ந், ம், ன் என்ற ஆறும் மெல்லிய ஓசையுடை யன வாதல் பற்றி மெல்லினம் எனப்படும்.

இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட ஓசையுடைய, ய், ர், ல், வ், ழ், ள், என்ற ஆறும் இடையினமாம்.

3. ஆன்ருேர் அமுத மொழிகள்

1. எதைக் காவாது விட்டாலும், நாவினைக் காக்க; அவ்வாறு நாவடக்கம் இல்லாவிடில், சொற் குற்றம் ஏற்பட்டு அதனுல் துன்பம் அடைவர்.

2. தமக்குத் துன்பம் செய்தவர்களைத் தண்டித்த லாவது, அவர்கள் வெட்கிப் போகுமாறு அவர் களுக்குச் சிறந்த நன்மை செய்து வருவதே யாகும்.

3. பகைவரது குற்றங்களை ஆராய்வது போலத் தங்களுடைய குற்றங்களையும் ஆராய வல்லராயின் உலகத்து மக்களுக்குத் துன்பமில்லை.

—திருவள்ளுவர்

4. பிறகு அறஞ் செய்வோம். இப்பொழுது நாம் இளமைப் பருவத்தினராவோம் என்னுமல், உடனே அறம் செய்க, ஏனெனில் உடல் நிலையற்றது.

—நாலடியார்

5. பிறரால் தான் புகழப்பட வேண்டும் என்று விரும்புகிறவன், மறவாமல் கடைப்பிடிக்க வேண்டிய தொன்றுண்டு. அது மற்றவர்களுடைய மேன்மை களை யெல்லாம் பலரும் அறிய எடுத்துச் சொல்லு தலும், அவருடைய குறைபாடுகளைச் சொல்லாது விடுத்தலும், தான் எவரிடத்தும் பணிவாக நடந்து கொள்ளுதலு மேயாம்.

—குமரகுருபரர்

6. வறுமையால் வாடிவருபவரது துன்பங் கண்டு இரங்கி அவர்க்கு உதவிபுரிவோரே அறிஞரது பாராட்டுக்கு உரியவராவர்.

—உறையூர் முதுகண்ணன் சாத்தனுர்

7. இம்மையில் செய்தது மறுமைக்கு உதவும் என்று கருதி அறம் செய்வது அறவிலை வாணிகமாம். தருமத்தைத் தருமத்தின் பொருட்டே செய்தல் வேண்டும்.

—உறையூர் ஏணிச்சேரி முட மோசியார்

8. தமக்கென வாழாது, பிறர்க்கென வாழும் பெரியோர் இந்திரர்க்குரிய அமிர்தத்தைப் பெற்றாலும், தாமே தனித்து அதனை உண்ணார் ; யார்மீதும் வெறுப் புக் கொள்ளார் ; நன்மைக் கெனின் தம் உயிரையும் கொடுப்பர் ; உலகமே பரிசாகக் கிடைப்பதாயினும் தீச் செயல் செய்யார்.

—இளம் பெரு வழுதி

9. ஒளியை ஒரு முறை கண்டபின் விட்டிற் பூச்சி மீண்டும் இருளை நாடுவதில்லை. அதுபோல், உண்மைத்துறவி, துறவைமேற் கொண்டபின் உலகப் பற்றை முழுதும் போக்கி விடுகிறான்.

—இராம கிருஷ்ண பரமஹம்ஸர்

10. இரக்க முடையவர்கள் பாக்கியவான்கள் ; ஏனெனில் அவர்கள் இரக்கத்தைப் பெறுவார்கள்.

11. சமாதானம் செய்கிறவர்கள் பாக்கியவான் கள். ஏனெனில் அவர்கள் கடவுளின் பிள்ளைகள் என்று அழைக்கப்படுவார்கள்.

12. நீதிக்காகத் துன்பப்படுகிறவர்கள் பாக்கிய வான்கள் ; ஏனெனில் மோக்ஷ ரகசியம் அவர்களுக்கே சொந்தமாகும்.

—இயேசு நாதர்

அரும்பதவுரை

ஆன்றோர் - நற்குண நல்லொழுக்கமுடைய பெரியோர்; அமுதமொழி - அமிர்தம்போல் இன்பம் தரும் சொல். இம்மை - இப்பிறவி; மறுமை - இறந்தபின் ஏற்படும் நிலை; பாக்கியவான் - நன்மை பெற்றவர்.

வினாக்கள்

1. எதைக் காக்க வேண்டும்? ஏன்?
2. துன்பம் செய்தவரைத் தண்டிப்பது எப்படி?
3. உலகில் மக்களுக்கு எப்பொழுது துன்பம் இல்லை?
4. நாலடியார் கூறும் நன்மொழி யாது?
5. பிறரால் புகழப்படுவதை விரும்புபவன் யாது செய்தல் வேண்டும்?
6. அறிஞரது பாராட்டுக்கு உரியவர் யார்?
7. எது அறவிலை வாணிகம்?
8. தமக்கெனவாழாப் பிறர்க்குரியாளர் இயல்புகள் எவை?
9. உண்மைத்துறவி எதைப் போன்றவன்?
10. கடவுளின் பிள்ளைகளாவார் யார்?
11. மோக்ஷ இரகசியம் யாருக்குச் சொந்தம்?

(a) துன்பம், இம்மை, இளமை, புகழ், ஒளி, அறம்,— இவற்றிற்கு எதிர்ப்பதம் தருக.

இலக்கணம்

சுட்டு எழுத்துக்கள்

தமிழ் எழுத்துக்களில் அ, இ, உ என்னும் இம்மூன்று எழுத்துக்களும் பொருள்களைச் சுட்டிக் காட்டுவதற்குப் பயன்படுகின்றன. அதனால் இவை சுட்டெழுத்துக்கள் எனப்படுகின்றன.

(உ - ம்.) அவன் - அம்மனிதன். சுட்டிக்காட்டும் பொருளில் வராவிட்டால் இவை சுட்டெழுத்துக்கள் ஆகா.

(உ - ம்.) அரசன், இடம், உடை.

இவள், இப்பெண்,

உவன், உப்பக்கம்.

(உவன் - நடுவிலுள்ளவன் ; உப்பக்கம் - பின்பக்கம்).

வினு எழுத்து

தமிழ் எழுத்துக்களில் ஆ, எ, ஏ, ஓ, யா என்னும் ஐந்து எழுத்துக்களும் வினவுதற்குப் பயன்பட்டு வருகின்றன. அதனுல் இவை வினு வெழுத்துக்கள் எனப்படுகின்றன.

(உ - ம்.)	அவனு ?	ஆ - வினுவெழுத்து.
	சென்ருயோ ?	ஓ - வினுவெழுத்து.
	எவன், எம்மனிதன் ?	எ - வினுவெழுத்து.
	ஏவன் ?	ஏ - வினுவெழுத்து.
	யாவன், யார் ?	யா - வினுவெழுத்து.

வினுப் பொருளில் வராவிட்டால் இவை வினுவெழுத்துக்கள் ஆகா.

(உ -ம்.) ஆடு, ஓடம், எருது, ஏர், யானை.

4. விக்கிரமாதித்தனும் வேதாளமும்

கதைகள் கேட்பது என்றுலே எல்லோருக்கும் தனிப்பட்ட ஒரு விருப்பம் உண்டு. அதிலும் சிறுவர்களுக்கு அதில் அளவுகடந்த விருப்பம். அற்புதமான நிகழ்ச்சிகள், ஆச்சரியமான சம்பவங்கள் என்ருல் பிள்ளைகளின் விருப்பத்திற்கும் மகிழ்ச்சிக்கும் அளவுண்டோ? இதனுல் தான் நம் பழம் பெரும் பாரத நாட்டில் பல கதைகள் கர்ண பரம்பரையாக வழங்கி வருகின்றன. அவற்றுள் விக்கிரமாதித்தன் கதை எல்லோராலும் விரும்பிப் படிக்கக்கூடிய சிறந்த மகிழ்ச்சியூட்டும் கதை.

விக்கிரமாதித்தன் குப்தவம்சத்தைச் சேர்ந்தவன். சந்திர குப்தன் என்பது அவனது இயற்பெயர். விக்கிரமாதித்தன், சாகாரி என்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றவன். நவரத்தினங்கள் என்ற பல கலைப் புலவர்களைப் போற்றி, இலக்கியம், கலை, விஞ்ஞானம், வடமொழி ஆகியவற்றை வளர்த்தவன். இதனுலேயே குப்தர்கள் காலம் 'இந்திய சரித்திரத்தின் பொற்காலம்' எனப்படுகிறது.

விக்கிரமாதித்தனைப்பற்றி வழங்கும் பல கதைகளில் ஒன்று இங்கே கூறப்படுகிறது.

விக்கிரமாதித்தன் காலத்தில் ஒரு சிறந்த மந்திரவாதி இருந்தான். அவன் தனது மந்திர வித்தையின் மூலமாகச் சில சித்திகளை அடைந்திருந்தான். மேலும் சிறந்த வன்மைகளைப் பெறக்கருதிய அவன் அதற்கானவற்றை முயலுகையில் சிறந்த ஒரு அரசனைக் காளிக்குப் பலியிட்டால் அத்தகைய வன்மைகளை அடையலாமெனக் கண்டறிந்தான். அப்படிப்பட்ட அரசன் யார் என அவன் ஆராய்கையில், விக்கிர

மாதித்தனே அத்தகையவன் எனத் தெரியவந்தது. ஆதலால் எங்ஙனமேனும் அவ்வரசனைக் காளிக்குப் பலியிடத் தீர்மானித்தான்.

மந்திரவாதி துறவி வேடம்பூண்டு **சத்தியசீலன்** என்னும் புனைபெயர் கொண்டவனாய், விக்கிரமாதித்தன் அரசவையில் வீற்றிருக்கையில் அவனையடைந்து ஆசீர்வதித்து ஒரு விளங்கனியைக் காணிக்கையாகக் கொடுத்தான். விக்கிரமாதித்தன் அதனை மரியாதையாக ஏற்றுத் தன் அறையில் வைக்குமாறு தன் ஏவலாளனுக்குக் கட்டளையிட்டான். பிறகு மந்திரவாதி அடுத்தடுத்துச் சில நாட்கள் வரையில் தினமும் அரசனையடைந்து தினமொரு விளங்கனியாகப் பல கனிகளைக் கொடுத்துவந்தான்.

ஒரு நாள் அரசன் மந்திரவாதியிடமிருந்து கனியைப் பெறுகையில் அது தவறிக் கீழேவிழுந்து உடைந்தது. அப்போது அதற்குள் இருந்த விலையுயர்ந்த இரத்தினக்கல் ஒன்று வெளியில் தெறித்து விழுந்தது. அதைக்கண்டு ஆச்சரியப்பட்ட அரசன், துறவியை நோக்கி, "பெரியீர் தாங்கள் அளித்த கனிகள் எல்லாவற்றிலும் இவ்வாறே மணிகள் உள்ளனவோ ?" என்றான். மந்திரவாதி "ஆம் ! ஒவ்வொரு கனியிலும் ஒவ்வொரு மணி உள்ளது" என்றான். அரசன் துறவி கொடுத்த கனிகளை அப்படியே வைத்திருந்தானாகையால் அவற்றை யெல்லாம் வருவித்து உடைத்துப்பார்த்துத் துறவி கூறியபடியே அவற்றுள் நவமணிகள் இருக்கக்கண்டான்.

பிறகு அரசன் துறவியை நோக்கி, "சுவாமி ! தாங்கள் என்ன கருத்தோடு இவற்றை எனக்கு அளித்தீர்கள்?" என்றான். துறவி, "கடவுள், அரசன், குழந்தைகள் ஆகியவர்கள் இருக்கும் இடங்களுக்குச்

செல்லும்போது வெறுங்கையுடன் செல்லலாகாது; உயர்ந்த பொருள்களையே காணிக்கையாகக் கொண்டு செல்லவேண்டும் என விதி உள்ளது. அதுபற்றியே நான் இவற்றை உனக்குக் கொடுத்தேன். ஆயினும், நீ விரும்பினுல் எனக்கோர் உதவி செய்யலாம்,'' என்ருன்.

விக்கிரமாதித்தன், "அடிகளே! என்னுல் இயன்ற உதவி எதுவாயினும் நான் தங்களுக்குச் செய்யத் தடையில்லை. தயைசெய்து கட்டளையிட் டருளவேண்டும்,'' என்ருன். உடனே துறவி தந்திர மாக, "நான் உலக நன்மையின் பொருட்டுச் சுடு காட்டில் ஒரு வேள்வி செய்யப்போகின்றேன். அதற் குதவியாக நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். வரு கிற அமாவாசையன்று நள்ளிரவில் நீ இவ்வூர்ச் சுடு காட்டுக்குத் தனித்து வரவேண்டும். நான் அப் போது அங்கே வேள்வியைத் துவக்குவேன். அக் காலை நீ செய்யவேண்டிய உதவியைப்பற்றி அங்கே உனக்குக் கூறுவேன்'' என்ருன். அரசனும் அவ் வாறே செய்வதாகக் கூறினுன். மந்திரவாதியாகிய துறவியும் மகிழ்ச்சியுடன் சென்ருன்.

அமாவாசை நாள் வந்தது. விக்கிரமாதித்தன் தான் வாக்களித்தபடியே தனித்துச் சுடுகாட்டை யடைந்தான். அங்கு மந்திரவாதி தான் கூறியபடியே வேள்வியைத் தொடங்கியிருந்தான். விக்கிரமாதித் தனைக் கண்டதும் அவன், "அரசே வருக! இப் போது நீ செய்யப்போகும் உதவி மகத்தானது. மிக்க தைரியமும் வீரமும் உடையவர்களாலன்றி ஏனையோ ரால் செய்ய இயலாதது. அதனுலேயே அவ்வுதவிக்கு உன்னை யான் தேர்ந்தெடுத்தேன். நீ செய்ய வேண் டியது இதுவே. இங்கிருந்து சிறிது தூரம் வடக்கில்

மற்றொரு சுடுகாடு உள்ளது. அங்கே ஒரு வாகை மரத்தின் கிளையில் ஒரு பிணம் தொங்குகிறது. நீ போய் அதை இப்போது இங்கே கொண்டுவர வேண்டும்! இவ்வளவே நீ செய்ய வேண்டியது. பிறகு என்னருகிலிருந்து நான் செய்யும் வேள்வியைக் கவனி! எல்லாம் உனக்கு விளங்கும்!'' என்றான்.

விக்கிரமாதித்தன் உடனே எழுந்து சென்றான். மந்திரவாதி கூறிய சுடுகாட்டை அடைந்தான். அங்கே பேய்களும் பூதங்களும் பயங்கரமான உருவத்துடன் பயங்கரமாகக் கூச்சலிட்டுக் கொண்டு திரிந்தன. அவை விக்கிரமாதித்தனை மிகவும் பயமுறுத்தின. அவன் மிகவும் தைரியமும் வீரமும் பொருந்தியவனாதலால் அவற்றைப் பொருட்படுத்தாமல் வாகை மரத்தை அடைந்து, பிணத்தை எடுத்துக் கொண்டு கீழிறங்கி வந்தான்.

அந்தப் பிணத்திற்குள் ஒரு வேதாளம் புகுந்து கொண்டிருந்தது. அதற்கு மந்திரவாதியைப் பற்றிய செய்திகளெல்லாம் தெரியும். கொடியவனான மந்திரவாதி இப்படிப்பட்ட ஒரு சிறந்த அரசனைக் கொல்லப் போகிறானே, என அது வருந்தியது. பிறகு அது அரசனைப் பார்த்து ''அரசனே! நான் ஒரு வேதாளம். நீ இப்பிணத்தை எங்கே கொண்டு செல்லப் போகிறாய் என்பதை நான் அறிவேன். போகும் வழியில் நான் உனக்குச் சில கதைகள் சொல்வேன். ஒவ்வொரு கதையின் முடிவிலும் சில கேள்விகள் கேட்பேன். அவற்றிற்கு நீ தக்க மறுமொழியளித்தால், உனக்கு நேரப்போகும் பேராபத்தை நான் தீர்த்து வைப்பதோடு உன்னுடைய ஏவலாளாகவும் இருப்பேன்,'' என்றது.

விக்கிரமாதித்தன் '' நல்லது, அப்படியே செய்,''

என்று கூற, வேதாளம் பல கதைகளைச் சொல்லியது. கதை முடிவில் கேள்விகளையும் கேட்டது. விக்கிரமாதித்தன் அக்கேள்விகட்கெல்லாம் தவறில்லாமல் மிக்க பொருத்தமான விடைகளைக் கூறினான். அதனால் மகிழ்ந்த வேதாளம், மந்திரவாதியினது உண்மைக் கருத்தை விக்கிமாதித்தனுக்குக் கூறியது. அதைக் கேட்ட அரசன், வேதாளத்தின் கூற்று உண்மையோ, பொய்யோ என்று ஐயுற்றவாறு இருந்தான். அது கண்ட வேதாளம், "அரசனே, நீ வேண்டுமானால் பார். மந்திரவாதி உன்னை வேள்வி முடிவில் காளியை வணங்குமாறு கூறுவான். அவன் அருகில் ஒரு பெரிய அரிவாள் இருக்கும். நீ வணங்கும்போது அவன் உன் கழுத்தை வெட்டிப் பலியிடுவான். நீ அவ்வாபத்திலிருந்து தப்பவேண்டுமானால் அதற்கு வழி இதுதான். அதாவது மந்திரவாதி உன்னை வணங்குமாறு சொல்லும்போது நீ, 'காளியை வணங்கும் முறையை நான் அறியமாட்டேன். நீ முதலில் செய்து காட்டினால் நான் பிறகு அவ்வாறே வணங்குவேன்' என்று கூறவேண்டும். அவன் உடனே வணங்குவான். அப்போது நீ அவன் கழுத்தை வெட்டிவிட வேண்டும்" என்றது. "நல்லது அப்படியே" என்று கூறிவிட்டு விக்கிரமாதித்தன் நடந்தான்.

அவன் மந்திரவாதியிடம் சென்றபோது எல்லாம் வேதாளம் சொன்னபடியே நடந்தது. மந்திரவாதியின் நடத்தைகளிலிருந்து வேதாளம் கூறியது உண்மையாகத்தான் இருக்க வேண்டுமென்று அரசனுக்குப் புலப்பட்டது. அதனால் அரசன் தன்னை மந்திரவாதி வணங்கச் சொன்னபோது வணங்காமல், "ஐயனே, காளியை வணங்கும் முறையை நான் அறியேன்.

முறை தவறி வணங்கினல் அபசாரம் ஏற்பட்டுவிடும். ஆதலால் தாங்கள் முதலில் வணங்கி அம்முறையை எனக்குக் காட்டவேண்டும்!'' என்ருன். மந்திர வாதி உடனே வணங்கிக் காட்ட, அரசன் அவன் பக்கத்திலிருந்த வாளை எடுத்து அவன் தலையை வெட்டி விட்டான்.

இவ்வாறு அபாயம் நீங்கப் பெற்ற அரசன் வேதாளத்தையும் ஏவலாளாகக் கொண்டு தன் நகரத்தை யடைந்து நீண்டநாள் நீதியாக அரசாண்டு வந்தான். வேதாளமும் அவனுக்கு உண்மையுள்ள ஊழியனுய்ப் பிற்காலத்தில் அவனுக்குப் பல உதவிகள் செய்து வந்தது.

அருஞ்பதவுரை

முதியோர் - வயது சென்றவர்; கர்ணபரம்பரையாக - காதினல் கேட்டுவரும் முறைமைப்படி; புனைந்து - கற்பனை செய்து; சித்திகள் - அபூர்வ சக்திகள்; அக்காலை - அப்போது; வேள்வி - தீ வளர்த்துச் செய்யப்படும் ஒரு மதச் சடங்கு, யாகம்; துவக்குவேன் - ஆரம்பிப்பேன்; ஏனையோர் - மற்றவர்; வேதாளம் - பிசாசுகளுள் ஒருவகை; அபசாரம் - குற்றம்.

வினக்கள்

1. நம் நாட்டில் பல கதைகள் வழங்கி வருவது ஏன்?

2. விக்கிரமாதித்தனின் சிறப்புகள் எவை?

3. மந்திரவாதி விக்கிரமாதித்தனைத் தன் வழிப்படுத்த என்ன சூழ்ச்சி செய்தான்?

4. மந்திரவாதியின் சூழ்ச்சி விக்கிரமாதித்தனுக்கு யாரால் எவ்வாறு தெரிய வந்தது?

5. விக்கிரமாதித்தன் ஆபத்திலிருந்து தப்பியது எப்படி?

பயிற்சி

1. விக்கிரமாதித்தன் காலத்தில் ஒரு சிறந்த மந்திரவாதி இருந்தான். அவன் தனது மந்திர வித்தையின் மூலமாகச் சில சித்திகளை அடைந்திருந்தான்—இவ்வாக்கியங்களை ஒன்று சேர்க்க.

2. உடனே துறவி தந்திரமாக, "நான் உலக நன்மையின் பொருட்டுச் சுடுகாட்டில் ஒரு வேள்வி செய்யப் போகிறேன்; அதற்குதவியாக நீ ஒரு காரியம் செய்யவேண்டும்" என்றான்—இவ்வாக்கியத்தை அயற்கூற்று வாக்கியமாக மாற்றிக் கூறு.

3. அரசனும் அவ்வாறே செய்வதாகக் கூறினான்—இவ்வாக்கியத்தை நேர்கூற்று வாக்கியமாக மாற்றிக் கூறுக.

4. கர்ணபரம்பரையாக, புனைந்து, வேள்வி, ஏனையோர்—இச்சொற்களை வைத்து முறையே ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

இலக்கணம்

மனிதன், பசு, காக்கை, மரம், புல் இவையெல்லாம் பொருள்களின் பெயர்களாம். இவைகளைப் போலப் பெயர்களைக் குறிக்கும் சொற்கள் **பெயர்ச்சொற்கள்** எனப்படும்.

நடந்தான், வருகிறான், வா, போ, இவையெல்லாம் தொழில்களைக் குறிக்கின்றன. இவ்வாறு தொழில்களைக் குறிக்கும் சொற்கள் **வினைச்சொற்கள்** எனப்படும்.

மற்று, கொல், ஏ, ஒ, உம்—போன்ற சொற்கள் பெயர்ச்சொற்களுமல்ல; வினைச்சொற்களுமல்ல. இவை **இடைச்சொற்கள்** எனப்படும்.

சால, நனி, நல், தீ, போன்ற சொற்கள் பொருள்களின் பண்பைத் தெரிவித்து வருவன—இவை **உரிச்சொற்கள்** எனப்படும்.

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனத் தமிழ்ச் சொற்கள் நான்கு வகைப்படும்.

5. புலவர் பெருமிதம்

சங்ககாலத் தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் தமிழ்ப் புலவர்கள் வீறுபெற்று விளங்கிய செய்திகள் பலவற்றைக் காணலாம். அவ்வாறு மிக்க வீறுகொண்ட புலவர்களில் பெருஞ்சித்திரனுர் என்பவர் ஒருவர். கல்வியுள்ளவிடத்திற் செல்வமிராது என்னும் சொல் இப்பெருஞ்சித்திரனுரிடம் நன்கு பொருந்தியிருந்தது. சிறந்த கல்வியறிவு கொண்ட அவர் வறுமையால் மிகவும் வாடினுர்.

பண்டைத் தமிழ்ப் புலவர் வறுமையால் வாடிய காலத்துச் செல்வரையும் மன்னரையும் அடுத்து அவர்களைப் பற்றிப் பாடிப் பரிசிலாகப் பெரும் பொருள் பெற்று மீள்வர். அவ்வாறே பெருஞ்சித்திரனுரும் ஓரரசனை அடுத்துப் பாடிப் பரிசில் பெறவிரும்பினர். அவ்வகையில் தான் செல்லுதற்குரிய அரசன் யார் என அவர் ஆராய்கையில் **தகடூரையாண்ட அதியமான்** என்னும் அரசன் சிறந்த கொடையாளி எனக் கேள்வியுற்ருர். உடனே புலவர் தமதூரை விட்டுப் புறப்பட்டுச் சென்று சில நாளில் தகடூரை யடைந்தார்.

அவர் அரசவை சென்று அதியமானைக் காண முயன்றபோது அரசன் வேறு ஏதோ ஒரு அலுவலில் ஈடுபட்டிருந்தான். அதனுல் புலவரைக் காணவியலாத நிலையிலிருந்த அவன் தன் அமைச்சன் மூலமாகப் புலவர்க்கு நிரம்பப் பொருளைப் பரிசிலாக அனுப்பினுன். அரசன் தன்னை வந்து காணுமலும், தன் பாடலைக் கேட்டு மகிழாமலும் தனக்குப் பரிசில் கொடுக்க முன்வந்ததைப் புலவர் விரும்பவில்லை. அதனுல் அவர் பரிசில் கொணர்ந்தவரிடம், "பொன்னும்

மணியும் ஆடையும் பிறவுமாய் நிறைந்த இப்பரிசில் மகிழ்வூட்டுவதே; குன்றும் மலையும் கடந்து யான் வந்ததும் பரிசில் பெறுதற்கே. ஆயினும், இத்தகைய பெரும் பரிசில் தருதற்கு அரசன் என்னறிவை அறிந்தது எங்ஙனம்? அரசனைக் காணுமல் இப்பரிசிலைக் கொண்டு செல்லுதற்கு யான் ஓர் வாணிகப் பரிசிலன் அல்லேன். எனது கல்வியறிவை அறிந்து அதற்கேற்றவாறு கொடுக்கும் பரிசிலையே நான் விரும்புவேன். அது சிறிதாயினும் எனக்குப் போதுமானது. என் கல்வியையறியாது கொடுக்கும் இப்பரிசில் பெரிதாயினும் எனக்கு வேண்டாம். யான் சென்று வருகின்றேன்,'' எனக் கூறிச் சென்று விட்டார்.

பிறகு அவர் வேறு யாரிடம் செல்வதென்று ஆராய்ந்தபோது **வெளிமான்** என்னும் ஓரரசன் கல்வியருமையறிந்து புலவரைப் போற்றுபவன் எனக் கேள்வியுற்று அவனது நாட்டை யடைந்தார். இவர் அவ்வரசனிடம் சென்றபோது அவன் கடுநோயால் படுத்த படுக்கையாயிருந்தான். புலவரைக் கண்டதும் அவன் மகிழ்ந்து வரவேற்றான். பேசக்கூட இயலாத நிலையில் அவன் தன் தம்பி **இளவெளிமான்** என்பவனிடம் புலவர்க்கு நிறையப் பரிசில் கொடுத்தனுப்புமாறு கூறினன். இளவெளிமானோ மிகுந்த உலோபி. புலவரைக் கண்டால் அவனுக்குப் பிடிப்பதில்லை. அதனல் அவன் சிறிது காலந்தாழ்க்கவே வெளிமான் இறந்துவிட்டான். அது கண்ட புலவர் மிகவும் வருந்தினர். அந்நிலையில் இளவெளிமான் சிறிது பொருள் கொணர்ந்து புலவர் முன்வைத்து, ''இங்கு நின்று புலம்ப வேண்டாம்; இதனை எடுத்துச் செல்க,'' என்ருன்.

அவன் செயலைக் கண்டு வெறுப்படைந்த பெருஞ்

சித்திரனூர், "மலையினிடத்துள்ள புலி, தனக்கு இரையாகவிருந்த யானை தனக்கு அகப்படாமல் தப்பிப் போய்விட்டது என்பதற்காக, பக்கத்திலோடும் எலியின்மீது பாய்ந்து அதனை உணவாகக் கொள்ளாது. கடலை நோக்கி விரைந்து செல்லும் ஆற்றைப் போல நானும் சிறந்த ஈகையுடையாரைத் தேடிச் செல்வேன். பெரிது உலகம்! புலவரை விரும்புவோர் பலர் உளர்" என்று கூறி அவ்விடம் விட்டு அகன்றூர். பிறகு அவர் குமணன் சிறந்த கொடையாளி எனக் கேள்வியுற்று அவ்வரசனது அவைக்களத்தை அடைந்தார். அக்காலை அரியணையிற் சிறக்க வீற்றிருந்த குமண வள்ளல் பெருஞ்சித்திரனூரை அன்புடன் வரவேற்று உபசரித்து அளவளாவலாயினன். புலவர் அவனிடம் தன் வறுமைத் துன்பத்தை எடுத்துரைப்பாராய், "அரசனே, எனக்கு வயது மிகச் சென்ற தாய் இருக்கின்றூள். அவள் ஊன்றுகோலையே காலாகக் கொண்டவள்; நடக்கமாட்டாது குறுகக் குறுக அடியிட்டு நடப்பவள். வறுமையால் வாடித் தன்னுயிர் இன்னும் போகவில்லையே என வருந்துபவள். பார்வை குறைந்ததால் முற்றத்தை விட்டு அகலாதவள். என் மனைவியோ, உணவின் பொருட்டுக் குப்பையில் முளைத்த கீரைச் செடியிலே முன்பு பறிக்கப்பட்ட விடத்திலே கிளைத்த கொழுந்து இலைகளைப் பறித்து உப்பில்லாமலே அதனைச் சமைத்து உணவாக அளிக்கும் நிலைமையை உடையவளாய், அறக் கடவுளைப் பழித்தவாறு இருக்கின்றூள். எனது சிறிய மகனே பசி மிக்குடையவனாய் உணவுக் கலன்களைத் திறந்து திறந்து பார்த்து ஒன்றுமில்லாததைக் கண்டு ஓயாமல் அழுதவண்ணம் இருக்கின்றூன். அவனது அழுகையை நிறுத்தப் பலவாறு முயன்றும் முடியாமற்

போய், 'முடிவில் உன் பசித் துன்பத்தை உன் தந்தையிடம் சொல்!' என அவன் தாய் அவனைக் கடிந்து கூறுகின்ருள். இவ்வுலகில் வள்ளல்கள் எனப் புகழ் பெற்ற வள்ளல்களாகிய **பாரி, ஓரி, மலையன், எழினி, பேகன், ஆய், நள்ளி** என்பார் இறந்தபின், வறுமையால் வாடி வருந்தும் இரவலரைப் புரப்பவன் நீ யொருவனே என அறிந்து, உன்னை யான் வந்து அடைந்தேன். உன் ஈகையால் உன் புகழ் மேம்படுவதாக! உன் வேலால் உன் பகை அழிவதாக!'' என்று பொருள்படப் பல பாடல்களைப் பாடினர்.

புலவர் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்ததோடு, அவரது வறுமையையும் கண்டு இரங்கினன் குமணன். பரிசிலாகப் பெரும் பொருளை யளித்தான். யானை யொன்றையும் பரிசிலாக அவனிடமிருந்து பெற்ருர் பெருஞ்சித்திரனர். அந்த யானையை அவர் இளவெளிமானது ஊர்க்குக் கொண்டு சென்று அங்கு அவனது அரண்மனை வாயிலில் இருந்த காவன் மரத்தில் அதனைக் கட்டினர். அரசவையில் வீற்றிருந்த இளவெளிமான் முன்பு சென்று, '' நீ இரவலரைக் காப்பவனும் அல்லை; இரவலரைக் காப்பதற்குப் புரவலர்கள் இல்லாமலும் இல்லை; இரவலர் உண்டென்பதையும், அந்த இரவலர்க்கு ஈவோர் உண்டென்பதையும் இப்போதே நீ அறிவாயாக. உன் அரண்மனை வாயிலில் உள்ள காவன் மரத்தில் கட்டப்பட்ட யானை யான் உனக்கு அளிக்கும் பரிசிலாகும். நான் சென்று வருகின்றேன்!'' என்று கூறி அவ்விடம் விட்டுச் சென்ருர்.

சென்றவர் தாம் குமணன்பால் பெற்ற பரிசிற் பொருள்களுடன் தமதூரை யடைந்தார். அப்பரிசிற் பொருள்களைத் தமது மனைவியிடம் கொடுத்து,

அவளை நோக்கி, "இப் பொருள்களை உன்னிடம் அன்பு கொண்ட மகளிர்க்கும், நீ அன்பு காட்டும் மகளிர்க்கும், மற்றும் உன் சுற்றத்தார்க்கும் கொடு. மேலும் உன்னிடமிருந்து மீண்டும் எவ்வகையிலும் பெற்றுவிடலாம் என்னும் கருத்துடன் நெடுநாளாக உனக்குப் பொருளுதவி புரிந்து வருவோர்க்கும், மற்றும் வேண்டியவர் வேண்டாதவர் என்னும் பேதமின்றி யாவர்க்கும் கொடு. என்னிடமிருந்து சம்மதம் பெற்றுத் தரவேண்டும் எனக் காத்திருக்க வேண்டாம். இப்பொருளால் நாமே சிறக்க வாழ வேண்டும் என்று கருதவேண்டாம். யாவர்க்கும் அளித்து நீயும் உண்க," என்றார்.

வறுமையால் நலிந்த நிலையையும் பொருள் பெற்ற இப்புலவரது பெருந்தன்மையையும் ஈகைக் குணத்தை யும் சிந்தியுங்கள். பண்டைக் காலத்தில் பெரும்பாலும் தமிழ் மக்கள் பலரும் இத்தகைய பெருங் குணம் வாய்ந்திருந்தார்கள் எனின் அது மிகையாகாது. புலவரேயன்றிப் பாணரும் இத்தகைய அருங்குணம் வாய்ந்திருந்தனர் என்பதற்குத் தமிழ் நூல்களில் சான்றுகள் பல வுள்ளன. என்னே புலவர் வீறு !

அரும்பதவுரை

சங்க காலம் - சுமார் 1800 ஆண்டுகட்கு முற்பட்ட காலம்; பெருமிதம் - வீரம், மீள்வர் - திரும்புவார்கள்; வாணிகப் பரிசிலன் - பரிசில் பெறுவதை வாணிகமாகக் கொண்டவன்; போற்றுபவன் - பெருமைப் படுத்துபவன்; கடுநோய் - கொடிய நோய்; காலந்தாழ்க்க - காலதாமதம் செய்ய; அகன்றார் - நீங்கினார்; அரியணை - சிங்காதனம்; வீற்றிருந்த - பெருமையோடு உட்கார்ந்திருந்த; காவன் மரம் - பண்டைத் தமிழரசர் தமது பெருமை விளங்கக் காவன்மரம் என்றொரு மரத்தை வளர்த்து வருவர்; அதற்குத் தீங்கு செய்வோரைக்

கடுமையாகத் தண்டிப்பர்; பகையரசரது காவலன் மரத்தை வெட்டுவதில் பெருமை கொள்வர்; இரவலர் - பிச்சை கேட்பவர்: புரவலர் - காப்பாற்றுபவர்; ஈவோர் - கொடுப்போர்; பேதம் - வித்தியாசம், வேறுபாடு; நலிந்த - வருத்தமடைந்த; மிகை - அதிகம்.

வினுக்கள்

1. பெருஞ் சித்திரனுர் பரிசில் வேண்டி யார் யாரிடம் சென்ருர்?

2. பெருஞ்சித்திரனுர் அதியமான் பரிசிலைப் பெற மறுத்தது ஏன்?

3. அவர் வெளிமானிடம் சென்றபோது நடந்தது என்ன?

4. குமணனிடம் பெருஞ்சித்திரனுர் தமது வறுமையை எவ்வாறு எடுத்துக் கூறினுர்?

5. பெருஞ்சித்திரனுர் இரண்டாவது தடவை இளவெளிமானிடம் சென்று கூறியதென்ன?

6. பரிசிற் பொருள்களை மனைவியிடம் கொடுத்துப் பெருஞ்சித்திரனுர் அவளை நோக்கிக் கூறியதென்ன?

7. இவர் வரலாற்ருல் சங்க காலப் புலவரைப்பற்றி நாம் என்ன அறியலாம்?

பயிற்சி

1. இளவெளிமானும் பெருஞ்சித்திரனுரும் என்பது பொருளாக ஒரு கட்டுரை வரைக.

2. இப் பாடத்தால் புலவர் வீறு விளங்கும் விதத்தை ஒரு கட்டுரையாக வரைக.

3. அரியணை, காவன்மரம், இரவலர், புரவலர், வாணிகப் பரிசிலன்—இச் சொற்களை அமைத்து முறையே ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

4. அதியமான், குமணன், இளவெளிமான்—இவர்களைக் குறித்துச் சிறு குறிப்பு வரைக.

5. இப்பாடத்தில் ஆருவது பாராவிற் கண்ட செய்திகளை உனது சொந்த வாக்கியங்களால் எழுதுக.

இலக்கணம்

புத்தகம், மேஜை, பேனு, கல்—இவை பொருள்களின் பெயர்களைக் குறிக்கின்றன. ஆதலால் இவை பொருட் பெயர்கள் ஆகும்.

காடு, தோட்டம், சென்னை, ஜில்லா, இராஜ்யம்—இவை இடங்களின் பெயர்களைக் குறிக்கின்றன. ஆதலால் இவை இடப் பெயர்கள் ஆகும்.

நாள், வாரம், மாதம், ஜனவரி, சித்திரை, பிரபவ—இவை காலங்களின் பெயர்களைக் குறிக்கின்றன. ஆதலால் இவை காலப் பெயர்கள் ஆகும்.

கண், கால், கிளை—இவை உறுப்புக்களின் பெயர்களைக் குறிக்கின்றன. இவை சினைப்பெயர்கள் ஆகும். (சினை - உறுப்பு).

நன்மை, தீமை, சிறுமை, பெருமை, கருமை, செம்மை—இவை குணங்களின் பெயர்களைக் குறிக்கின்றன. இவை குணப் பெயர் அல்லது பண்புப் பெயர் ஆகும்.

வருதல், நடக்கை, மறதி, நிற்றல், அழுகை—இவை தொழில்களின் பெயர்களைக் குறிக்கின்றன. இவை தொழிற்பெயர் எனப்படும்.

பொருட் பெயர், இடப் பெயர், காலப் பெயர், சினைப் பெயர், குணப் பெயர், தொழிற் பெயர் எனப் பெயர்ச் சொற்கள் ஆறு வகைப்படும்.

ஏதாவது ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச் சொல்லாம்.

6. வினு விடை

பல சமயங்களில் சிறுவர் பற்பல பொருள்களைப் பற்றி “இது என்ன?” “இது ஏன் இப்படியிருக்கிறது?” என்றெல்லாம் கேள்வி கேட்பதை நாம் பார்க்கலாம். இவ்விதம் கேட்கப்படும் கேள்விகட்குரிய விடைகள் சில சமயம் சிறந்த விஞ்ஞான வுண்மைகளைக் கொண்டனவாக இருக்கும். அவ்வகைக் கேள்விகட்கு ஏற்ற விடைகளை நாம் அவர்களுக்கு எடுத்துச் சொன்னுல் அவர்கள் சந்தேகம் நீங்குவதோடு, அவர்கள் சிறந்த அறிவைப் பெறவும் ஏதுவுண்டாகும். இவ்விதம் மறுமொழி கூறுங்கால் அவர்கள் கவனமாக அவற்றைக் கேட்பர். கவனமாகக் கேட்பதால் அவர்கள் மனத்தில் அச்செய்திகள் பசுமரத்தாணிபோல் பதியக்கூடும். மேலும் அவர்கள் தமக்குத் தெரியாத பொருள்களைப் பார்க்கும்போதெல்லாம் அவற்றைப்பற்றிய செய்திகளை அறிய ஆவல் கொள்வார்கள். இவ்வாறு சிறுவர் சிறந்த அறிவைப் பெறக் காரணமாயிருப்பதனுல் இங்கு அத்தகைய கேள்விகள் சிலவற்றைக் குறித்து அதற்கு விடையும் கூறுவோம்.

1. வினு: வாய் வழியாகச் சுவாசிக்கக் கூடாது; மூக்கினுல்தான் சுவாசிக்கவேண்டும். ஏன்?

விடை: வாய் சுவாசிப்பதற்காக ஏற்பட்ட கருவி அல்ல; மூக்குத்தான் சுவாசிப்பதற்காக ஏற்பட்ட கருவி. நமது மூக்கில் ரோமங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். நாம் சுவாசிக்கும் காற்றில் தூசி இருக்கும். இந்தத் தூசியில் நோய்க்கிருமிகள்

இருக்கக்கூடும். நாம் மூக்கு வழியாய்ச் சுவாசித்தால் மூக்கிலுள்ள ரோமங்கள் இந்தத் தூசியை உட்புக விடாமல் தடுத்துக் காற்றைமட்டும் உட்புகச் செய்கின்றன. அதனால் விஷக் கிருமிகள் சுவாசப் பைக்குள் புகமாட்டா. வாய் வழியாகச் சுவாசித்தாலோ தூசியையும் அதன் மூலமாக விஷக் கிருமிகளையும் உள்ளே புகாமல் தடுப்பதற்கு அங்கே ஒரு சாதனமும் இல்லை. அதனால் விஷக் கிருமிகள் சுவாசப் பைக்குள் புகுந்து நோய்களை உண்டாக்கக் கூடும். அதனால்தான் வாயால் சுவாசிக்கக்கூடாது; மூக்கால் சுவாசிக்க வேண்டும்.

2. வினா: கனவு உண்டாவதற்குக் காரணம் என்ன?

விடை: தூங்கும்போதுதான் நாம் கன்வு காண்கிறோம். சில சமயங்களில் கனவு காணாமல் நல்ல தூக்கம் ஏற்படுகிறது. இதற்குக் காரணம் பின்வருமாறு கூறப்படுகிறது. அதாவது நாம் நல்ல தூக்கம் தூங்கும்பொழுது நமது மூளை முழுவதும் வேலை செய்யாமல் அடங்கி யிருக்கிறது. நல்ல தூக்கம் இல்லாத சமயங்களில் மூளையின் சில பாகங்கள் வேலை செய்கின்றன. அவை தமது அனுபவங்களாக முன் பல சந்தர்ப்பங்களில் கண்டவைகளையெல்லாம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிடுகின்றன. சில சமயங்களில் அச்சம்பவங்கள் தொடர்ச்சியாக இருக்கும்; சில சமயங்களில் தொடர்ச்சியற்று வேறு வேறாகப் பலவகையாக இருக்கும். இப்படிச் சிந்திப்பவைகள் மனத்திற்குப் புலனாவதால் அவை கனவாக அமைகின்றன. கனவு சில சமயங்களில் ஒழுங்கான

தாயும், சில சமயங்களில் ஒழுங்கீனமானதாயும் இருப்பதற்குக் காரணமும் இதுவே.

3. வினு: நமக்கு ஒரு கண் இருந்தால் போதாதா? ஏன் இரண்டு கண்கள் இருக்க வேண்டும்?

விடை: நமது கண்கள் இரண்டிற்கும் இடையில் சுமார் இரண்டங்குல இடைவெளி இருக்கிறது. இதனுல் நாம் ஒரு பொருளேப் பார்க்கும்போது ஒரு கண்ணுல் பார்க்க முடியாத அதன் பாகத்தை மற்ருெரு கண் பார்க்கும். அதாவது வலது கண் ஒரு வஸ்துவின் வலது பக்கத்தில் இடது கண்ணேவிடக் கொஞ்சம் அதிகமான பக்கத்தையும், இடது கண் இடது பக்கத்தில் வலது கண்ணேவிடக் கொஞ்சம் அதிகமான பாகத்தையும் பார்க்கும். இதனுல் பொருளின் கன வடிவம் நமக்குப் புலப்படுகின்றது. இவ்வாறன்றி நமக்கு ஒரே கண் மட்டும் இருந்தால் பொருளின் கனம் நமக்குக் காணப்படாமல் பொருள் தட்டையாக நமக்குப் புலப்படும். அதாவது போட்டோ படங்களில் பொருள்கள் தட்டையாகக் காணப்படுவது போல்தான் நாம் இயற்கையிலும் பொருள்களேக் காண்போம்.

4. வினு: தேங்காயில் மூன்று கண்கள் உள்ளன. அவற்றில் ஒன்றின் மூலம்தான் முளே வெளிவருகிறது. ஆகவே அந்த ஒரு கண் போதாதோ? மற்ற இரண்டு எதற்காக இருக்கின்றன?

விடை: தேங்காயின் மேல் இக் கண்கள் மட்டுமன்றி மூன்று கோடுகளும் இருப்பதைப் பார்க்கலாம்.

இதனால் தேங்காய் மூன்று பிரிவுகளையுடையது என்று கூறலாமன்றோ. இன்னும் ஊன்றி நோக்கினால் மேற்கூறப்பட்ட மூன்று கண்களில் ஒவ்வொன்று ஒவ்வொரு பிரிவுக்குள் அடங்கியிருக்கக் காணலாம். இதைக் கொண்டு ஆதியில் தேங்காய் பனங்காயைப் போல் மூன்று பிரிவுகளை உடையதாக இருந்திருக்க வேண்டும் என்றும், பிறகு எக்காரணத்தாலோ அவை ஒன்றுபட்டு ஒரே தேங்காயாக மாறிவிட்டது என்றும் அறிஞர் ஊகிக்கிறார்கள். இப்படி ஒன்று ஆனதும் ஏதாவது ஒரு பிரிவின் மூலம் முளை கிளம்பினால் போதுமானதாகையால் தேங்காயின் ஒரு கண்மட்டும் திறக்கக்கூடியதாகவும் மற்ற இரு கண்களும் திறக்க இயலாதனவாகவும் ஆகிவிட்டன. ஆனால் மூன்று பிரிவுகள் இருந்தன என்பதற்கு அடையாளமாக உள்ளவை மட்டும் மறையாமல் அப்படியே இன்றும் உள்ளன. அதனால்தான் மூன்று கண்கள் உள்ளன.

5. வினா : பெருங்காயம் எங்கிருந்து எப்படிக் கிடைக்கிறது ?

விடை : பாரசீக தேசத்தில் பெருலா என்று ஒருவகைச் செடி விசேஷமாக வளர்கின்றது. அந்தச் செடி பெரிதாக வளர்ந்த பிறகு அதன் வேர்கள் பருமனாகி ஆகின்றன. ஆண்டுதோறும் ஏப்ரல் மே மாதங்களில் அச்செடிகளின் இலைகள் உதிர்ந்துவிடுகின்றன. அப்படி உதிர்ந்ததும் அச்செடிகளின் வேர்களின் மீது படிந்துள்ள மண்ணை அப்புறப்படுத்தி விட்டு வேறு புதிய மண்ணால் அவற்றை மூடுவார்கள். அப்பால் ஆறு வாரங்கள் கழித்து அம்மண்ணை நீக்கி விட்டு வேர்களைக் கீறுவார்கள். அதனால் அவ் வேர்களிலிருந்து பால் சுரந்து வந்து உறையும். இரண்டு

நாட்கள் கழித்து அப்படி உறைந்த பாலேச் சுரண்டி எடுப்பார்கள். இதுவே பெருங்காயமாகும். இதைப் பொட்டலங்களில் அடக்கம் செய்து வெளியூர்களுக்கு விற்பனேக்காக அனுப்புவார்கள்.

அரும்பதவுரை

ஏது - காரணம் ; **பசுமரம்** - பச்சைமரம், உலராத மரம் ; **ரோமங்கள்** - மயிர்கள் ; **உட்புக**-உள்ளே நுழைய ; **சாதனம்**-கருவி ; **சிந்திக்க** - நினேக்க, எண்ண, கருத.

வினுக்கள்

1. வாய் வழியாகச் சுவாசிக்கலாகா தென்பதற்கு என்ன காரணம் கூறப்படுகிறது ?

2. கனுக் காண்பதற்குக் காரணமாகக் கூறப்பட்டது யாது ?

3. பெருங்காயம் எப்படிக் கிடைக்கிறது ?

பயிற்சி

1. மேற்குறித்த கேள்விகளேப் போல உங்களுக்கு விளங்காத கேள்விகள் சிலவற்றை எழுதி அவற்றிற்குப் புத்தகங்கள் மூலமாகவோ, அறிஞர்கள் மூலமாகவோ விடைகளே அறிந்து அவ்வினுக்களின் அடியில் விடைகளேக் குறிக்க.

2. சிந்திக்க, நினேக்க, கருத, எண்ண - இவை ஒரு பொருட் சொற்கள். இவ்வாறே, கூறு, மனம், சமயம், நீக்கு இவற்றிற் குரிய ஒரு பொருட் சொற்களேக் குறிக்க.

3. மேற்குறித்தவாறு ஒரு பொருட் சொற்களாய்க் குறிக்கப் பட்டவற்றைக் கொண்டு முறையே ஒவ்வொரு வாக்கியம் அமைக்க.

இலக்கணம்

திணே

மனிதர், தேவர் ஆகியோரின் பெயர்கள் தமிழ் இலக்கணத்தில் **உயர்திணே** எனப்படும். உயர்திணே என்ருல் உயர்ந்த வகுப்பு என்பது பொருள். (திணே - வகுப்பு).

மனிதரல்லாத மற்றப் பிராணிகளும், உயிரில்லாப் பொருள் களும் தமிழ் இலக்கணத்தில் அஃறிணே எனப்படும். அஃறிணே என்ருல் தாழ்ந்த வகுப்பு என்பது பொருள். (அல் + திணே = அஃறிணே ; அல் - உயர்ந்தது அல்லாத அதாவது தாழ்ந்த ; திணே - வகுப்பு.)

உயர்திணே, அஃறிணே எனத் திணே இருவகைப்படும்.

பால்

இராமன், வேலன்—இவை ஆண்களைக் குறிக்கின்றன; இவை ஆண்பால் ஆகும். (பால் - பிரிவு; ஆண்பால் - ஆண் குறித்த பிரிவு.

சீதை, லலிதா—இவை பெண்களைக் குறிக்கின்றன. இவை பெண்பால்.

மனிதர், பெரியோர்—இவை பலரைக் குறிக்கின்றன. இவை பலர்பால்.

மரம், மேஜை—இவை ஒரு பொருளைக் குறிக்கின்றன. இவை ஒன்றன்பால்.

மரங்கள், மேஜைகள்—இவை பல பொருள்களைக் குறிக்கின்றன. இவை பலவின்பால்.

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் எனப் பால் ஐந்து வகைப்படும்.

எண்

எண் என்பது எண்ணிக்கையைக் குறிப்பது. ஒரு பொருளைக் குறித்து வருவது ஒருமை எண்; பல பொருள்களைக் குறித்து வருவது பன்மை எண்.

ஒருமை, பன்மை என எண் இரண்டு வகைப்படும்.

இடம்

நான், யான், நாங்கள், யாங்கள்—இவை மனிதர் தங்களைக் குறித்துக் கூறிக்கொள்ளும் போது சொல்லும் பெயர்களாம். ஆதலால் இவை தன்மை இடத்தைக் குறிக்கின்றன.

நீ, நீர், நீங்கள்—இவை மனிதர் தங்களுக்கு எதிரில் இருப்பவர்களைக் குறித்துக் கூறும் சொற்களாம். ஆதலால் இவை முன்னிலை இடத்தைக் குறிக்கின்றன.

அவன், அவள், அவர், அது, அவை—இவை மனிதர் பிறரைக் குறித்துக் கூறும் சொற்களாம். இவை படர்க்கை இடத்தைக் குறிப்பன ஆகும்.

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்று வகைப்படும்.

இடம் என்பது சொற்கள் வழங்கப்பட்டுவரும் இடமாகும். (தன்மை - தன்னைக் குறிப்பது; முன்னிலை - முன்னிற்பவரைக் குறிப்பது; படர்க்கை - மேற்குறித்த இருவரும் அல்லாத பிறரைக் குறிப்பது).

7. குடிசைத் தொழிலும் எந்திரத் தொழிலும்

தற்காலத்தில் குடிசைத் தொழிலையும் எந்திரத் தொழிலையும் பற்றி நிரம்பப் பேசப்படுகிறது. பலர் குடிசைத் தொழிலே நாட்டிற்கு நலந்தரும், அதனையே விருத்தி செய்ய வேண்டும் என்கின்றனர். சிலர் எந்திரத் தொழிலையே விருத்தி செய்யவேண்டும், அதுவே நன்மைதரும் எனக் கூறுகின்றனர். மஹாத்மா காந்தியடிகள் குடிசைத் தொழில்களை வளர்ப்பதே நல்லது எனக் கூறியதைக் கொண்டு பெரும்பாலோர் குடிசைக் கைத்தொழில்களைப் பெருக்குவதே சிறந்தது என்னும் எண்ணமுடையவர் களாயிருக்கின்றனர். இவ்விருவகைத் தொழில்களை யும் பற்றி இப்போது ஆராய்வோம்.

பெரிய எந்திரக் கருவிகளை வைத்துக்கொண்டு மனித உழைப்பு கொஞ்சமாகவும், எந்திரங்களின் உழைப்பு அதிகமாகவும் அமையத் தொழில்களைச் செய்வது எந்திரக் கைத்தொழிலாம். சிறிய எந்திரக் கருவிகளை வைத்துக்கொண்டு மனித உழைப்பு அதிக மாகவும், எந்திர உழைப்பு குறைவாகவும் அமையத் தொழில்களைச் செய்வது குடிசைத் தொழிலாம். எந்திரக் கைத்தொழிலில் குறைந்த கால அளவில், குறைந்த எண்ணிக்கையுள்ள மனிதரைக் கொண்டு ஏராளமாகச் செய் பொருள்களை உற்பத்தி செய்து விடலாம். குடிசைக் கைத்தொழிலிலோ நிறையத் தொழிலாளர் வேண்டும். நிறையக் கைத்தொழிற் பொருள்களைப் பெறக் காலதாமதம் அதிகமாகும்.

மேற்கூறிய காரணங்களால் எந்திரக் கைத் தொழிலே குடிசைக் கைத்தொழிலைவிட மேன்மை

யானது என்று தோன்றுகிறதல்லவா? இன்னும் கொஞ்சம் ஊன்றிப் பார்ப்போம். எந்திரக் கைத் தொழிலில் தொழில் செய்வோர் குறைவாக இருந்தால் போதுமாகையால் நாட்டிலுள்ள மக்கள் பலருக்கு வேலை கிடைக்காமற் போய்விடுகிறது. குறைந்த கால அளவில் எந்திரம் நிறையச் செயற்கைப் பொருள் களைச் செய்து குவித்து விடுகிறதாகையால் செயற் கைப் பொருள்கள் செய்வதற்குரிய மூலப் பொருள் கள் நிறைய நாட்டில் விளையவேண்டும். மேலும், செயற்கைப் பொருள்களை விற்றுப் பணமாக்கு வதற்கு விற்பனையிடங்கள் வேண்டும். பொருள்கள் விற்பனை செய்யப்படாவிட்டால், மேலும் பொருள் களைச் செய்ய இயலாமல் எந்திரத் தொழில் தடைபடக் கூடும். அப்போது எந்திரங்களில் போடப்பட்ட மூலதனம் வீணாகும். பொருள்கள் தேங்கி அழியும். குடிசைக் கைத்தொழிலில் இவ்விதத் தொல்லை கிடை யாது. அதனால் நாட்டில் பெரும்பாலோர் பிழைக்க வழியுண்டாகிறது. செய்பொருள்கள் தேங்காமல் விற்பனையாக இடமிருக்கிறது.

மேற்கூறியவற்றால் குடிசைத் தொழிலே மேலா னது என்று புலப்படக்கூடும். ஆயினும் அதுவே நன்மையானது என அறுதியிட்டுக் கூறிவிட முடி யாது. ஏனெனில் எந்திரக் கைத்தொழிலாகவே செய்யப்பட வேண்டிய பல தொழில்கள் நாட்டுக்கு இன்றியமையாதனவாய் உள்ளன. உதாரணமாக, காகிதம், இருப்புப்பாதை வண்டிகள், மோட்டார் வண்டிகள், கப்பல்கள், ஆகாய விமானங்கள், அவற்றிற்குரிய கருவிகள் முதலியவற்றைக் கூற லாம். நாகரிகம் மிகுந்த இக்காலத்தில் இப்பொருள் களெல்லாம் ஒரு நாட்டிற்குத் தேவையில்லை என்று



எந்திரக் கைத்தொழில்—காகிதம் செய்தல்

யாரும் கூற இயலாது. ஆகையால் இப்படிப்பட்ட தொழில்களை எந்திரங்களின் மூலமாகவே செய்ய வேண்டும்.

ஒரு நாட்டில் அந்த நாட்டினருக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் அமைந்திருக்கும் என்று சொல்ல முடியாது. தங்களிடம் இல்லாத பொருள்களை ஒரு நாட்டவர் வேற்று நாட்டிலிருந்து பெற வேண்டியிருக்கும். அப்படிப் பெற வேண்டுமானுல் அப்பிற நாட்டினர்க்குத் தங்கள் நாட்டிலுள்ள பொருள்களில் அவர்கள் விரும்புவனவற்றைக் கொடுத்தே பெற வேண்டியிருக்கும். இந்நிலையில் பிற நாட்டாருக்கு வேண்டிய பொருள்களை ஏராளமாக உற்பத்தி செய்ய வேண்டும். ஆதலால் அவ்வாறு உற்பத்தி செய்ய எந்திரக் கைத்தொழிலையே மேற்கொள்ள வேண்டும். வெளி நாடுகளுக்குக் கொண்டு சென்று வியாபாரம் செய்வதற்கு இயலாதனவாயும் உள் நாட்டிற்கு அவசியமானவையாயும் உள்ள பொருள்களை உற்பத்தி செய்வதற்குக் குடிசைத் தொழில்முறையே பயன் படுவதாகும்.

குடிசைக் கைத்தொழிலாயினும் எந்திரக் கைத் தொழிலாயினும் அவற்றை ஏற்படுத்தித் திறம்பட நடத்துவதற்கு அரசாங்கத்தார், குடிகள் என்னும் இரு திறத்தாருடைய முயற்சியும் வேண்டும். இருதிறத் தாரும் ஒத்துழைக்க வேண்டும். மிகப் பெரிய அளவில் செய்யப்பட வேண்டிய இயந்திரத் தொழிற்சாலைகளை அரசாங்கத்தாரே ஏற்படுத்தி நடத்தி வரலாம். மற்றுப் பொது மக்களால் நடத்தி வரத்தக்க தொழிற் சாலைகளை அவர்களையே நடத்துமாறு விட்டு, அரசாங்கத்தார் மேற்பார்வையிட்டு வரவேண்டும். குடிசைத் தொழிலிலும் இவ்வாறே சிலவற்றை அரசியலார் ஏற்



குடிசைக் கைத்தொழில்—ஆடைகள் செய்தல்

படுத்தியும், சிலவற்றைப் பொது மக்களைக் கொண்டு நடத்தி வரச் செய்தும் தொழில்கள் சிறந்த முறையில் நடந்துவருமாறு அரசியலார் கண்காணித்து வர வேண்டும்.

தற்சமயம் நமது பாரத நாட்டில் இவ்விதம் குடிசைத் தொழில்களாகச் செய்து வரக் கூடிய தொழில்கள், கயிறு பின்னுதல், பாய்பின்னுதல், விளையாட்டுச் சாமான்கள் செய்தல், சோப்புச் செய்தல், தீக்குச்சி செய்தல், கம்பளி நெசவு, ஜமக்காள நெசவு முதலியவைகளாம். ஸ்விட்ஸர்லந்து நாட்டில் செய்வதுபோல மின்சாரக் கருவிகள், கைக்கடியாரங்கள் போன்ற பொருள்களையும், ஜப்பானைப்போலப் பட்டு நெசவையும் குடிசைத் தொழில்களாகச் செய்யலாம். இவற்றைத் தவிர, சில தொழில்கள் கிராமத்தவரால் துணைத் தொழில்களாகச் செய்யக் கூடியவைகளாகவுள்ளன. கிராமத்தில் விவசாயத் தொழில் புரிவோர் வருஷத்தில் பாதி நாள் வேலையில்லாத நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள், ஆடுமாடு வளர்த்தல், கோழி வாத்து வளர்த்தல், தேனீ வளர்த்தல், சர்க்கரை செய்தல் போன்ற தொழில்களைச் செய்வதால் நல்ல பயனடையலாம்.

நமது தமிழ் நாட்டில் நீண்ட காலமாகக் கிராமத்தவர்களால் இத்துணைத் தொழில்கள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் அவை தற்கால நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப மாறுபடாமல் பண்டை வழியிலேயே செய்யப்படுவதால் அதிக பயன் தரவில்லை. சிறந்த மேனாட்டு நாகரிக முறைகளைப் பின்பற்றியும் கூட்டுறவு முறையில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியும் கிராமத்தவர் அத்தொழில்களை நடத்தி வருவாரானால் நாடு நலமடையும் என்பதில் ஐயமில்லை.



கோழி வளர்த்தல்

அரும்பதவுரை

விருத்திசெய்ய - அதிகமாக்க, வளர்க்க; செய்பொருள்கள் - செய்யப்பட்ட பொருள்கள்; மூலப்பொருள்கள் - செயற்கைப் பொருள்கள் செய்வதற்காக உபயோகிக்கப்படும் இயற்கைப் பொருள்கள்; மூலதனம் - கைத்தொழில்களை நடத்துவதற்காக முதல் பணமாகப் போடப்படும் பணம்; அறுதியிட்டு- முடிவாக; திறம்பட - நன்றாக; கண்காணித்து - கவனித்து.

வினாக்கள்

1. எந்திரத் தொழிலாவது யாது? குடிசைத் தொழிலாவது யாது?

2. எந்திரத் தொழிலால் ஏற்படும் நன்மை யாது? குடிசைத் தொழிலால் ஏற்படும் நன்மை யாது?

3. எந்திரத் தொழிலாகச் செய்யப்பட வேண்டிய தொழில்கள் எவை? ஏன் அவற்றை எந்திரங்களின் மூலமாகவே செய்ய வேண்டும்?

4. குடிசைத் தொழில்களாகச் செய்ய வேண்டியவை எவை? ஏன் அவற்றை அம்முறையில் செய்ய வேண்டும்?

5. துணைத் தொழில்கள் எவை? அவற்றை யாவர் செய்ய வேண்டும்?

பயிற்சி

1. குடிசைத் தொழிலைப்பற்றி நீ அறிந்தவைகளைப் பத்து வரியில் எழுது.

2. எந்திரத் தொழிலைப்பற்றி நீ அறிந்தவைகளைப் பத்து வரிகளிற் கூறு.

3. நீ பார்த்த ஒரு எந்திரத் தொழிற்சாலை அல்லது குடிசைத் தொழிற்சாலையைப் பற்றி ஒரு கட்டுரை எழுது.

4. மூன்றாவது பாராவை மௌனமாய் வாசித்து அதிற் கண்ட செய்திகளை உன் சொந்த வாக்கியங்களில் எழுது.

இலக்கணம்

வேற்றுமை

பெயரின் பொருளை வேறு படுத்துவது தமிழ் இலக்கணத்தில் **வேற்றுமை** எனப்படும். வேற்றுமையைக் குறிப்பதற்காகப் பெயர்களோடு சில சொற்கள் சேர்த்துக் கூறப்படும். இவை **வேற்றுமை உருபுகள்** எனப்படும்.

வேற்றுமையில் எட்டு வகை உண்டு. அவை முறையே முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை,

நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆரும் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என்று கூறப்படும்.

முதல் வேற்றுமை—

பொருளின் இயல்பான பெயரே முதல் வேற்றுமை ஆகும். இராமன் வந்தான் - இதில் **இராமன்** முதல் வேற்றுமையை ஏற்றது.

முதல் வேற்றுமை எழுவாயாக இருக்கும். அதனுல் அதை எழுவாய் வேற்றுமை என்றும் சொல்வதுண்டு.

இரண்டாம் வேற்றுமை—

இதன் உருபு ஐ என்பது.

இராமனை, பசுவை - இவை இரண்டாம் வேற்றுமை.

மூன்ரும் வேற்றுமை—

ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் என்பவை மூன்ரும் வேற்றுமையைக் குறித்து வரும் உருபுகளாம்.

இராமனுல், அறத்தான், வேலனெடு, வேலனேடு, வேலனுடன் - இவை மூன்ரும் வேற்றுமை.

நான்காம்வேற்றுமை—

கு என்பது நான்காம் வேற்றுமை உருபு. அவனுக்கு, கூலிக்கு - இவை நான்காம் வேற்றுமை.

ஐந்தாம் வேற்றுமை—

இல், இன், இருந்து, நின்று - இவை ஐந்தாம் வேற்றுமை உருபுகளாம்.

அவனில் இவன் பெரியவன் அவனின் இவன் பெரியவன் காட்டிலிருந்து கொணர்ந்தான் வீட்டினின்று வந்தான்	அவனில், அவனின், காட்டிலிருந்து, வீட்டினின்று இவை ஐந்தாம் வேற்றுமை.

ஆரும் வேற்றுமை—

அது, உடைய என்பவை ஆரும் வேற்றுமை உருபுகளாம்.

இராமனது, இராமனுடைய - ஆரும் வேற்றுமை.

ஏழாம் வேற்றுமை—

கண், இல், இடத்தில் என்பவை ஏழாம் வேற்றுமை உருபுகளாம். வீட்டின் கண், வீட்டில், வீட்டினிடத்தில்—இவை ஏழாம் வேற்றுமை.

எட்டாம் வேற்றுமை—

இது கூப்பிடுவதைக் குறிக்கும். ஆ, ஏ முதலியன இவ் வேற்றுமைக்கு உருபுகளாக வரும்.

அண்ணு வா, தந்தையே பார் - இவற்றில் அண்ணு, தந்தையே இவை எட்டாம் வேற்றுமை.

8. குடியானவனும் குட்டிப் பேயும்

ருஷ்யப் பெரியார் **டால்ஸ்டாய்** என்பவர் மிகச் சிறந்த எழுத்தாளராவர்; அவரது சிறுகதைகள் உலகப் பிரசித்தி பெற்றவை. அவை சிறந்த நீதிகளை அடிப்படையாகக் கொண்டவை; நுட்பமான கருத்துக்கள் அமைந்தவை. அவற்றுள் ஒன்றை இங்குத் தருகின்றோம்.

ஓரூரில் ஒரு ஏழைக் குடியானவன் இருந்தான். அவன் தனக்குச் சொந்தமான சொற்ப நிலத்தில் நாடோறும் பாடுபட்டுழைத்து எளிய வாழ்க்கையை நடத்தி வந்தான். அதனால் பொன் செய்யும் மருந்தாம் போதுமென்னும் மனத்தைப் பெற்றிருந்தான்.

அவன் தினமும் காலையில் காலையுணவு உண்ட பின் நண்பகலுக்கென்று கொஞ்சம் உணவைக் கட்டி எடுத்துக்கொண்டு தன் வயலுக்குச் செல்வான். நடுப்பகல் வரையில் உழைத்து வேலை செய்தபின் தான் கொணர்ந்த உணவை உண்டு சற்று இளைப்பாறுவான். பிறகு தன் வேலையைத் தொடங்கி மாலைவரை வேலை செய்வான். அப்பால் தன் வீடு செல்வான்.

ஒரு நாள் அவன் மேற்கண்டவாறு நடுப்பகல் வரையில் உழைத்து வேலை செய்துவிட்டுத் தான் கொணர்ந்திருந்த உணவை உண்ணப் போனான். உணவைக் காணவில்லை. அங்குமிங்குமாகப் பல விடங்களில் அதைத் தேடினான். அது அகப்படவில்லை. "நல்லது, யாரோ அதை எடுத்துத் தின்றிருக்க வேண்டும். போனால் போகிறது. பாவம்! பசியால் வாடியவர்கள் போலும்! தின்றுவிட்டுப் போகட்டும்!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு தண்ணீரை

மட்டும் அருந்திச் சிறிது இளைப்பாறியிருந்து தன் வேலையை மீண்டும் தொடங்கினுன்.

குடியானவனது உணவைத் திருடித் தின்றது ஒரு குட்டிப் பேய் ஆகும். அது தன் எஜமானனுகிய பெரிய பேயின் கட்டளைப்படி அக்குடியானவனது மனத்தைக் கெடுத்து அவனைப் பாவியாக்க வந்திருந்தது. அதற்காகவே அது உணவைத் திருடித் தின்றது. குடியானவன் தன் சோற்றைத் திருடியவனைத் திட்டுவான் என அது எதிர்பார்த்தது. "ஆ! இவன் 'தின்ருல் தின்றுவிட்டுப் போகட்டும்' என்று சொல்லிவிட்டானே! திட்டினுல் இவன் மனம் கெடும். இவன் விரைவில் பாவியாவான், என்று எண்ணினேனே! என் எண்ணத்தில் மண்ணைப் போட்டானே!" என்று வருத்தப்பட்டுக்கொண்டு தன் இருப்பிடம் சென்றது.

அங்கே பெரிய பேய் அதைப் பார்த்து, "உன் செய்தி என்ன? நீ குடியானவனைக் கெடுத்தாயா?" என்று கேட்டது.

"இல்லை! என் முயற்சியில் தோல்வியுற்றேன்!"

"அப்படியா! நீ என்ன உபாயம் செய்தாய்?"

"நான் அவன் சோற்றைத் திருடினேன்! அவன் அதற்காகக் கோபங் கொள்ளாமல் போனுல் போகிறது என்று இருந்துவிட்டான்"

"முட்டாள்! மறுபடியும் போ! எப்படியாவது அவனைக் கெடுக்கவேண்டும்! தெரிகிறதா? மூன்று ஆண்டுகளுக்குள் நீ இவ்வேலையைச் செய்து முடிக்காவிட்டால் உனக்குக் கடுந்தண்டனை யளிப்பேன்."

"சரி, முயன்று பார்க்கிறேன், எஜமானே!"

இவ்வாறு சொல்லிவிட்டு மறுபடியும் அது குடியானவனிடம் வந்தது. ஒரு வேலையாள்போல் உருவம் எடுத்துக்கொண்டு அது அவனிடம் வேலைக்

13448

கமர்ந்தது. அவ்வாண்டில் மழை சரியாகப் பெய்யாது என்பதை அறிந்த அப்பேய் அக்குடியானவனை அவனுக்குச் சொந்தமானதொரு சதுப்பு நிலத்தில் மட்டும் பயிரிடுமாறு அவனுக்குப் புத்திமதி கூறியது. குடியானவன் அப்படியே செய்ய, அவ்வாண்டு அவனுக்கு மட்டும் நிறையத் தானியம் விளைந்தது. மற்றையோர் மேட்டு நிலங்களில் பயிரிட்டமையால் நீரில்லாது வயல்கள் வறண்டு போக பெருநஷ்டமடைந்தனர்.

அடுத்த ஆண்டு அப்பேய் குடியானவனை மேட்டு நிலத்தில் பயிரிடுமாறு வற்புறுத்தியது. ஏனெனில் அவ்வாண்டில் நிறைய மழை பெய்யும் என்பது அதற்குத் தெரியும். மற்றவர்கள் பள்ளமான நிலங்களில் பயிரிட்டார்கள். அவ்வாண்டு நிறைய மழை பெய்ததால் மற்றையோரது பயிர்கள் எல்லாம் வெள்ளத்தால் அழிந்தது. பேயால் உதவி பெற்ற குடியானவனுக்கு மட்டும் நிறையத் தானியம் கிடைத்தது.

இவ்வாறு இரண்டு ஆண்டுகளில் அளவுக்குமேல் நிறையத் தானியம் கிடைக்கப்பெற்றமையால் அக்குடியானவன் ஆடம்பர வாழ்க்கையில் இறங்கினன். தீய நண்பர் உறவு அவனுக்குக் கிட்டியது. குடியும் கூத்தும் கேளிக்கையுமாய் வாழ்ந்த அவன் தருமசிந்தனை அற்றுப்போனவனுனன். ஒரு நாள் அவன் பல நண்பரோடு விருந்துண்டு இருக்கையில் ஏழையொருவன் பசியால் வாடி அவ்விடத்தையடைந்தான். குடியானவனிடம் தன் பசியைப் போக்க ஏதாவது சிறிது உணவு கொடுக்குமாறு மன்றுடினன். குடியானவன் குடிவெறியில் "போ! ஒழிந்து போ, இங்கே ஒன்றுமில்லை! இன்னும் நிற்கிருயா! போகிருயா, உதைக்கட்டுமா?" என்று கத்தினன். பிச்சைக்கு

வந்தவன் பின்னும் விடாது கெஞ்சவே, குடியானவன் கோபம் கொண்டு அவனை அடித்து விரட்டினான்.

குடியானவனது இச்செயலையெல்லாம் குட்டிப் பேய் பெரிய பேய்க்குக் காட்டியது. பெரிய பேய் "இப்போது நீ செய்தது சரி! அளவோடுகூடிய செல்வமுடையவர்களாய் உழைத்துண்பவர்க்கு மனத் திருப்தியும் தருமகுணமும் இருக்கும்! அளவிற்கு மேல் செல்வமுடையவர்கள் ஆடம்பர வாழ்க்கையில் இறங்குவார்கள்; மனத்திருப்தி அற்று விடுவார்கள்; தருமகுணத்தை மறந்து விடுவார்கள்; தகாத செயல் களில் இறங்கிப் பாவிகளாவார்கள். நீ இதனை அறிந்து தக்க உபாயம் செய்தாய். நமது பேய்க் குலத்திற்குப் பெரும்புகழ் வருவித்தாய்! அதனால் நீ இன்றுமுதல் குட்டிப் பேய்களுக்கெல்லாம் தலைவனாக இருப்பாயாக!" என்று சொல்லி அவ்வாறே அதனைத் தலைமைப் பேய் ஆக்கிற்று.

அரும்பதவுரை

எழுத்தாளர் - நூலியற்றுவோர்; போதும் என்னும் மனம் - மனத்திருப்தி; "போதும் என்னும் மனமே பொன் செய்யும் மருந்து" என்னும் பழமொழி இவ்வாக்கியத்தில் பொருந்தியுளது; நண்பகல் - நடுப்பகல், உபாயம் - தந்திரம்; சதுப்பு நிலம் - நீர்தேங்கிச் சேறும் நீருமாய் உள்ள நிலம்; வற்புறுத்தியது - கட்டாயப் படுத்தியது; அற்றுப் போனவன் - இல்லாமற் போனவன்.

வினாக்கள்

1. குடியானவனைக் கெடுக்கக் குட்டிப் பேய் முதலில் செய்த சூழ்ச்சி என்ன?

2. குட்டிப் பேயினது முதல் சூழ்ச்சி தோற்றுப்போனது எப்படி?

3. இரண்டாம் முறையாகக் குடியானவனைக் கெடுக்கக் குட்டிப் பேய் செய்த உபாயம் என்ன?

4. குட்டிப் பேயின் இரண்டாவது உபாயம் எப்படிப் பலித்தது ?

5. பெரிய பேய் குட்டிப் பேயினது செயலைப் புகழ்ந்து பேசியது என்ன ?

பயிற்சி

1. இக்கதையை உன் சொந்த வாக்கியங்களில் எழுது.

2. குட்டிப் பேய்க்கும் பெரிய பேய்க்கும் நடந்த சம்பாஷணையை உன் சொந்த வாக்கியங்களில் எழுது.

3. போதும் என்னும் மனமே பொன் செய்யும் மருந்து—இதனை அமைத்து ஒரு வாக்கியம் எழுது.

4. மேற்கண்ட பழமொழிக்கிணங்க ஏதாவது ஒரு கதை கூறு.

5. வாக்கியங்களில் அமைக்க : எழுத்தாளர், நண்பகல், உபாயம், வற்புறுத்தியது.

இலக்கணம்

வினைச்சொல்

செயப்படுபொருள் குன்றியவினை - செயப்படுபொருள் குன்றுவினை

கண்டான், தின்றான், தேடினான் - இவ்வினைச் சொற்கள் எதைக் கண்டான் ? எதைத் தின்றான் ? எதைத் தேடினான் ? என வினவுதற்கு ஏற்றவாறு உள்ளன. அதாவது இப்படிக் கேட்கும்போது, மரத்தைக் கண்டான், பழத்தைத் தின்றான், புத்தகத்தைத் தேடினான் என இவற்றிற்கு விடை வருகின்றன. இவற்றுள் மரத்தை, பழத்தை, புத்தகத்தை என்பன செயப்படு பொருள்கள். இதனால் இவ்வினைச் சொற்களுக்குச் செயப்படு பொருள்கள் உள்ளன. இவ்வாறு செயப்படு பொருள் உள்ள வினை, **செயப்படுபொருள் குன்றுவினை** எனப்படும். (குன்று - குறையாத அதாவது உள்ள).

நின்றான், நடந்தான், வந்தான் - இவ்வினைச் சொற்கள் எதை நின்றான் ? எதை நடந்தான் ? எதை வந்தான் ? எனக் கேட்க இயலாதவாறு உள்ளன. அதாவது அப்படிக் கேட்டால் விடை கிடைக்காது. இப்படி உள்ள வினைகளுக்குச் செயப்படுபொருள் இல்லை. இதனால் இவை **செயப்படுபொருள் குன்றியவினை** எனப்படும். (குன்றிய - குறைந்த அதாவது இல்லாத).

9. பாலை நிலம்

பண்டைத் தமிழர் நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, **மருதம்**, நெய்தல் என நால் வகையாகப் பிரித்தனர். இதனுல் பூமிக்கு **நானிலம்** என்னுமோர் பெயரும் ஏற்பட்டது. இந்நால் வகையுள் மருதமும் நெய்தலும் எப்போதும் நீர்வளமுள்ள இடங்களாம். ஆதலின் இவை தமது நிலை கெடாது இருப்பனவாகும். முல்லையும் குறிஞ்சியும் இவ்வாறன்றிச் சிற்சில காலங்களில் நீர்வளத்தால் செழிப்பு மிகுந்தும், சிற்சில காலங்களில் நீரைப் பெருது வளங்குன்றி முறைமை திரிந்தும் இருக்கும். இங்ஙனம் முறை திரிந்து வளங்குன்றிய நிலத்தைப் **பாலை நிலம்** எனத் தமிழர் கூறினர். இப் பாலை நிலம் பிற்காலத்தில் நிலத்தின் ஐந்தாவது வகை யாகக் கொள்ளப்பட்டது.

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை என்பதோர் படிவம் கொள்ளும்" என்று இலக் கணம் கூறுகிறது.

பாலை நிலத்தின் தன்மையைப் பற்றித் தமிழ் நூல்கள் பலவற்றில் விரிவாகச் செய்திகள் கூறப் பட்டுள்ளன. பாலை நிலத்தில் பரற்கற்களும் முள்ளும் எங்கும் நிறைந்திருக்கும். கள்ளிச் செடிகளும் முட் புதர்களுமே அங்குள்ள தாவரங்களாம். குடிநீர் கிடைப்பது அருமை. மக்கள் தொகை அங்கு மிகக் குறைவு. அங்குள்ள மக்கள் சிறுசிறு கூட்டத்தாராய் ஆங்காங்குச் சிறு குடில்களில் வாழ்ந்திருப்பர். அவர்கள் வழிப்பறி செய்து பிழைப்பவர். நரி, நாய் போன்ற சில கொடிய வனவிலங்குகளும், பருந்து, கூகை போன்ற சில கொடிய பறவைகளுமே அங்குள்ள பிராணிகளாம்.

பாலை நிலத்து மக்கள் துர்க்கையை வணங்கி வந்தனர். ஆடு, கோழி முதலியவற்றைப் பலியிட்டு அத் தெய்வத்தை வழிபடுவார்கள். வீரம் மிகுந்த அம்மக்கள் தங்களுடைய தலைகளையே அரிந்து அத் தெய்வத்திற்குப் பலியிடுவதும் வழக்கமாம். அவர்கள் அரசரது படைகளில் போர் வீரராய்ச் சேர்ந்தும், பாலை நிலத்து வழிகளைக் காக்கும் காவல் வீரராய் அமைந்தும் பணியாற்றி வருவது உண்டு.

இவையெல்லாம் தமிழ் நூல்களிற் காணும் செய்திகளாம். இனித் தற்காலத்தில் உலகிலமைந்துள்ள பாலை நிலங்களின் செய்திகள் சிலவற்றை ஆராய்வோம்.

உலகிலுள்ள பாலை வனங்களை **உஷ்ணப் பாலை வனம், குளிர்ப் பாலைவனம்** என இரு வகையாகப் பிரிக்கலாம். உஷ்ணப் பாலைவனங்களில் பெரியது ஆப்பிரிக்காவின் வடபகுதியிலுள்ள '**சகாரா** பாலைவனமாகும். குளிர்ப் பாலை வனங்களில் பெரியது ஆசியா கண்டத்தின் நடுவிலுள்ள **கோபி** பாலைவனமாம். உஷ்ணப் பாலைவனத்தில் பகற் காலத்தில் மிகுந்த வெப்பமும், இரவில் மிகுந்த குளிர்ச்சியும் ஏற்படும். குளிர்ப் பாலைவனத்திலோ எப்போதும் கடுங்குளிராய் இருக்கும்.

பாலை வனங்கள் பெரும்பாலும் ஒரே மணற் காடாய் இருக்கும். ஆங்காங்குச் சிற்சில இடங்களில் புல் தரைகளும் பேரீச்சமரத் தோப்புக்களும் உண்டு. இவ்விடங்களில் மட்டும் நீரூற்றுக்கள் காணப்படும். நீரூற்றுக்களும் பேரீச்ச மரங்களும் உள்ள இடம் **ஓயஸிஸ்** எனப்படும். **பாலைவனச்சோலை** என்பது இதன் பொருள். பாலைவனத்தில் இவ்விடங்களே மக்கள் தங்கி வாழும் இடங்களாம். இங்குள்ள



பாலைவனக் காட்சிகள்

1. பாலைவன வாசிகள் 2. பாலைவனக் கூடாரம்
3. பாலைவனச் சோலை 4. சகாராவில் ஒட்டகப் பிரயாணம்
5. பாலைவனச் சோலையருகே கூடாரம் அமைத்துத் தங்குதல்
6. தண்ணீர்ப் பை.

மக்கள் கூடாரங்களில் வசிப்பார்கள். அவர்கள் அடிக்கடி கூடாரங்களைப் பெயர்த்துக் கொண்டு இடம் மாறி வசிப்பார்கள்.

பாலைநில மக்கள் சுதந்திர உணர்ச்சியும் வீரமும் மிக்கவர்கள் ஆயினும் பாடுபட்டுழைத்துத் தொழில் களைப் பெருக்கிச் சிறக்க வாழ்வதில் ஊக்கம் உடைய வர்கள் அல்லர். அவர்களில் சிலர் குதிரைகளை வளர்க் கிருர்கள். சிலர் ஆடுகளை மேய்த்து ஜீவனம் செய்கிருர்கள். பொதுவாக எல்லோரும் ஒட்டகங்களை வளர்ப்பர். பேரீச்சம் பழமும் மாமிசமும் அவர் களுடைய முக்கிய உணவாகும்.

பாலை வனத்தில் பிரயாணம் செய்வதற்கு ஒட் டகமே ஏற்ற சாதனமாகும். பாலைவனத்துக் கொடு மையைத் தாங்கி நடப்பதற்கேற்றவாறு அதன் உடல் அமைந்திருக்கிறது. பாலை வனத்தில் நீர் கிடைப்பது அருமையாகையால் ஒட்டகம் ஒரு தடவை நிறைய நீர் குடித்துப் பின் பல நாள் வரையில் நீர் குடிக்காமல் உயிர் வாழும்படி அதன் உடலில் வசதி ஏற்பட் டுள்ளது. மணலில் பாதம் புதையாமல் சுலபமாக நடந்து செல்லுமாறு அதன் பாதம் பிளவு பட்டதாக அமைந்திருக்கிறது. இன்னும் பாலைவனத்தில் வீசும் மணற் காற்று அதன் கண்ணிலும் மூக்கிலும் மணலை வாரி யிறைத்தாலும் அவற்றையெல்லாம் பொருட்படுத் தாமல் இருக்குமாறு அதன் கண்ணிலும் மூக்கிலும் வசதியான ஏற்பாடுகள் அமைந்துள்ளன.

பாலை வனத்திலுள்ள மற்ருெரு முக்கியமான பிராணி தீப்பறவையாகும். இது கோழியினத்தைச் சேர்ந்தது. தலை முதல் பாதம் வரையில் இதன் உயரம் சுமார் ஐந்தடியிருக்கும். இது குதிரையைக் காட்டிலும் வேகமாய் ஓட வல்லது. தன் முதுகில்

ஒரு மனிதனைச் சுமந்து கொண்டு ஓடும் ஆற்றல் இதற்குண்டு. இது நேராய் ஓடுமானால் எந்தப் பிராணியும் இதைப் பிடிக்க முடியாது. இது வளைந்து வளைந்து ஓடும் சுபாவம் உடையதாதலால், இதைப் பிடிப்பவர்கள் வேகமாய் ஓடும் குதிரைகளில் ஏறிக் கொண்டு குறுக்காய்க் குதிரைகளைச் செலுத்தி இதைப் பிடிப்பார்கள். ஆயினும் நீண்ட நேரம் துரத்திய பிறகே இதைப் பிடிக்க இயலும். ஓடிக் களைத்துப் போனால் இது ஏதாவது ஒரு புதருக்குள் தலையை மட்டும் நுழைத்துக் கொண்டு நிற்கும். தலையை மறைத்துக் கொண்டால் உடல் முழுவதையும் மறைத்துக் கொண்டது போல இதன் எண்ணம் போலும்! இது இப்படியிருக்கும் சமயங்களில் மனிதர் வந்து இதைப் பிடித்துக் கொண்டு விடுவார்கள்.

பாலை வனத்தில் இரண்டு அதிசயங்கள் நிகழ்கின்றன. ஒன்று கானல் நீர்த் தோற்றம். கானல் நீர்த் தோற்றமாவது பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைந்த மணற் பரப்பில் தூரத்தில் பெரிய நீர்நிலை இருப்பது போன்ற தோற்றம். உண்மையில் அவ்விடங்களில் நீர் கிடையாது. இத் தோற்றங்களைக் கண்டு மக்களும் விலங்குகளும் அந்நீருள்ள இடத்தை அடைய நடந்து ஏமாறிப் போவது உண்டு. இப்படி ஏமாறுவதை நம் தமிழ் நூல்களும் எடுத்துக் கூறியிருக்கின்றன. உஷ்ண மிகுதியால் நிலப்பரப்பின் மீது ஏற்பட்டுள்ள காற்று மண்டலத்தின் அசைவே இத் தோற்றத்திற்குக் காரணம் என்று சொல்லுகிறார்கள்.

பாலை வனத்தில் பிரயாணம் செய்வோர் சில சமயங்களில் தூரத்தில் வானத்தில் பெரிய பெரிய

நகரங்கள் தலை கீழாகத் தொங்கும் தோற்றத்தைக் காண்பார்கள். இது பாலைவனத்து மற்றொரு அதிசயமாம். வானத்திலுள்ள தூசியணுக்களே இவ்விதம் தூரத்திலுள்ள நகரங்களைப் பிரதிபிம்பமாக அமையச் செய்து காட்டுகின்றன என்று கூறப்படுகிறது.

அரும்பதவுரை

வளம் - செழிப்பு; முறைமையில் - தன்மையினின்றும்; திரிந்து - வேறுபட்டு; படிவம் - வடிவம், உருவம்; பரற்கற்கள் - சிறுசிறு கூழாங்கற்கள்; குடில் - குடிசை; கூகை- ஆந்தையினத்தைச் சேர்ந்த ஒரு பறவை; துர்க்கை - காளி; பணியாற்றி - தொழில் செய்து; சாதனம் - கருவி; சுபாவம்- இயற்கைத் தன்மை - குணம்; நீக்கமற - (நீக்கம் + அற) - நீங்குதல் இல்லாத அதாவது பொருந்தியிருக்கிற; பிரதிபிம்பம் - எதிர் உருவம்.

வினாக்கள்

1. நானிலம்—குறிப்பு வரைக.
2. பாலை நிலம் எப்படியிருக்கும்?
3. பாலை நிலத்து மக்கள் வாழ்க்கையை விவ்ரி.
4. பாலை நிலத்தைப்பற்றித் தமிழ் நூல்களால் அறியப்படும் செய்திகள் எவை?
5. தீப்பறவையின் இயல்பு யாது? அதைப் பிடிப்பது எப்படி?
6. பாலை நிலத்து அதிசயங்கள் எவை? அவற்றை விளக்கிக் கூறுக.

பயிற்சி

பின் கண்ட வாக்கியங்களைக் குறிப்பிட்டவாறு மாற்றியமைக்க:

1. பாலைவனத்தின் தன்மையைப் பற்றித் தமிழ் நூல்கள் பலவற்றில் விரிவாகச் செய்திகள் கூறப்பட்டுள்ளன. (இதில் பயனிலை கூறுகின்றன என அமையுமாறு இவ்வாக்கியத்தை மாற்றியமைக்க.)

2. அவர்கள் அடிக்கடி கூடாரங்களைப் பெயர்த்துக்கொண்டு இடம் மாறி வசிப்பார்கள். (இதில் அவர்கள் என்பதற்குப் பதிலாக நாங்கள், நீங்கள் என்பதை வைத்து அதற்கேற்றவாறு வாக்கியத்தை மாற்றி அமைக்க.)

3. பாலை வனத்திலுள்ள மற்றொரு முக்கியமான பிராணி தீப்பறவையாகும். (தீப்பறவை என்பதை இவ்வாக்கியத்தின் முதற் சொல்லாக அமைத்து இவ்வாக்கியத்தைப் பொருள் கெடாமல் மாற்றி எழுதுக.)

இலக்கணம்

வினைமுற்று

இருந்தான், நின்றான், பேசினான்—இவ்வினைச் சொற்கள் முடிந்த பொருளை உடையனவாக இருப்பதை அறிக. இவ்வாறான வினைகள், வினைமுற்றுக்கள் எனப்படும்.

பெயரெச்சம்

வந்த, போன, இருக்கிற, நிற்கும்—இவ்வினைகள் பொருள் முடிவு பெறாமல் நிற்கின்றன. பொருள் முடிவு பெற வேண்டுமானால்,

வந்த மனிதன்
போன இடம்
இருக்கிற நேரம்
நிற்கும் பசு

இவ்வாறு ஏதாவது ஒரு பெயர்ச் சொல்லை இவற்றோடு சேர்க்க வேண்டும்.

இவ்வாறு பெயர்ச் சொல்லோடு கூடிய பொருள் முற்றுப் பெறுமாறு உள்ள வினை, பெயரெச்சம் எனப்படும்.

வினையெச்சம்

இருந்து, செய்ய, நின்றால்—இவ்வினைச் சொற்களும் பொருள் முற்றுப் பெறாத நிலையில் உள்ள வினைச் சொற்களாம். பொருள் முற்றுப் பெற வேண்டுமானால் இவற்றுடன்,

இருந்து பார்த்தான்
செய்ய இருந்தான்
நின்றால் கிடைக்கும்

இவ்வாறு ஏதாவது ஒரு வினைச் சொல்லை இவற்றோடு சேர்க்க வேண்டும்.

இவ்வாறு வினைச் சொல்லோடு கூடிப் பொருள் முற்றுப் பெறுமாறு உள்ள வினை, வினையெச்சம் எனப்படும்.

வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என வினைச் சொல் மூன்று வகைப்படும்.

10. அழகுணர்ச்சி

அழகுணர்ச்சியைப் பற்றி அறியுமுன் அழகைப் பற்றி அறிதல் வேண்டும். அழகு என்பது என்ன? அது வரையறுக்க இயலாததொன்ரும். பொதுவாகக் கூறப்போனுல், அமைந்திருத்தற்குரிய முறைப்படி அமைந்திருத்தலே அழகெனக் கூறலாம். ஆயினும் அவ்வமைப்புக்கு மேல் சில மேன்மைகளைப் பெற்றி ருத்தலே சில சமயங்களில் அழகாகக் கொள்ளப்படு கின்றது. உதாரணமாகச் சில கூறுவோம்.

கிளி, மயில் போன்ற சில பறவைகள் அவை அமைந்திருப்பதற்குரிய முறைப்படி அமைந்திருப் பதையே போதுமானதாகக் கொண்டு, அவற்றை அழ குடையனவாகக் கொள்ளுகின்ருேம். காக்கை, வான் கோழி, கழுதை முதலிய பிராணிகள் அவ்வவற்றிற் குரிய முறைப்படி அமைந்திருந்தாலும் அழகற்றன வாக மதிக்கப்படுகின்றன. நாய்களில் சில வகைகளை அழகானவையாகவும், வேறு சில வகைகளை அழகற்ற வையாகவும், கொள்ளுகின்ருேம்.

மனித இனத்திலோ அழகுள்ளவர், அழகற்றவர் எனப் பிரித்துக் கூறுதற்குரிய வேறுபாடுகள் பலவாய் உள்ளன. இயற்கையில் அமைந்துள்ள நிறங்குறி களாகிய அழகுகள் ஒருபுறமிருக்க உடற் பயிற்சி முத லியவற்ருல் அமையும் அழகே உயர்ந்ததென்பர் ஒரு சாரார். ஒரு புலவர் இவற்றை யெல்லாம் விடுத்து,

> "குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
> மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
> நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
> கல்வி யழகே அழகு"

என மனிதருடைய அழகை வரையறுத்துக்கூறுகிருர்.

மனிதருக்குரிய அழகு இவ்வளவோடு நிற்க வில்லை.

" மன்னர்க்கழகு செங்கோல் முறைமை
மந்திரிக்கழகு வரும்பொருள் உரைத்தல்
தந்திரிக்கழகு தறுகண் ஆண்மை
அறிவோர்க்கழகு கற்றுணர்ந் தடங்கல்
வறியோர்க்கழகு வறுமையிற் செம்மை,"

எனப் பலவாய்ப் பல பிரிவுகளாகப் பிரித்துக் கூறப் படுகின்றது.

பிராணிகட்கு மட்டுமன்றி உயிரற்ற பொருள் களுக்கும், இன்னும் பண்புகட்குங் கூட அழகு கூறப் படுகின்றது.

" கல்விக்கழகு கசடற மொழிதல்,"

எனக் கல்விக்கும்,

" சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல்,
நவின்றோர்க்கு இனிமை, நன்மொழி புணர்த்தல்,
ஓசையுடைமை, ஆழமுடைத்து ஆதல்,
முறையின்வைப்பே, உலகம் மலையாமை,
விழுமியது பயத்தல், விளங்கு உதாரணத்தது
ஆகுதல், நூலிற்கு அழகெனும் பத்தே "

என நூலிற்கும் அழகு கூறப்பட்டிருத்தல் காண்க.

தழை செழித்துப் பூ, காய், கனி, முதலியவற் றோடு கூடியதொரு மரத்தைக் காணும்போது, " ஆ! இது எவ்வளவு அழகிய மரம்!" என வியக்கின்றோம். மாலை மஞ்சள் வெய்யில் அம்மரத்தின் உச்சியில் படர, அவ்வுச்சி மஞ்சள் நிறந்தாங்கிப் பொலிவுற்று விளங்கும்போது, அம்மரத்தினழகை வியப்பதைவிட்டு " ஆ! இம்மரத்தினுச்சி, இம் மாலைக்கதிரவன் ஒளி யால் பொன்முடி புனைந்திருப்பதுபோலன்றோ காணப் படுகின்றது!" என அவ்வலங்காரச் சிறப்பை அழ கெனக் கொள்ளுகின்றோம்.

அழகைப் பற்றி இவ்வளவோடு நிறுத்தி இனி அழகுணர்ச்சியைப் பற்றி ஆராய்வோம்.

அழகுணர்ச்சி என்பது அழகைக் கண்டு வியந்து போற்றும் தன்மையாம். இது இல்லாத மனிதரே இல்லை எனலாம். மனிதரை யன்றி, மற்றப் பிராணிகள் சிலவற்றினிடத்தும் இது அமைந்திருக்கிறது. மேகத்தைக் கண்டு மயில்கள் ஆடுகின்றன. வசந்த காலத்தில் குயில்கள் கூவிக் களிக்கின்றன. ஆஸ்திரேலியாவிலுள்ள ஒரு வகைப்பறவை தன் கூட்டைப் பலவகைப் பொருள்களால் அலங்கரிக்கின்றது. அது காரணமாகவே அது 'பூப்பந்தர்ப் பறவை' எனப் பொருள்படுமாறு பௌவர் பர்டு என அழைக்கப்படுகிறது.

மனிதருடைய அழகுணர்ச்சி பல வகையில் வேறுபடுந் தன்மையுடையதாயிருக்கிறது. ஒருவர் அழகென்று கொள்வதை மற்றொருவர் அழகெனக் கொள்வதில்லை. உதாரணமாக இயற்கைப் பித்தர், மனிதனால் ஆய்ந்தாய்ந்து அழகுற அமைக்கப்பட்ட பூந்தோட்டத்தைக் காட்டிலும், கண்ட கண்டவாறு கண்ட கண்ட தாவரங்கள் முளைத்துள்ள காட்டை அழகானதெனக் கூறுகின்றனர்கள். உண்மையில் அழகில்லாதன வற்றையும் அழகுடையனவாகப் புனைந்து கூறியிருக்கின்றனர் கவிஞர். "இப்பாழடைந்த பழங்கால நகரத்தில், இக்குணத்தின்படி ஏட்டுக்கள் சிதைந்து கிடப்பதும் ஒருவாறு அழகாய்த் தானிருக்கிறது. இங்கு மண்மூடிக் குத்திட்டு நிற்கும் இக்கற்களையும் அம் மண் சரிவாய் அமைய, அதன் மேல் பலவகைச் செடிகள் முளைத்திருக்கும் பான்மையையும் நோக்க, இது ஓரழகிய மலைச்சாரலை யன்றோ ஒத்திருக்கின்றது?" எனப் புலவர் வர்ணிக்கும்போது

நமக்கு அப்பாழுடைந்த இடம் அழகிய இடமாகப் புலப்படுகின்றது.

அழகுணர்ச்சியே ஆக்கவேலைகட் கெல்லாம் காரணமாகின்றது. அதனாலேயே உலகில் பலவகைக் கலைகள் தோன்றியுள்ளன. சித்திரம், சிற்பம், இசை, கூத்து முதலியவை எல்லாம் அழகுணர்ச்சியால் தோன்றி வளர்ந்தவையே. நமது பாரத நாட்டிலுள்ள கோயில்களெல்லாம் அழகுணர்ச்சியால் தோன்றியன வாம் எனின் மிகையாகாது. அஜந்தா, சிற்றன்ன வாசல் குகைகளும், அவற்றிலுள்ள சித்திரங்களும், எல்லோரா, மஹாபலிபுரம் முதலிய இடங்களிலுள்ள குகைக்கோயில்களும் அங்குள்ள சிற்பங்களும் ஆகிய எல்லாம் அழகுணர்ச்சியால், ஆனவையே. மனிதன் தான் வாழுமிடமாகிய வீட்டையும், அணியும் ஆடையணி கலன்களையும் சித்திர வேலைப்பாடு உடையன வாக ஆக்குவது அழகுணர்ச்சியாலேயே.

அழகுணர்ச்சி இல்லையெனின் கலைகளும் இல்லை; மகிழ்ச்சியும் இல்லை; கோவிலும் இல்லை; குளமும் இல்லை; வீடும் இல்லை; வாசலும் இல்லை; மனித உணர்ச்சியும் இல்லை; ஒன்றும் இல்லை.

எதுவும் அழகுணர்ச்சிக் கேற்பச் சிறந்து விளங்குவதாகும். ஆதலின் சிறுவர் கருத்தாய்க் கல்வி கற்று அழகுணர்ச்சியில் சிறந்து விளங்கி உயர்வை அடைவார்களாக!

அரும்பதவுரை

வரையறுக்க - தீர்மானிக்க, நிச்சயிக்க; வேறுபாடு - வித்தியாசம்; ஒரு சாரார் - ஒரு வகையார்; குஞ்சி - தலை மயிர்; கொடுந்தானை - வளைந்து சுற்றப்பட்ட ஆடை; கோட்டு அழகு - வஸ்திரங்களின் ஓரத்தில் உள்ள கரையின்

அழகு; நெஞ்சத்து நல்லம்யாம் - மனத்தில் நல்லவர்கள் யாங்கள்; நடுவு நிலைமை - ஒரு பக்கம் சாராத நியாயமான தன்மை; செங்கோல் - நல்ல அரசாட்சி; வரும்பொருள் - பின்னால் விளையும் செய்திகள்; தந்திரி - சேனைத் தலைவன்; தறுகண் ஆண்மை-அஞ்சாமையை ஆளுந்தன்மை, அதாவது எதற்கும் பயப்படாத நிலைமை; அறிவோர் - நல்ல அறிவு வாய்க்கப்பெற்றவர்; வறுமையிற் செம்மை - தமது வறுமை நிலையில் நல்லொழுக்க முடையவராயிருத்தல்; கசடற கசடு அற - குற்றம் நீங்க; நவின்றோர்க்கு - வாயால் சொன்னவர் களுக்கு; புணர்த்தல் - சேர்த்தல்; உலகம் மலையாமை - உலகத்தார் பிரமித்துப்போகாமல் இருத்தல்; விழுமியது - மேலான நன்மை; பயத்தல் - கொடுத்தல்; உதாரணத்தது - உதாரணங்களைக் கொண்டது; புனைந்திருப்பது - சூட்டிக் கொண்டிருப்பது; களிக்கின்றன - சந்தோஷிக்கின்றன; பித்தர் - பைத்தியக்காரர்; மிகையாகாது - அதிகப்படுத்திக் கூறப் பட்டதாகாது.

வினாக்கள்

1. அழகென்பது தென்ன?

2. அமைந்திருக்க வேண்டிய முறைப்படி அமைந்திருப் பதே அழகு என்பதற்கு ஓர் உதாரணம் தருக.

3. அமைப்புக்கு மேல் சில விசேஷங்கள் பொருந்தியிருப் பதே அழகு என்பதற்கு ஒரு உதாரணம் கொடு.

4. அழகுணர்ச்சியாவது யாது?

5. சில பிராணிகள் அழகுணர்ச்சி உடையனவாய் இருக் கின்றன. இதற்கோர் உதாரணங் கொடு.

6. மனிதர் அழகுணர்ச்சி மாறுந்தன்மையது எப்படி?

7. அழகுணர்ச்சியால் ஏற்படும் நன்மைகள் எவை?

பயிற்சி

1. வாக்கியத்தில் அமைக்க: தந்திரி, கசடற, விழு மியது, பித்தர், செங்கோல், குஞ்சி.

2. எதிர்ப்பதங் கூறுக: செங்கோல், விழுமியது, அற்றவர், இயற்கை, நல்லம், வறியோர்.

3. பின்கண்ட வாக்கியங்களை, பின் குறிக்கப்படும் விதமாக மாற்றியமைக்க :

(1) உண்மையில் அழகில்லாதனவற்றையும் அழகுடையனவாகப் புனைந்து கூறிவிடுகின்ருர் கவிஞர்—இதில் 'கவிஞர்' என்பதை முதல் வார்த்தையாக அமைத்து வாக்கியத்தை மாற்றி எழுது.

(2) அழகுணர்ச்சி இல்லையெனின் கலையும் இல்லை; மகிழ்ச்சியும் இல்லை; கோவிலும் இல்லை; குளமும் இல்லை; வீடும் இல்லை; வாசலும் இல்லை; மனித உணர்ச்சியும் இல்லை; ஒன்றும் இல்லை—எல்லாம் உண்டு என அமையுமாறு இவ்வாக்கியத்தை மாற்றி அமைக்க.

இலக்கணம்

காலங்கள்

வினைச் சொற்கள் காலங் காட்டும். காலம், இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என மூன்று வகைப்படும்.

இறந்த காலமாவது செயல் முடிந்துவிட்ட காலமாகும். நடந்தான், கண்டான், பெற்ருன், போனுன். இவை இறந்த காலங் காட்டுவதை அறிக.

நிகழ்காலமாவது செயல் நடைபெறுவதைத் தெரிவிக்கும் காலமாம். நடக்கிருன், காண்கிருன், பெறுகிருன், போகிருன். இவை நிகழ்காலம் காட்டுவதை அறிக.

எதிர்காலமாவது, செயல் நடைபெறப் போவதைக் குறிக்கும் காலமாம். நடப்பான், காண்பான், பெறுவான், போவான். இவை எதிர்காலம் காட்டுவதை அறிக.

11. ஸர் ஸி. வி. ராமன்

தற்காலம் விஞ்ஞான காலமாகும். இக்காலத்தில் விஞ்ஞானிகள் பல விந்தைகளை விளைத்துள்ளனர். பேசும்படம், வானொலி ஆகியவை அவ்விஞ்ஞானி களால் கண்டுபிடிக்கப்பட்டு மக்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டுவதை அறியாதார் யார்?

உலகில் மேம்பாடு அடைந்துள்ள நாடுகளில் எல்லாம் சிறந்த விஞ்ஞானிகள் பலர் உள்ளனர். அவர்கள் மேலும் மேலும் அத்துறையில் ஆராய்ந்த வண்ணமிருக்கின்றனர். இவ்வாறு ஆராய்வதில் அவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக நோபெல் பரிசு என்று ஒரு பரிசு ஏற்பட்டுள்ளது. இதை ஏற்படுத் தியவர் ஸ்வீடன் நாட்டு ஆல்பிரெட் நோபெல் என்பவராவர். இப்பரிசுத் தொகையின் மதிப்புச் சுமார் 8000 பவுன்களாம்.

நோபெல் பரிசு பெற்றவர் உலகிலேயே சிறந்தோ ராவர். நம் பாரத நாட்டில் இப்பரிசைப் பெற்று உலகப் பிரசித்திபெற்றவர் பலர். அவருள் **ஸர். ஸி. வி. ராமன்** என்பவரும் ஒருவர். **ஸி. வி. ராமன்** என்பது இவரது பெயரின் சுருக்கமாகும். இவரது முழுப் பெயர் **சந்திரசேகர வேங்கடராமன்** என்பது. இவரது வரலாற்றை இங்கே கூறுவோம்.

ஸர். ஸி. வி. ராமன் 1888-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ஆம் நாளில் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் சந்திரசேகர ஐயர்; தாயார் பெயர் பார்வதி அம்மையார். இவர்கள் தஞ்சை ஜில்லாவில் பாப நாசத்தை யடுத்த மாங்குடி என்னும் ஊரினர்.

சிறு வயதில் இராமன் திருச்சிராப்பள்ளியில் கல்வி கற்றார். பிறகு 1901-ஆம் ஆண்டில் சென்னை

இராஜதானிக் கல்லூரியில் கல்விகற்கச் சென்ருர். பதின்மூன்றே பிராயமுள்ள இவர் அக்கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் சேர்ந்து படிக்கலானர். சிறந்த



ஸர் ஸி. வி. ராமன்

நுண்ணறிவுபடைத்த இவர் நன்கு உழைத்துப் படித்து பி. ஏ. தேர்வில் முதல்வராகத் தேர்ந்து ஆரணி ஜாகீர்தார் பொற்பதக்கம் பெற்ருர். பிறகு எம்.ஏ. வகுப்பில் சேர்ந்து படித்து அத்தேர்விலும் முதல்வ ராகத் தேர்ந்தார்.

கல்லூரியிற் படிக்குங் காலமுதல் இவர் மனம் விஞ்ஞான ஆராய்ச்சி செய்யவே விழைந்தது. அவர் எம். ஏ. வகுப்பில் படிக்குங்கால் அவரது நண்பர் ஒருவர் முப்பட்டைக் கண்ணுடியில் ஒளி ஊடுருவிச் செல்வதைப்பற்றிச் சில செய்திகளை அவரிடம் கூறினுர். அதுமுதல் அதைப்பற்றி ஆராயத் தொடங்கித் தம் ஆராய்ச்சிகளை எல்லாம் ஒரு கட்டுரையாக எழுதித் தமது ஆசிரியராகிய **ஜோன்ஸ்** என்பவரிடம் கொடுத்து அதில் திருத்தங்கள் உண்டாயின் திருத்தித் தருமாறு வேண்டினுர். அவ்வாசிரியர் அதன் அருமையுணராமல் அதைப் படிக்காமலே தம்மிடம் வைத்திருந்தார். சில நாட்களானபின், ராமன் அதை அவரிடமிருந்து வாங்கி மேனுட்டுச் செய்தித்தாள் ஒன்றிற்கு அனுப்பினுர். அவர்கள் அதைப் படித்துப் பார்த்து அது சிறந்ததா யிருந்தமையின் அதைப் பிரசுரித்தனர். பிறகு அவர் மேலும் பல ஆராய்ச்சிகளைச் செய்து அவற்றைப் பற்றிக் கட்டுரைகள் எழுதி அச்செய்தித் தாளுக்கு அனுப்பினர். அவர்களும் அவற்றையெல்லாம் பிரசுரித்தனர். அதுமுதல் ராமன் புகழ் மேம்படுவதாயிற்று.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் அவரது நண்பர் அவரை **அரசாங்கப் பொருட்டுறைக் கல்வி** கற்குமாறு கூறினர். அதனுல் அரசாங்கத்தில் பெரிய உத்தியோகம் கிடைக்கும்; நிரம்ப வருவாய் கிடைக்க வழியுண்டு. அவரது உறவினரும் அவர் உயர்ந்த உத்தியோகம் செய்து நிறைய பொருள் சம்பாதிக்க வேண்டும் என்று விரும்பினர். அதனுல் அவர் அக்கல்வி கற்க முற்பட்டு நன்கு படித்து முதலாவதாகத் தேர்ந்து அவரது நண்பரும் உறவினரும் எதிர்பார்த்தவாறே உயர்ந்த உத்தியோகமும் பெற்ற

னர். அப்போது இவருக்கு வயது பதினெட்டே யாகும்.

பிறகு பெற்ருேர் அவருக்குத் திருமணம் செய்த னர். சில நாளில் அவர் டெபுடி அக்கவுண்ட் டெண்ட் ஜெனரலாகிக் கல்கத்தாவிலுள்ள இந்திய நிதி இலாகாவில் வேலே பார்த்தார். அங்கே இவருக்கு ஸர். அஷ்டோஷ் முகர்ஜி, ஸர். குருதாஸ் பானர்ஜி என்னும் பெரியார்களின் நட்புக் கிடைத் தது. அதோடு அந்நகரிலிருந்த இந்திய விஞ்ஞான வளர்ச்சிக் கழகத்தில் உறுப்பினராகி விஞ்ஞான ஆராய்ச்சியிலும் ஈடுபடலாஞர்.

பிறகு 1909-ஆம் ஆண்டு ராமன் உத்தியோக மாற்றம் அடைந்து ரங்கூன் நகருக்குச் சென்ருர். அதனுல் அவரது விஞ்ஞான ஆராய்ச்சிக்குத் தடை யுண்டாயிற்று. அதனுல் அவர் வருந்தி யிருக்கையில் அவர் தந்தையார் இறந்ததாகச் செய்தி வந்தது. உடனே அவர் ஆறு மாதம் விடுமுறை வாங்கிக் கொண்டு தந்தைக்கு ஆற்றவேண்டிய கடன்களே ஆற்றிவிட்டுச் சென்னேயை அடைந்து அங்கு இராஜ தானிக் கல்லூரியில் விஞ்ஞான ஆராய்ச்சி செய்ய லாஞர். விடுமுறைக் காலம் முடிந்ததும் அவரை நாகபுரியில் வேலே பார்க்குமாறு அரசாங்கத்தார் அனுப்பினர். அப்பால் கொஞ்சகாலத்தில் அவர் மீண்டும் கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டார்.

இவ்வாறு கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டது அவ ருக்கு நற்காலமாய் அமைந்தது. மீண்டும் இந்திய விஞ்ஞானக் கழகத்தில் சேர்ந்து விஞ்ஞான ஆராய்ச் சியில் இறங்கிஞர். அப்போது அவரது நண்பரான ஸர். அஷ்டோஷ் முகர்ஜி என்பவர் கல்கத்தாவில் அரும்பாடுபட்டு விஞ்ஞானப் பல்கலேக் கழகக்

கல்லூரி ஒன்றை ஏற்படுத்தினர். அக்கல்லூரிக்குப் பௌதிக நூற்பேராசிரியர் ஒருவர் வேண்டியிருந்தது. முகர்ஜி இராமனை அவ்வேலைக்கு வருமாறு அழைத்தார். இராமன் பார்த்த டெபுடி அக்கவுண்டெண்டு ஜெனரல் வேலை நிரம்ப ஊதியம் அளிப்பது. கல்லூரிப் பேராசிரியர் பதவியோ குறைந்த ஊதியமே தருவதாகும். ஆயினும் விஞ்ஞானக் கலையிலுள்ள ஆர்வத்தால் ராமன் தமது அரசாங்க உத்தியோகத்தை ராஜீநாமாச் செய்துவிட்டுக் கல்லூரிப் பேராசிரியர் பதவியை மேற்கொண்டார்.

அதுமுதல் அவர் விஞ்ஞான ஆராய்ச்சியில் தீவிரமாகப் பாடுபட்டுப் பலவுண்மைகளைக் கண்டறிந்தார். அவர் கண்டறிந்தவற்றுள் **ஒளிச்சிதறலைப் பற்றிய ஆராய்ச்சியே** முக்கியமானதாகும். இவர் கண்டறிந்த உண்மை **இராமன் விளைவு** எனப்பட்டது. இந்த உண்மையால் பௌதிக ரசாயனக் கலைகளில் அதுவரை விளங்காமலிருந்த பல செய்திகள் விளங்கலாயின. அவ்வாராய்ச்சிக்காகவே இவர் **நோபெல் பரிசு** பெற்றார்.

இவரது ஆராய்ச்சி மேம்பாட்டை அறிந்த ஆங்கில அரசாங்கத்தார் இவருக்கு **'ஸர்' பட்டம்** அளித்துக் கௌரவித்தனர். **லண்டன் அரசர் கழகம்** இவருக்கு **ஹியூஸ் பதக்கம்** அளித்தது. அப்பால் 1933-ஆம் ஆண்டில் **பெங்களூரிலுள்ள இந்திய விஞ்ஞானக் கலை ஆராய்ச்சிக் கழகத்திற்கு** இவர் தலைவராய் அமர்ந்தார்.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு அணுசக்தி ஆராய்ச்சியில் உலகம் ஈடுபடலாயிற்று. அவ்வகையில் இந்திய அரசாங்கத்தார் அணுசக்தி ஆராய்ச்சியில் இராமனை ஈடுபடுத்தலாயினர்.

அணுசக்தியை அழிக்கும் வேலைக்குப் பயன்படுத்தா மல் ஆக்கவேலைக்கு எப்படிப் பயன்படுத்துவது என் பதைப்பற்றி அவர் ஆராய்ந்து வருகிறார். எதிர்காலப் பாரத நாடு இவருடைய ஆராய்ச்சிகளால் நற்பயன் பெற்றுச் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை. அணுசக்தியும் இவரது ஆராய்ச்சிகளால் ஆக்க வேலைக்குப் பயன்படுவதாய் இந்நிலவுலகத்தைச் சொர்க்கலோகமாக்கக் கூடும். இத்தகைய நல்லா ராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இவர் தமது காரியத்தில் வெற்றி யடையுமாறு இறைவன் அருள்புரிவாராக.

அரும்பதவுரை

விந்தை - ஆச்சரியம்; மேம்பாடு - மேன்மை; பிர சித்தி - புகழ்; ஆரணி ஜாகீர்தார் பொற் பதக்கம் - ஆரணியிலுள்ள பிரபு, ஒருவரால் பி. ஏ. தேர்வில் முதல்வராகத் தேறுகிறவருக்குக் கொடுக்குமாறு ஏற்படுத்தப்பட்ட பரிசு; ஜாகீர்தார் - ஜமீன்தார் போன்ற பிரபு - பண்டைக்காலத்தில் படைத்தலைவர்களுக்குச் சில கிராமங்களைக் கொடுத்து அதன் வருவாயைக்கொண்டு அவர்கள் போர்வீரரைச் சித்தப்படுத்திப் போர்க்குப் பழக்கிப் போர்க் காலங்களில் அவ்வீரரைத் தம் படையினராய்ப் பணியாற்றுமாறு அரசர் ஏற்பாடு செய்தனர். அப்படைத் தலைவர் ஜாகீர்தார் எனப்பட்டார். இது முஸ்லீம் அரசர் ஏற்பாடு; பிரசுரித்தனர் - வெளியிட்டனர்; ஆர்வம் - ஆசை, அவா, விருப்பம்; ஸர் பட்டம் - ஆங்கில அரசாங்கத் தாரால் அவர்களது ஆட்சிக் காலத்தில் சிறந்த காரியங்களைச் செய்தவர்களுக்கு அளித்துவரப்பட்ட ஒரு கௌரவப் பட்டம்; கௌரவித்தனர் - பெருமைப்படுத்தினர்; ஆக்கவேலை - நன்மையைத் தரும் வேலை.

வினாக்கள்

1. ஸர். ஸி. வி. ராமன் பிறந்தது எப்போது? அவரது பெற்றோர் யாவர்?

2. ராமன் கல்விகற்ற வரலாற்றை விவரிக்க.

3. அவர் விஞ்ஞான ஆராய்ச்சியில் புகழ்பெற்றது எப்படி?

4. கல்கத்தாவில் அவருக்கு நண்பரானுர்கள் யாவர்? அஷ்டோஷ் முகர்ஜி அவருக்குச் செய்த நன்மை என்ன?

5. ராமன் தற்போது எவ்வாராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிருர்?

பயிற்சி

1. குறிப்பு வரைக: நோபெல் பரிசு, ஜாகீர்தார், 'ஸர்' பட்டம்.

2. வாக்கியங்கள் அமைக்க: விந்தை, பிரசுரித்தனர், ஆர்வம், ஆக்கவேலை, கௌரவித்தனர்.

3. பின்வரும் சொற்களுக்கு ஒரு பொருட் சொற்கள் யாவை?—பிரசித்தி, ஆர்வம், மேம்பாடு, காலம்.

4. எதிர்ப்பதம் கூறுக: சுருக்கம், நண்பர், உயர்ந்த, நட்பு, ஊதியம்.

5. பின்வரும் வாக்கியத்தை எத்தனை சிறு வாக்கியங்களாகப் பிரித்துக் கூற இயலுமோ அத்தனை சிறு வாக்கியங்களாகப் பிரித்துக் கூறுக: அதுமுதல் அதைப் பற்றி ஆராயத் தொடங்கித் தம் ஆராய்ச்சிகளை எல்லாம் ஒரு கட்டுரையாக எழுதித் தமது ஆசிரியராகிய ஜோன்ஸ் என்பவரிடம் கொடுத்து, அதில் திருத்தங்கள் உண்டாயின் திருத்தித் தருமாறு வேண்டினுர்.

இலக்கணம்

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்

கந்தன் வந்தான் - இவ்வாக்கியத்தில் கந்தன்வரும்செயலை செய்கிருன்; வந்தான் என்பது அவன் செய்யும் செயலைக் குறிக்கும் சொல்.

ஒரு வாக்கியத்தில் செயலைச் செய்பவன் எழுவாய் எனப் படுவான்; அவன் செய்யும் செயலைக் குறிக்கும் சொல் பயனிலை யாகும்.

கந்தன் பழத்தைத் தின்ருன்—இவ்வாக்கியத்தில் கந்தன் எழுவாய்; தின்ருன் - பயனிலே. பழத்தை என்பது கந்தன் செயலால் உண்டான பயனே அடையும் பொருள். இப்பொருள் செயப்படுபொருள் எனப்படும்.

கந்தன் வந்தான் என்னும் வாக்கியத்தில் செயப்படுபொருள் இல்லே. இவ்வாறு சில வாக்கியங்களில் செயப்படுபொருள் இராது.

கந்தன் பழத்தைத் தின்ருன் என்னும் வாக்கியத்தில் செயப்படு பொருள் இருக்கிறது. இவ்வாறு சில வாக்கியங்களில் செயப்படு பொருள் இருக்கும்.

எழுவாய், பயனிலே, செயப்படுபொருள்களேக் கண்டுபிடிக்க வழி

வாக்கியத்தை முடித்து நிற்கும் சொல் பயனிலே ஆகும். முதலில் வாக்கியத்திலுள்ள இச்சொல்லே அதாவது பயனிலேயைக் கண்டுபிடிக்கவேண்டும்.

பயனிலேக்கு முன் யார், எது என்பவற்றுள் ஏற்ற ஒன்றை வைத்துக் கேள்வி கேட்டால் வரும் விடை எழுவாய் ஆகும். உதாரணமாக முன் உதாரண வாக்கியங்களில், யார் வந்தான்? யார் தின்ருன்? எனக் கேள்விகேட்க விடை கந்தன் என வருகின்றது. ஆதலால் கந்தன் எழுவாய்.

பயனிலேக்கு முன் யாரை அல்லது எதை என்பவற்றுள் ஏற்ற ஒன்றை வைத்துக் கேள்வி கேட்டால் வரும்விடை செயப்படு பொருள். உதாரணமாக முன் வாக்கியத்தில் எதைத் தின்ருன்? என்று கேள்விகேட்க வரும் விடை பழத்தை என்பது; அதனுல் பழத்தை—செயப்படுபொருள்.

12. ஔவை தூது

(நாடகம்)

காட்சி 1

இடம் : அதியமான் அவைக்களம்.

காலம் : காலை.

உறுப்பினர் : அதியமான், அமைச்சர், அவையினர், ஔவையார்.

[அதியமான் அமைச்சர் முதலிய அவையத்தாரோடு மந்திராலோசனை புரிகின்றான்].

அதியமான் : அமைச்சரே, கையில் என்ன ஓலை அது? உமது உடலில் பதற்றம் காணப்படுகிறதே, ஏன்? யாது கூறக்கருதி எழுந்து நிற்கின்றீர்?

அமைச்சர் : அரசே, தொண்டை மானிடமிருந்து போர்குறித்து ஓலை வந்திருக்கின்றது. அதுவே இவ்வோலை. அவ்வரசர் நம்மீது படையெடுக்கப் போகின்றாராம்.

அதியமான் : ஆ! அப்படியா! நம்மீது போர் தொடங்குமாறு அவ்வளவு வலிமை பெற்றுள்ளானா அத்தொண்டைமான்?

அமைச்சர் : அந்நாட்டிலிருந்து வந்துள்ள நமது ஒற்றர், அவ்வரசன் விரிவான போரேற்பாடுகளை இரகசியமாகச் செய்து முடித்துள்ளான் எனக் கூறுகின்றனர். அவனது படைக்கலக் கொட்டிலில் நூறாயிரக்கணக்கான வீரர்க்கு வேண்டிய அளவு புதிய புதிய போர்க்கருவிகள் சித்தப்படுத்தி வைக்கப் பட்டுள்ளனவாம்.

அதியமான் : நல்லது; நமது நிலை யாது?

அமைச்சர் : நமது வீரர் அடிக்கடி நாம் புரிந்து

வரும் போர்களில் போர்புரிந்து களைத்துள்ளனர். நமது போர்க்கருவிகள் பழுதுபட்ட நிலையில் கொல்லன் உலைக்களத்தில் உள்ளன. நாட்டில் சிறிது பஞ்சமும் ஏற்பட்டுள்ளது.

அதியமான் : ஆம். நாம் இப்போது நாட்டைச் சீர்திருத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்நிலையில் போர் ஏற்படுமானால் மேலும் பஞ்சம் உண்டாகி நாடு மிகவும் வருந்தும். சமீபத்தில் நடந்த போர்களில் தந்தையரையும், கணவன்மாரையும், உடன் பிறந்தாரையும், பிறசுற்றத்தாரையும் இழந்து தவிக்கும் குடிமக்கட்கு மேலும் துன்பத்தை உண்டாக்குவதென்றால், அதற்கு என்மனம் இடம் தரவில்லை! ஆ! இந்நிலையில் மீண்டும் போரா ! என்ன செய்வேன் ! நமது ஔவைப் பிராட்டியும் இங்கில்லையே! அவர் இருந்தால் இதற்குத்தக்க உபாயம் ஏதேனும் கூறுவார்! அமைச்சரே, ஔவையார் இருக்குமிடம் ஏதாவது புலப்பட்டதா ?

அமைச்சர் : மன்னவ, அவர் இருப்பிடத்தை விசாரித்துப் பார்த்தேன். ஒன்றும் பலனில்லை. நாளுக்கோரூராய்த் திரிகிறவர்களை எப்படிக் கண்டு பிடிப்பது ?

அதியமான் : நல்லது ! நடக்கிறபடி நடக்கட்டும்! போருக்குப் பின்னிட்டான் அதியமான் என்னும் வசைச்சொல் ஏற்படுமாறு நான் விடமாட்டேன். நமது படையெடுப்புக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்வீராக !

(ஔவையார் வருதல்)

அதியமான் : வருகவருக! ஔவைப் பிராட்டி! வருக ! தக்க சமயத்தில் வந்தீர் ! இவ்வாசனத்தில் எழுந்தருளுக !

ஔவையார் : அரசே வாழ்க ! என்ன செய்தி ? ஏதோ தக்கசமயம் என்றீரே ! என்ன தக்கசமயம் ?

அதியமான் : காஞ்சிநகர்த் தொண்டைமான் நம்மீது படை யெடுப்பதாக ஓலையனுப்பி யிருக்கின்றான். நமது நிலை தற்போது சரியாகவில்லை. சமீபத்தில் நடந்த போர்களால் நாட்டில் சிறிது பஞ்சமேற்பட்டுள்ளது. போர்வீரரும் களைத்திருக்கின்றனர். குடிகளும் உற்றார் உறவினர்களை இழந்து துன்புற்றிருக்கின்றனர். போர்க்கருவிகள் பழுதுபட்டுக் கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றன. ஆயினும் போர்க்கஞ்சிப் பின்னிட எனக்கு மனமில்லை. இந் நிலையில் தக்க ஆலோசனை கூறுவார் எவருமின்றித் தவித்தேன். தக்க சமயத்தில் தெய்வம்போல வந்தீர்கள். தாங்கள் தான் இதற்கொரு முடிவுகாண வேண்டும்.

ஔவையார் : நன்று ! செய்திகளைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறினாய். யான் தொண்டைமானிடம் தூதுபோய் ஆவனசெய்வேன் ; கவலற்க.

அதியமான் : ஆ! உய்ந்தேன் ! உய்ந்தேன் ! அம்மே ! காடும் நாடும் கடுக நடந்து களைத்துவந்த உம்மை உபசரியாமல், என் உணர்ச்சி வசத்தால் ஏதேதோ இன்னல்களைக் கூறித் தங்கள் உள்ளத்தை வருத்திவிட்டேன். உள்ளே அந்தப்புரத்திற்கு எழுந்தருளுக. அமைச்சரே, சபை கலைக !

காட்சி 2

இடம் : தொண்டைமான் அரசவை.

காலம் : காலை.

உறுப்பினர் : தொண்டைமான், ஔவையார், அமைச்சர், அவையினர் முதலியோர்.

[தொண்டைமான் அரசவையில் வீற்றிருக்கின்முன். ஔவையார் வருகின்ருர்.]

தொண்டைமான் : வருகவருக! பிராட்டீ வருக! இவ்விருக்கையில் அமருக! சுகமேயோ? எங்கிருந்து வருகின்றீரோ?

ஔவையார் : அரசே வாழ்க! யாவும் நலமே. அதியமானிடத்திலிருந்தே இப்போது வருகின்றேன்.

தொண்டைமான் : நன்று. அவ்வரசன் ஏதேனும் செய்திகூறி யனுப்பினனே?

ஔவையார் : ஆம்! நீவிர் ஏதோ அவன்மீது படையெடுக்கப் போகின்றீராம்! அது குறித்து அவன் விடுத்த தூதாகவே நான் இவண் வந்துள்ளேன்.

தொண்டைமான் : நன்று. தூதைப்பற்றிப் பின்னர் ஆலோசிப்போம். உணவருந்தி இளைப்பாறுவீர் முதலில். அமைச்சரே, தூதாக வந்த ஔவையாருக்கு உரிய பெருமைகளைச் செய்வீராக! பிராட்டீ! நீவிர் அதியமானுக்கு மட்டும் உரியவரல்லவே! உலகம் முழுமைக்கும் உரியவரன்றே! உமக்குத் தெரிவிப்பதால் என்ன கெடுதல் நேரப் போகின்றது! உண்டு இளைப்பாறிய பின் எமது படைக்கலக் கொட்டிலைக் காணவருக!

ஔவையார் : நல்லது, அங்ஙனமே வருகின்றேன்.

காட்சி 3

இடம் : படைக்கலக் கொட்டில்.

காலம் : மாலை.

உறுப்பினர் : ஔவையார், தொண்டைமான், அமைச்சர், ஏவலர் முதலியோர்.

[தொண்டைமான் ஔவையாருக்குத் தனது படைக்கலக் கொட்டிலைக் காட்டி வருகின்றான்.]

தொண்டைமான் : அம்மே, வருக இவ்வழியாக! இப்புறத்தில் சேமிக்கப்பட்டிருக்கும் இவ்வேல், வில், அம்பு முதலியவற்றைப் பாருங்கள்! இவை மிகச்சிறந்த எஃகால் தொழில் நுணுக்க அறிவு நன்கு வாய்க்கப்பெற்ற கம்மியரைக் கொண்டு சமீபத்தில் செய்யப் பெற்றவை. இவை மட்டுமல்ல! யவனத் தச்சரைக் கொண்டு மதிற்பொறிகள் பலவும் செய்திருக்கிறேன். இவ்வழியாக வருக! அவற்றை நோக்குவீர்.

இதோ புலிப்பொறி. இதோ குரங்குப் பொறி! இதோ வில்லுமிழ் கவண்! கல்லிடு கூடை! இதோ ஆண்டலைப் புட்பொறி! யாவும் சித்தமாகி விட்டன! இனி எனக்கெதிர் நிற்பவர் யார்? இவற்றைப் பற்றி நும் கருத்து என்னவோ?

ஔவையார் : ஆ! ஆ! மிக அழகான படைக் கலங்கள்! எல்லாம் புதியனவாகச் செய்யப்பட்டு பீலியணியப்பட்டுள்ளன. நெய்பூசப் பெற்றுள்ளன. மாலைசூட்டிப் பூசிக்கப்பெற்று வருகின்றன. எவரும் இவற்றை எடுத்துக் கையாளாதவாறு பத்திரமாய்ப் பாதுகாக்கப்பட்டுள்ளன! மிக நன்று! மிக நன்று! எமது அதியமானுடைய படைக்கலங்கட்கும் இவற்றிற்கு மிடையில் மலைக்கும் மடுவிற்கும் போன்ற பெருத்த வேறுபாடு காண்கின்றேன்!

தொண்டைமான் காட்டிய போர்க் கருவிகளை ஔவையார் பார்வையிடல்

தொண்டைமான் : பெருத்த வேறுபாடா? அஃதென்ன ?

ஒளவையார் : அதியமானுடைய படைக்கலங்கள் இவ்வாறு சேமிக்கப்பட்டுப் பத்திரமாகப் பாதுகாக்கப்படவில்லை. அவற்றை வீரர் அடிக்கடி கையாளுவதால் அவற்றின் கங்கும் நுனியும் சிதைந்து போயிருக்கின்றன. அவை கொல்லன் உலைக்களத்தில் பழுதுபார்ப்பதற்காகப் போடப்பட்டுள்ளன.

தொண்டைமான் : நன்று, பிராட்டி, இனி அவைக்களம் செல்வோம், வருக !

ஒளவையார் : யான் இங்கு நீண்டகாலம் இருக்க வரவில்லை. விரைவில் போர் குறித்து உமது கருத்தறிந்து செல்லவே வந்துளேன். அது நிற்க, போர் குறித்து யான் எனது கருத்தாக உனக்குச் சொல்வதொன்றுண்டு. அதாவது, போரால் விளைவது தீமையேயன்றி வேறில்லை. போருக்குச் செல விடுவதை நாட்டு நன்மைக்குச் செலவழித்தால், நாடு எவ்வளவோ நலம் பெறும்! போரில் வெற்றி தோல்விகள் ஒருவர் பங்கல்ல. யாமே பெரியோம் என்று இறுமாந்து செயலாற்றுதல் கேட்டை விளைக்கும். எதையும் ஆலோசித்துச் செய்க !

தொண்டைமான் : (ஆலோசனையிலாழ்ந்து தனக்குள்) ஒளவையார், சிறந்த என் படைக்கலக் கொட்டிலிலுள்ள போர்க் கருவிகளைக் கண்டு வியப்படையவில்லை! அவர் கூறும் சொற்களை நன்காராய வேண்டுவது அவசியம்! அவை பொருளாழம் உடையவை. அவர் கூறியது என்ன? என்படைக் கொட்டிலிலுள்ள கருவிகள் வீரர் கையாளா வகையில் பாதுகாக்கப்பட்டுள்ளனவென்று குறிப்பாகக் கூறினர்.

உண்மை! அவன் வீரர் தக்க பயிற்சி பெற்றுள்ளனர் என்பதை அவர்கள் தினமும் போர்க்கருவிகளைக் கையாளுகின்றனர் என்னும் குறிப்பால் அறிவித்தார். உண்மை! சமீபகாலத்தில் அவர்கள் பலபோர்களில் ஈடுபட்டு வெற்றியடைந்துள்ளனர். போரால் வரும் கேடுகளைக் குறிப்பித்தார். இந்நிலையில்யான் போருக்குப் போவதால் தீமை நேரலாம் என்பதையே அவர் அங்ஙனம் குறித்திருக்க வேண்டும்! நல்லது! போர் தொடங்குவதைச் சற்றுப் பின்னுல் வைத்துக்கொள்ளுவோம்! தக்கபடி பேசி ஔவையாரைச் சமாதானமாகவே அனுப்பிவிடுவோம்.

ஔவையார் : அரசே, என்ன நீண்ட ஆலோசனையில் ஆழ்ந்துவிட்டீர்? போர் குறித்த உமது கருத்தைச் சிறிது மாற்றிக்கொள்வதே நலம் என எனக்குத் தோன்றுகின்றது. உமது முடிவைக் கூறினுல் அதை நான் விரைவில் அதியமானுக்குத் தெரிவித்து வருகின்றேன்.

தொண்டைமான் : போரால் விளையும் தீமைகளைத் தங்கள் வாயால் கேட்ட பிறகும் யான் போர் புரியத் துணிவேனே? நம்மிருவருக்குள் பகையில்லை என யான் அதியமானுக்குக் கூறியதாக அவரிடம் தெரிவிப்பீராக!

ஔவையார் : நன்று! நலமே பெருகுக!

செய்யுட் பாடங்கள்

I. வாழ்த்து

1. பரம்பொருள் வாழ்த்து

அப்பனீ ; அம்மை நீ ; ஐயனும் நீ ;
அன்புடைய மாமனும் மாமியும் நீ ;
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ ;
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும் நீ ;
துய்ப்பனவும், உய்ப்பனவும் தோற்றுவாய் நீ ;
துணையா யென்னெஞ்சம் துறப்பிப்பாய் நீ ;
இப்பொன் நீ ; இம்மணி நீ ; இம்முத்து நீ ;
இறைவன் நீ ; ஏறூர்ந்த செல்வன் நீயே ! (1)

—திருநாவுக்கரசர்

கலைமகள் துதி

மண்கண்ட வெண்குடைக்
கீழாகமேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவில் பணியச்செய்வாய் ;
படைப்போன் முதலாம்,
விண்கண்டதெய்வம் பல்கோடி யுண்டேனும்
விளம்பிலுண் போல்
கண்கண்டதெய்வம் உளதோ
சகலகலா வல்லியே ! (2)

—குமரகுருபரர்

அரும்பதவுரை

(1) ஒண் - ஒளிபொருந்திய ; சுற்றம் - உறவினர் ; துய்ப்பன - அனுபவிப்பவை ; தோற்றுவாய் - உண்டாக்குவாய் ; இறைவன் - தலைவன் ; கடவுள் ; ஏறு - காளை ; ஊர்ந்த - வாகனமாக ஏறிச்செல்லும்.

(2) மண் - உலகம் ; பண் - பாட்டு ; படைப்போன் - பிரமன் ; விண் - மேலுலகம் ; விளம்பில் - சொன்னால் ; சகலகலா வல்லி - எல்லாக் கலைகளிலும் வல்லவள் ; சரஸ்வதி.

வினாக்கள்

1. ஏறூர்ந்த செல்வன் எப்படிப்பட்டவன் ?
2. குமரகுருபரர் கலைமகளிடம் வேண்டுவது யாது ?

2. தமிழ் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக்
கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத
கண்டமிதில்,
தக்கசிறு பிறை நுதலும், தனித்த நறுந்
திலகமுமே,
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிட நற்
றிரு நாடும்,
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும்
இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும்
தமிழணங்கே. (1)

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத்
துடைக்கினுமோர்
எல்லையரு பரம்பொருள்முன் இருந்தபடி
இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலை
யாளமும் துளுவும்,
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல
ஆயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து
சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து
வாழ்த்துதுமே. (2)

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.

அரும்பதவுரை

நீராரும் - நீர் + ஆரும் - நீர் நிறைந்த. எழில் - அழகு ; வதனம் - முகம் ; நுதல் - நெற்றி ; திலகம் - பொட்டு ; அணங்கு - தெய்வப்பெண் ; துடைத்தல் - அழித்தல் ; பரம்பொருள் - மேலான பொருள், கடவுள் ; கவின் - அழகு. உதித்து - தோன்றி ;

இதனை இயற்றிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை திருவனந்தபுரம் கல்லூரியில் பேராசிரியராக விளங்கியவர் ; தமிழ்ப்புலமை மிக்கவர் ; வேளாள மரபைச் சேர்ந்தவர். சென்ற நூற்றுண்டில் இருந்தவர். 'மனோன்மணீயம்' என்ற இனிய செந்தமிழ் நாடக நூலை இயற்றியவர்.

வினுக்கள்

1. நிலமடந்தையின் வதனம், நுதல், திலகம்—இவை எவை ?

2. பரம்பொருளுக்கும் தமிழ்த்தாய்க்குமுள்ள ஒற்றுமை யாது ?

II. நீதி

1. நன்னெறி

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லினுமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். (1)

உள்ளங்கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமெண்க—வெள்ளம்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு. (2)

இல்லானுக்கன்பிங் கிடம்பொருள் ஏவல்மற்று
எல்லா மிருந்துமவற் கென்செய்யும்?—நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்?
விழியிலார்க் கேது விளக்கு.? (3)

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்;—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று. (4)

இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே;—பொன்செய்
அதிர்வளையாய் பொங்காது அழற்கதிரால் தண்ணென்
கதிர் வரவால் பொங்கும் கடல். (5)

பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய் கண்டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க;—தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். (6)

உண்டுகுணமிங் கொருவர்க் கெனினும்கீழ்க்
கொண்டுபுகல் வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்பும் கனி. (7)

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றெவ்வார் ;—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே அதுபுனையாக்
காணும் கண்ணொக்குமோ காண். (8)

கைம்மா றுகவாமல் கற்றறிந் தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவிதாஞ்செய்வர்;—அம்மா
முளைக்கும் எயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று. (9)

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்;—நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேல்
கைசென்று தாங்கும் கடிது. (10)

—சிவப்பிரகாசர்

வினாக்கள்

1. 'நெல்லின் உமி சிறிது நீங்கிப் பழைமைபோல், புல்லினும் திண்மை நிலை போம்'—இதன் உவமேயம் யாது?

2. குணம் எது? உவமை யாது?

3. 'விழியிலார்க்கு ஏது விளக்கு'—இஃது எதனை விளக்குகிறது?

4. திங்கள், விழுமியோர்—இவ்விருவருக்கும் உள்ள ஒற்றுமை யாது?

5. கடல் எப்பொழுது பொங்கும்? இதைப் போன்றது எது?

6. கண் எப்பொழுது கலுழும்? இது எந்த உண்மையை உணர்த்துகிறது?

7. கீழ்மக்களின் குணத்தைக் காக்கையின் செயலோடு ஒப்பிடுக.

8. அறிஞர்க்கு ஒவ்வாதவர் யார்? கண் எப்படி அறிஞரைப் போன்றது?

9. எயிறு என்ன செய்கிறது? இதன் உவமேயத்தை விளக்குக.

10. பேரறிஞர் செயல் யாது? உவமை என்ன?

நீதிவெண்பா

மென்மதுர வாக்கால் விரும்பும் சகங்கடின
வன்மொழியி னாலிகழும் மண்ணுலகம்; நன்மொழியை
ஓதுகுயிலேதங் குதவியது கர்த்தபந்தான்
ஏதபரா தஞ்செய்த தின்று. (1)

வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறிய லாகாதே—காக்கையொரு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ கூறு. (2)

சிற்றுணர்வோர் என்னும் சிலுசிலுப்பர் ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே-வெற்றிபெறும்
வெண்கலத்தி னோசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தில் உண்டோ ஒலி. (3)

பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. (4)

கல்லார் பலர் கூடிக் காதலித்து வாழினும் நூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ?—அல்லாரும்
எண்ணிலா வாண்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா வாமோ விளம்பு. (5)

நீதி வெண்பா மக்கட்கு நீதிகளைத் தெரிவிக்கும் வெண்பா என்ற ஒரு வகைப் பாட்டுக்களால் ஆகிய நூல். இதன் ஆசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை.

வினாக்கள்

1. குயில், கழுதை—இவற்றின் செயலை விளக்கி உபமேயத்தோடு பொருத்திக் காட்டுக.
2. கற்றவரை மற்றவரினின்றும் எவ்வாறு பிரித்தறியலாம்?
3. யார் சிலுசிலுப்பர்? அவர் எதைப் போன்றவர்?
4. பொன்கலம் யாருக்கு உவமை? எங்ஙனம்?
5. வருத்தினாலும் இயல்பு மாறாதவை யாவை? இவை போன்றவர் யார்?
6. கல்லார், நூல் வல்லார்—இவர்களுக்குக் காட்டப்பட்ட உவமையை விளக்கி வரைக.

3. திருவேங்கட சதகம்

மெய்யான புத்திபல சொல்லினும் தன்புத்தி
　　மேலாகி னோன் மூர்க்கனும்;
மிக்க பெரியோர்களைத் தாழ்வு செய்து அற்பர்தமை
　　மேன்மை செய்வோன் மூடனும்;
செய்யாத காரியம தெனினும் பிடித்தபிடி
　　செய்யு மவனே துஷ்டனும்;
திரளான நன்றிபல செய்தவர்க் கேயிடறு
　　செய்பவன்மா பாதகனும்;
ஐயா வெனப் பணிந் தாலுமே கோபமது
　　அடங்காத வன்குரூரன்;
அனுதினமும் தீமைபுரி வோனெந்த நாளிலும்
　　அடங்காதசண் டாளனும்;
மையார் தடஞ்சோலை திகழ்கின்ற களமூரில்
　　மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
　　வரத வேங்கட ராயனே.

4. அறப்பளீசுர சதகம்

அடைக்கல மெனத்தேடி வருவோர் தமைக் காக்கும்
அவனே மகா புருடனும்;
அஞ்சாமல் எதுவரினும் எதுபோகி னும்சித்தம்
அசைவிலான் மகா தீரனும்;
தொடுத் தொன்று சொன்னசொல் தப்பாது செய்கின்ற
தோன்றலே மகா ராஜனும்;
தூறிக்கலைக்கின்ற பேர்வார்த்தை கேளாத
துரையே மகாமேருவாம்;
அடுக்கின்ற பேர்க்குவரும் இடர்தீர்த்து ரட்சிக்கும்
அவனே மகா தியாகியாம்;
அவரவர் தராதர மறிந்துமரி யாதை செயும்
அவனே மகா உசிதனும்;
அடர்க்கின்ற முத்தலைச் சூலனே! லோலனே!
அமலனே! அருமை மதவேள்;
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அரப்பளீசுர தேவனே.

5. குமரேச சதகம்

நியாயநெறி தவருமல் உலகபரிபாலனம்
நடத்துமவனே யரசனும்;
இராச யோசனை தெரிந்து உறுதியாகிய செய்தி
நவிலு மவனே மந்திரி;
நேயமுடனே தன்சரீரத்தை எண்ணுத
நிர்வாகியே சூரனும்;
நிலைபெறும் இலக்கண இலக்கியம் அறிந்து சொலும்
நிபுணகவியே கவிஞனும்;

ஆயதொருவாகடம் தாதுவின் நிதானமும்
அறியு முதியோன் வைத்தியன் ;
அகமின்றி மெய்யுணர்ந்து ஐம்புலன் ஒழித்துவிட்ட
அவனே மெய்ஞ்ஞானி யெனலாம் ;
மாயவன் சகோதரி! மனோன்மணிக் கன்பான
வரபுத்ர வடிவேலவா !
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

6. திருக்குறள்

அகர முதல வெழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு. (1)

அறத்தினூங்கு ஆக்கமுமில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. (2)

மகன்தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்லென்னும் சொல். (3)

அன்பிலா ரெல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (4)

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டாற்பாற் றன்று. (5)

முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
இன்சொ லினதே அறம். (6)

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. (7)

சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொரு
கோடாமை சான்றோர்க் கணி. [பால் (8)

அடக்கம் அமரருள் உய்க்கும் ; அடங்காமை
ஆரிருள் உய்த்துவிடும். (9)

ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும். (10)

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. (11)

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு (12)

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். (13)

ஊருணி நீர் நிறைந் தற்றே யுலகவாம்
பேரறிவாளன் திரு. (14)

நல்லா றெனினும் கொளல்தீது ; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. (15)

புறந்தூய்மை நீரா னமையும் ; அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். (16)

தன்னைத் தான்காக்கின் சினங்காக்க ; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். (17)

சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். (18)

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு. (19)

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (20)

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (21)

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாம் தலை. (22)

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். (23)

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். (24)

உற்றநோய் நீக்கி உறுமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். (25)

நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு. (26)

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்தூக்கின்
உயிர்க்கிறுதி யாகிவிடும். (27)

பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல் வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. (28)

கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து. (29)

காக்கை கரவா கரைந்துண்ணும்; ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள. (30)

வானோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்
கோனோக்கி வாழும் குடி. (31)

வெள்ளத்தனைய மலர் நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத்தனைய துயர்வு. (32)

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். (33)

முயற்சி திருவினையாக்கும்; முயன்றின்மை
இன்மை புகுத்தி விடும். (34)

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு. (35)

ஈன்ருள் பசிகாண்பாளுயினும் செய்யற்க
சான்ரூேர் பழிக்கும் வினை. (36)

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களை வதாம் நட்பு. (37)

கனவினும் இன்னுது மன்ஞே வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. (38)

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. (39)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர். (40)

வினுக்கள்

1. ஆக்கமும் கேடும் எவை ?
2. மகனது கடமை யாது?
3. என்புமுரியர் பிறர்க்கு 'யார்' ஒரு உதாரணம் கொடு. (ததீசி முனிவர் இந்திரனுக்கு முதுகெலும்பைக் கொடுத்தது).
4. எது வேண்டற் பாற்றன்று ?
5. அறம் எதில் உள்ளது ?
6. சான்ரூேர்க்கு அணி யாது ?
7. அடக்கத்தின் சிறப்பு யாது ?
8. 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' ஏன் ? உதாரணம் தருக. (அரிச்சந்திரன் வரலாறு)
9. பொறுமையின் இலக்கணம் என்ன ?
10. 'தீயவை தீயினும் அஞ்சப்படும்'—ஏன் ? தீயைவிடத் தீயவை எவ்விதம் கொடியவை ?
11. பேரறிவாளன் திரு எதைப் போன்றது ?
12. சினம் யாது செய்யும் ?
13. மாசற்ருர் கோள் என்ன ?
14. மன்னர்க்கு இன்றியமையாத குணங்கள் எவை ?

15. கற்றலின் முறை, அதன் பயன்—இவை யாவை?
16. வாழும் உயிர்க்குக் கண் எது?
17. தலையான செல்வம் எது?
18. எல்லாம் உடையவர் யார்? இதை விளக்குக.
19. எரி முன்னர் வைத்தூறு போலக் கெடுவது எது?
20. யாரை நட்பாகக் கொள்ளல் வேண்டும்?
21. மாந்தர்க்கு அறிவு எதை யொக்கும்?
22. கூகை, காக்கை இவற்றைக் கொண்டு திருவள்ளுவர் விளக்கும் உண்மைகள் எவை?
23. கெடு நீரார் காமக்கலன்கள் எவை?
24. அமைச்சின் இலக்கணம் என்ன?
25. நட்பின் இயல்பு யாது?
26. யாருடைய தொடர்பு கொடிது?
27. தலைமயிர் யாருக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது?
28. உண்மையில் வாழ்பவர் யாவர்?

அரும்பதவுரை

நன்னெறி:

(1) நீக்கம் - பிரிவு; நொய்தாகும் - தாழ்ந்ததாகும்; பூக்குழலாய் - பூக்களை அணிந்த கூந்தலையுடைய பெண்ணே; புல்லினும் - சேர்ந்தாலும்; திண்மைநிலை - உறுதியான தன்மை. (2) கவர்ந்து - இழுத்து - வசப்படுத்தி; தடங்கரை - பெரியகரை; விளம்பு - சொல்லு. (3) இல்லானுக்கு - அன்பில்லாதவனுக்கு; மொழியிலார் - வாய்பேசாதவர் - ஊமைகள்; முதுநூல் - பழைமையான நூல்கள். (4) தீர்வுஉள்ளார் - நீங்குதலைப் பற்றி நினைக்க மாட்டார்கள்; தளர்ந்து - வருந்தி; விழுமியோர் - பெரியோர்; கறையிருள் - களங்கமாகிய இருட்டு. (5) இருநீர் வியனுலகம் - கரிய கடலால் சூழப்பட்ட பெரிய உலகம்; அதிர்வளையாய் - சத்தம் செய்கின்ற வளையல்களை அணிந்த பெண்ணே; அழல்கதிரால் - சுடுகின்ற கிரணங்களையுடைய சூரிய கிரணங்களால்; தண்ணென்கதிர் - குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரன். (5) எரியின் இழுது - நெருப்பிலிடப்பட்ட நெய் இழுது; தெரியிழாய் - ஆராய்ந்தெடுக்கப்பட்ட சிறந்த ஆபரணங்களை யணிந்த பெண்ணே;

மண்டுபிணி - உடம்பை வருத்தும் நோய்; கலுழும் - வருந்தியழும்; புனையா - அணியாத; மன்னும் - பொருந்திய; பொன்னே - இலக்குமி போன்றவளே. (7) கீழ் - இழிந்த குணமுடையவர்; மலர்ச்சேக்கை - பூக்களாலாகிய படுக்கை; செழும் பொழில் வாய் - செழித்த சோலையினிடத்தில் (9) கைம்மாறு - பிரதியுபகாரம்; இயலுதவி - இயன்ற உதவி; எயிறு - பல்; முதிர்சுவை - மிகுந்த சுவை. (10) தாக்கும் பிறர் துயரம் - மற்றவர் தாக்குதலாலுண்டாகும் பிறருடைய துன்பங்களை; நேரிழாய் - நல்ல ஆபரணங்களை யணிந்த பெண்ணே; கடிது - சீக்கிரத்தில்.

நீதி வெண்பா:

(1) சகம் - உலகம் (உலகத்திலுள்ள மக்கள்); நன்மொழியை ஓது குயில் - இனிமையாகக் கூவும் குயில்; கர்த்தபம் - கழுதை; அபராதம் - குற்றம். (2) மன்னு தொழில் - நிலைபெற்ற தொழில்; வினை வேறுபட்டவர்பால் - நற்செய்கை இல்லாதவர்களிடம்; மேவும் - பொருந்தும்; அனமே - அன்னப் பறவை போன்றவளே; வான்பொருளும் ஒன்றே - சொல்லால் குறிக்கப்பட்ட பொருளும் ஒன்றேயாம்; கனம் ஒன்று மேலவர் தங்கள் - மேன்மை பொருந்திய பெரியோர்களிடத்தில். (3) வாக்கு நயம் - இனிமையான பேச்சு; ஆக்கை நயம் - உடல் அழகு; மற்றவரை - கல்லாதவரை; நீடு இசையால் - நீண்ட இனிய ஓசையால்; கோலத்து அறிவருமோ - நிறமாகிய வேடத்தால் வேறாக அறிய இயலுமோ? (4) சிற்றுணர்வோர் - கல்வியறிவிற் குறைந்தவர்; சிலுசிலுப்பார் - மிகவும் தெரிந்தவர் போலப் பலபடப் பேசுவார்கள்; முற்றுணர்வோர் - கல்வியை நிரம்பக் கற்றவர்; விரிபசும்பொன் ஒண் கலம் - ஒளி வீசுகிற பசுமையான பொன்னுலாகிய ஒளி பொருந்திய பாத்திரம். (5) புகழ்பால் - யாவரும் புகழும் பால்; சின்னம்பட - உடல் நொறுங்கும்படி; நலிந்தாலும் - வறுமையால் துன்பமடைந்தாலும்.

திருவேங்கட சதகம்:

மூர்க்கன் - பிறர் சொற் கேளாதவன்; அற்பர் - கீழோர்; காரியமது எனினும் - செய்கை என்றாலும்; இடறு - துன்பம்;

மாபாதகன் - பெரிய பாவம் செய்பவன்; குரூரன் - கொடுமை செய்பவன்; சண்டாளன் - இழிந்தவன்; மையார் தடஞ் சோலை - மேகங்கள் கவிந்துள்ள பெரிய சோலை; களமூர் - ஓரூர்.

அறப்பளீசுர சதகம் :

சித்தம் அசைவிலான் - மனம் கலங்காதவன்; மகா தீரன் - மிகுந்த தைரியமுள்ளவன்; தொடுத் தொன்று - ஒன்றைத் தொடுத்து - ஒன்றை எடுத்துச் சொல்ல ஏற்பட்டு; தூறி - பழிச் சொற்களைச் சொல்லி; மகா மேரு - மேரு போல் உயர்ந்தவன்; அடுக்கின்ற - தன்னை வந்து அடைகின்ற; தியாகி - தன்னைப் பிறருக்கு அளிப்பவன்; தராதரம் - உயர்வு தாழ்வு; உசிதன் - பொருத்தமானகாரியம் செய்பவன்; அடர்க்கின்ற - போர் செய்கின்ற; லோலன் - இன்ப விளையாட்டை யுடையவன்; அமலன் - தூய்மையுடையவன்; நினைதரு - நினைக்கின்ற.

குமரேச சதகம் :

நவிலுமவன் - சொல்லுபவன்; நிர்வாகி - செய்பவன்; நிபுணகவி - சிறந்த கல்வியறிவையுடைய கவி; கவி - பாடலியற்றுவோன்; வாகடம் - வைத்திய நூல்; நிதானம் - நிலை; முதியோன் - வயது சென்றவன்; அகமின்றி - நான் எனப்படும் ஆணவம் இல்லாமல்; ஐம்புலன் - மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் உறுப்புக்கள்; மாயவன் - திருமால்; மனோன்மணி - பார்வதி; புல்வயல் - ஒரு புண்ணிய க்ஷேத்திரம்; நீடுமலை - நீண்ட மலை.

திருக்குறள் :

(1) முதல - முதலாக உடையன; ஆதி பகவன் - கடவுள்; முதற்று - முதலாகவுடையது. (2) அறத்தினூங்கு - தருமத்தைக் காட்டிலும்; ஆக்கம் - உயர்வு. (3) ஆற்றும் - செய்கின்ற; அவையத்து - சபையில்; இருப்ப - இருக்குமாறு. (4) எல்லாம் தமக்கு உரியர் - எல்லாவற்றையும் தமக்கு உரியனவாக எண்ணுபவர்; என்பும் - உடலும். (5) விருந்து

புறத்ததுஆ - விருந்தினர் வெளியில் இருப்பவர்களாக ஆக; **சாவா மருந்து** - அமிர்தம்; **வேண்டற்பாற்று அன்று** - விரும்புதலுக்கு உரியது அல்ல. (6) **அமர்ந்து** - விரும்பி; **அகத்தான்ஆம்** - மனத்தால் விரும்பிச் சொல்லப்படுகிற; **இன் சொல்லினது** - இனிய சொல்லையுடையது. (7) **நன்றி** - ஒருவர் செய்த நன்மை; **நன்றல்லது** - ஒருவர் செய்த தீமை; **அன்றே** - செய்த அப்பொழுதே. (8) **கோல்** - துலாக்கோல் - தராசு; **ஒரு பால் கோடாமை** - ஒரு பக்கத்தில் சாயாமலிருத்தல்; **அணி** - அழகு. (9) **அமரருள்** - தேவருக்குள்; **உய்க்கும்** - கொண்டுபோய்ச் சேர்க்கும்; **ஆர்இருள்** - நரகம். (10) **ஒழுக்கம்** - நல்லொழுக்கம்; **விழுப்பம்** - மேன்மை; **ஓம்பப்படும்** - பாதுகாக்கப்படும். (11) **அகழ்வாரை** - தோண்டுகின்றவர்களை; **இகழ்வார்ப் பொறுத்தல்** - இகழுகிறவர்களைப் பொறுத்துக் கொள்ளுதல்; **தலை** - உயர்ந்த நடக்கை. (12) **ஏதிலார்** - பகைவர்; **காண்கிற்பின்** - அறியவல்லவன் ஆனால்; **மன்னும் உயிர்** - உலகில் நிலைபெற்ற உயிர். (13) **பயத்தலால்** - கொடுக்கின்றபடியால்; **தீயினும்** - நெருப்பைக் காட்டிலும். (14) **ஊருணி** - ஊர் நடுவிலுள்ள குளம்; **உலகு அவாம்** - உலக நன்மையை விரும்புகிற; **திரு** - செல்வம். (15) **நல்லாறு** - நல்லவழி; **கொளல்** - ஒன்றைப் பிறரிடமிருந்து பெறுதல்; **மேலுலகம்** - சுவர்க்கம். (16) **புறந்தூய்மை** - உடலின் வெளிப்புறச் சுத்தம்; **அமையும்** - ஏற்படும்; **அகந்தூய்மை** - மனப் பரிசுத்தம்; **வாய்மை** - உண்மை. (17) **காக்கின்** - காத்துக்கொள்ள வேண்டுமானால்; **சினங்காக்க** - கோபம் தன்னை அடையாமல் காத்துக்கொள்க. (18) **சிறப்பு** - மேன்மை; **இன்னா** - துன்பம்; **மாசற்றார்** - குற்றமற்றவர்; **கோள்** - கொள்கை. (19) **தூங்காமை** - சோம்பல் இல்லாமை; **நிலனாள்பவர்** - உலகத்தை ஆளும் அரசர். (20) **கசடு அற** - குற்றம் நீங்க; **நிற்க** - நல்லநடக்கை தவறாமல் இருங்கள். (21) **எண்** - கணக்கு; **எழுத்து** - இலக்கண இலக்கிய நூல்கள்; **என்ப** - என்று சொல்லுவார்கள். (22) **செல்வத்துள் செல்வம்** - செல்வங்களுக்குள் உயர்ந்த செல்வம்; **செவிச் செல்வம்**- கேள்வி ஞானம். (23) **என்னுடையரேனும்** - எப்படிப்பட்ட உயர்ந்த பொருள்களைப் பெற்றிருப்பாராலும். (23) **வருமுன்**

னர்க் காவாதான் - துன்பம் வருவதற்கு முன்னேயே காப்பாற்றிக் கொள்ளாதவன்; எரிமுன்னர் வைத்தூறுபோல - நெருப்பில் அகப்பட்ட வைக்கோலைப்போல. (25) உற்ற - வந்தடைந்த; உறுமை - பின்னும் வந்து சேராமல்; பெற்றியார் - குணமுடையவர்களை; பேணிக்கொளல் - விரும்பி நட்பினராகக் கொள்க. (26) அற்று ஆகும் - அத்தன்மையை உடையது ஆகும்; இனத்து இயல்பது ஆகும் - தாம் சேர்ந்த நண்பரது குணங்களுக்கு ஒத்தது ஆகும். (27) நுனிக்கொம்பர் - மரத்தின் நுனியிலுள்ள சிறு கிளை; ஊக்கின் - மேலே செல்ல முற்பட்டால்; இறுதி - முடிவு. (28) கூகை - கோட்டான்; இகல் - போர். (29) கால் வல் நெடும் தேர் - காற்றைப்போல வேகமாகச் செல்லுகிற வலிய தேர்; நாவாய் - படகு. (30) கரவா - தன்னிடம் உள்ளதை ஒளிக்காமல்; கரைந்து - பிற காக்கைகள் வருமாறு கூவி; ஆக்கம் - செல்வங்கள்; அன்ன நீரார் - அப்படிப்பட்ட தன்மையுடையவர். (31) வான் - மழை; கோல் - செங்கோல் - நல்லரசாட்சி; குடி - குடி மக்கள். (32) உள்ளத்து அனையது - முயற்சிக்கு ஏற்ப அமைந்தது. (33) நெடுநீர் - காலந் தாழ்த்துதல்; மறவி - மறந்துபோதல்; மடி - சோம்பல்; கெடு நீரார் - கெடுகின்ற தன்மையுடையவர்கள்; காமக்கலன் - விரும்பியணியும் ஆபரணங்கள். (34) திருவினை - செல்வத்தை; இன்மை - வறுமை; முயன்றின்மை - முயற்சி இல்லாமலிருத்தல். (35) அருவினை - பிறரால் செய்வதற்கு அருமையான காரியம்; மாண்டது - மாட்சிமைப்பட்டது (மேம்பட்டது); அமைச்சு - மந்திரி. (36) ஈன்றாள் - தாய்; செய்யற்க - செய்யவேண்டாம்; வினை - செய்கை. (37) உடுக்கை - உடுத்துள்ள வஸ்திரம்; இடுக்கண் - துன்பம் (நட்பினர் துன்பம்). (38) மன், ஓ - அசைகள்; வினைவேறு சொல் வேறுபட்டார் தொடர்பு - செயல் வேறாகவும் சொல்வது வேறாகவும் உள்ளவர்களுடைய சிநேகம். (39) நிலையின் இழிந்தக்கடை - தமது உயர்ந்த நிலையிலிருந்து தவறிவிட்ட காலத்தில். (40) வாழ்வார் - நல்வாழ்வு வாழ்கின்றவர்; தொழுது உண்டு பின் செல்பவர் - பிறரை வணங்கி யாசித்துப் பிழைத்து அவர் பின்னாலேயே செல்கின்றவர்கள் ஆவர்.

III. கதை

புல்லின் சுய சரிதை

பசும்புல் என் பெயர் ; பட்ட பாடெலாம்
ஒரு பெருங் கதையாம் ; உரைப்பதும் எளிதோ ?
விரிவிடம் படுமொரு வீட்டின் முன்றிலில்
வளர்ந்தேன் ; அங்குள மனிதரோ கொடியர் !

....

வாயிற் படியில் வாடி வணங்கி
வயிற்றிற் கின்றிநா வறண்டு தண்ணீர் !
தண்ணீர் ! என்று தவித்துத் தவித்து
வாணு ளெல்லாம் வருந்தி நொந்தேன் ;
விண்ணி லிருப்பினும் மண்ணில் யான்படும்
வருத்தமும் வாட்டமும் கண்டவ் வானம்
அளித்தது அமுதம் ; ஆர வுண்டனன் ;

....

கேளீர் கதைஇனும் ! கிடைத்த நீரை
அருந்திப் பலநாள் அயர்வும் நீங்கித்
தெளிந்து நிமிர்ந்தேன் ; சிறிதென் உடலில்
பச்சையும் பிடித்தது ; பார்த்தனர் பாவிகள்
தரிக்கிலர் உள்ளம் ; தழைத்திடும் தலையைக்
காலால் மிதித்தனர் ; கழுத்தையும் அறுத்தனர் ;
ஆட்டையும் மாட்டையும் அடித்து மேய்த்தனர்

....

உயிரும் உடலும் குறுகி ஒருசிறு
வேராய்த் தரையுள் வெகு நாளாக
ஒளித்திருந் தேன்,அவ் வுறைவிடம் தேடி
வான்மழைத் தோழன் வந்தெனைக் கண்டு,

....

என்துணை யிருக்க இடருனக் குண்டோ ?

N53 31486 -600 008.

அறிவிலி போலும்நீ அஞ்சேல்! அஞ்சேல்!
யாரையும் காப்பவன் ஈசன்! என்றெலாம்
தேற்றிய மொழியெனக்கு ஊற்றமும் உறுதியும்
பெரிதும் அளித்தது; பெயர்த்தும் மெல்லெனத்
தலையெடுத் தேன்; அதைத் தறுகணர் கண்டு
பிடித்தனர்! வெட்டினர்! பிடுங்கி எறிந்தனர்!
சாணியைக் கரைத்துத் தலையில் கொட்டினர்!
துடைப்பங் கொண்டு துரத்தி யடித்தனர்!

....

தளர்ச்சி யுற்றிலேன்! தகும்நற் காலம்
வருமெனச் சற்று மறைந்து தங்கினேன்;

....

ஒருநாள் வீட்டில் உள்ளோர் அனைவரும்
உறவினர் இருக்கும் ஓரூர் சென்றனர்.
வெகுநா ளாகியும் மீண்டிலர்; யானும்
இதுவே தருணம் என்று நினைத்து
விரைவில் வளர்ந்து விரும்பிய படியெலாம்
தழைத்துச் செழித்துச் சார்விட மெங்கும்
படர்ந்து பற்றிப் பலகிளை யாகி
வாய்த்த இவ்வித்தாம் மக்களைப் பெற்று
வாழ்ந்திருக் கின்றேன்: மற்றவர் வாழும்
வீட்டையும் இடித்து விடும்வலி இந்நாள்
எனக்குண் டாயினும் இழிவென விடுத்தேன்.

....

பொறுத்தவர் என்றும் பூமி யாள்வார்!
புல்லே யாயினும் புல்லிய குணமிலை!
அற்பர் இகழினும் அறிவால் பொறுப்பேன்!
தலையில் மிதிப்பினும் தயவால் சகிப்பேன்!
முயற்சி கைவிடேன்! முயற்சி கைவிடாத்

50 திறமுடை யோரைத் திருமகள்
பெரிதும் உவந்து பேணமுன் நிற்குமே!

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

வினாக்கள்

1. புல் மனிதரைக் காடியர் என்று கூறுவதேன்?
2. வான்மழைத் தோழன் கூறியதென்ன?
3. புல் எத்தகைய வலிவை பெற்றது? எப்பொழுது?
4. புல்லினிடமிருந்து அறியவேண்டிய நீதிகள் எவை?

அருஞ்பதவுரை

(1) பட்டபாடு - அடைந்த துன்பம்; (3) விரிவு இடம் - விசாலமான இடம்; முன்றில் - வீட்டின் முன் பக்கம்; (7) தவித்து - மிகவும் வருந்தி; (8) வாணாள் - உலகில் வாழ்ந்த நாள்; (9) விண்ணில் - ஆகாயத்தில்; (10) வாட்டம் - சோர்வு; வானம் - மழை; (11) அமுதம் - உணவு; ஆர - நிறைய; (13) அயர்வு - தளர்ச்சி; (16) தரிக்கிலர் - பொறுக்கவில்லை; (21) உறைவிடம் - வசிக்குமிடம்; (23) துணை - உதவி; இடர் - துன்பம்; (24) அறிவிலி - புத்தியில்லாதவன்; (26) ஊற்றம் - வலிமை; (27) பெயர்த்தும் - மறுபடியும்; (28) தறுகணர் - கொடியவர்; (32) உற்றிலேன் - நான் அடையவில்லை (36) மீண்டிலர் - திரும்பி வரவில்லை; (39) சார்வு இடம் - பச்சத்திலுள்ள இடம்; (43) வலி - வலிமை - பலம்; (44) விடுத்தேன் - விட்டுவிட்டேன்; (46) புல்லிய - இழிந்த; (47) அற்பர் - இழிந்த குணம் உடையவர்; (50) திறம் - மனவுறுதி; (51) உவந்துபேண - விரும்பிக் காப்பாற்ற.

IV பலதுறைப் பாடல்கள்

சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்;—நித்தம்
நடையும் நடைப்பழக்கம்; நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம். (1)

—ஔவையார்

சங்கரற்கு மாறுதலை; சண்முகற்கு மாறுதலை;
ஐங்கரற்கு மாறுதலை யானதே;—சங்கைப்
பிடித்தோர்க்கு மாறுதலை; பித்தா நின்பாதம்
படிந்தோர்க்கும் ஆறுதலை பார். (2)

—காளமேகப் புலவர்

தேங்குபுக ழாங்கூர்ச் சிவனேயல்லாளியப்பா
நாங்கள் பசித்திருக்க ஞாயமோ?—போங்காணும்!
கூறு சங்கு தோல்முரசு கொட்டோசை அல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்! (3)

—இரட்டையர்கள்

கல்லாத ஒருவனைநான் கற்றாய் என்றேன்;
காடெறியும் மறவனை நாடாள்வாய் என்றேன்;
பொல்லாத ஒருவனை நான் நல்லாய் என்றேன்;
போர்முகத்தை அறியானைப் புலியே றென்றேன்;
மல்லாரும் புயமென்றேன் சூம்பல் தோளை;
வழங்காத கையனைநான் வள்ளல் என்றேன்;
இல்லாது சொன்னேனுக் கில்லை யென்றான்;
யானுமென் குற்றத்தால் ஏகுகின் றேனே! (4)

—இராமச்சந்திரக் கவிராயர்

அரும்பதவுரை

(1) **நாப்பழக்கம்** - நாவால் பாடும்பழக்கம்; **நித்தம்** - தினந்தோறும்; **தயை** - இரக்கம்; **பிறவிக் குணம்** - பிறப்பிலேயே உண்டாகும் குணம். (2) **சங்கரற்கும் ஆறுதலை** - சிவனுக்குக் கங்கையாறு தலையில் உள்ளது; **சண்முகற்கும் ஆறுதலை** - முருகக் கடவுளுக்கும் ஆறுதலைகள்; **ஐங்கரற்கு மாறுதலை** - விநாயகருக்கு மனிதத் தலைக்குமாறான யானைத்தலை; **சங்கைப் பிடித்தார்க்கும் மாறுதலை** - திருமாலுக்கும் மனிதத்தலையின் வேறு பட்ட சிங்கம், பன்றி முதலியவற்றின் தலைகள் உண்டு; **பாதம் படிந்தோர்க்கும் ஆறுதலை** - வணங்கியவர்களுக்கும் ஆறுதல் இருப்பதை. (3) **ஆங்கூர்** - ஒரு புண்ணிய க்ஷேத்திரம்; **அல்லாளியப்பர்** என்பது அந்த க்ஷேத்திரத்திலுள்ள கடவுளின் பெயர்; **கொட்டு ஓசை** - முழக்குகின்ற சத்தம்; **மூளி** - வெட்கம் கெட்டவன். (4) **காடு எறியும் மறவன்** - காட்டில் மிருகங்களை வேட்டையாடும் வேடன்; **புலியேறு** - ஆண்புலி; **மல் ஆரும்** - வலிமைபொருந்திய; **சூம்பல் தோள்** - குறுகிய தோள்; **இல்லாது** - இல்லாதது; **ஏகுகின்றேன்** - போகின்றேன்.

13
031(6)N53

வினாக்கள்

1. பழக்கத்தினால் வருபவை எவை? பிறவிக் குணங்கள் யாவை?
2. 'ஆறுதலை' என்ற சொல் எவ்வாறெல்லாம் பொருள் படுகிறது?
3. இரட்டையர் பாடலின் பொருள் என்ன?
4. இராமச்சந்திரக் கவிராயர் தன் குற்றம் எனக் குறிப்பிடுவன யாவை?

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் ★ சென்னை-600 008 ★
131486

RSR
1173

PUDUMAI TAMIL VACHAKAM

FOR

FORM I—GENERAL STUDY

AUTHOR

VIDWAN V. MANICKAM

T. G. GOPAUL PILLAI

PUBLISHERS

TEPPAKULAM | 2/27, BROADWAY
TIRUCHIRAPALLI | G. T. MADRAS

Copyright] [*Price Re.* 0–12–0